janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 நவம்பர் 06 - நவம்பர் 12 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 31




வெறுத்து ஒதுக்கும் நிலை தொடர்கின்றன! ப 02



மானுட அறம் நவம்பர் புரட்சி! ப 03



ஆளுநராயினும் நா காக்க! ப 5



## நவம்பர் 7 புரட்சி தினம்:

# வகுப்புவாத சக்திகளை முறியடித்து சமூக நல்லிணக்கத்தை நிலைநாட்டுவோம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ருஷ்யாவில் விளாத்திமிர் இலியச் லெனின் தலைமையில் நடந்த போல்ஷிவிக் புரட்சி 1917 நவம்பர் 7 ஆம் தேதி மாபெரும் வெற்றி பெற்றது. தொழிலாளர், விவசாயிகள், படைவீரர்கள் ஒருங்கிணைந்து சோவியத் முறை அமைப்புகளை உருவாக்கி புரட்சியை முன்னெடுத்து மாபெரும் வெற்றி கண்டனர்.

சமத்துவ நெறி சார்ந்த சமூக புரட்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்த கவி பாரதி "ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி" என வாழ்த்துக் கூறி வரவேற்றார்.

ருஷ்யா புரட்சியின் தாக்கத்தால் உலகில் விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்து இந்தியா உட்பட பல நாடுகள் விடுதலை பெற்றன. அணிசேரா நாடுகள் உருவாகி, சமாதான இயக்கம் வலிமை பெற்றது.

உலகை அச்சுறுத்திய சர்வாதிகார, பாசிச சக்திகளை எதிர்கொண்டு, முறியடித்த சோவியத் மக்கள் மற்றும் செஞ்சேனையின் தன்னிகரில்லா தியாகத்தை வரலாறு என்றென்றும் நினைவு கொள்ளும்.

சோவியத் ஆட்சியின் வீழ்ச்சியும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் நாட்டை நேட்டோ கூட்டணி பிடிக்குள் அழுத்தும் அமெரிக்காவின் ஆதிக்கக் கொள்கையும், அதனை எதிர்த்து ருஷ்யா நடத்தும் தாக்குதலும் உலகில் யுத்த பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

நமது தாய்த்திரு நாட்டில் நிதி மூலதன சக்திகளின் ஆதரவோடு, வகுப்புவாத, மதவெறி, வலதுசாரி சத்திகள் அதிகாரத்தை கைப்பற்றி எட்டாண்டுகள் ஆகின்றன.

மதச்சார்பற்ற பண்புகளை அடித்தளமாகக் கொண்டதும், வேற்றுமையில் ஒற்றுமை பேணும் அணுகுமுறை கொண்டதுமான அரசியல் அமைப்புச் சட்டம் அன்றாடம் சிறுமைப்படுத்தப்படுகிறது.

மாநிலங்கள் இணைந்த ஒன்றியம் இந்தியா என்பதை நிராகரித்து, மாநில உரிமைகளை பறித்து, அதிகாரங்கள் குவித்த வரும், எதேச்சதிகார நடைமுறைகள் தீவிரமாகியுள்ளன.

மதவெறி சக்திகளால் தனிநபர் மையப்பட்ட, சர்வாதிகார, பாசிச முறைக்கு நாடு திட்டமிட்டு தள்ளப்பட்டு வருகிறது. இதற்கான முறையில் மக்களின் சமய நம்பிக்கைகளை மதவெறியாக்கும் சனாதான கருத்துக்கள் அதிகார மையங்களின் செயல்முறை ஆகியுள்ளன.

இதனால் சமூக அமைதிக்கு பேராபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் நாட்டின் அமைதி, சமூக நல்லிணக்கம் நிலைநாட்டப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது அகில இந்திய மாநாடு உணர்த்தியுள்ளது. இதனை ஏற்று, மதவெறி, சாதிவெறி, சனாதானா சக்திகளை முறியடித்த மக்கள் ஒன்றுபட்டு செயற்படவும், போராடவும் உறுதி ஏற்கும் வகையில் வரும் 07.11.2022 ஆம் தேதி நவம்பர் புரட்சி தினத்தில், வகுப்புவாத சக்திகளை முறியடித்து, சமூக நல்லிணக்கத்தை நிலைநாட்டவும் கட்சி முடிவுகளை முன்னெடுத்து நிறைவேற்றவும் உறுதி ஏற்கும் நாளாக கடைப்பிடிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கட்சி அமைப்புகளைக் கேட்டுக் கொள்கிறது.

கட்சியின் மாவட்டக் குழுக்கள், இடைக்குழுகள் மற்றும் கிளை அமைப்புகள் பொதுமக்களை திராளாக பங்கேற்க வைத்து, வகுப்புவாத சக்திகளை முறியடித்து, சமூக நல்லிணக்கத்தை நிலைநாட்ட உறுதி ஏற்பு நிகழ்வுகளை விரிவான அளவில் நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

நவம்பர் புரட்சி தின வாழ்த்துக்களுடன்...

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



# ஏஐடியூசி 103 வது அமைப்பு தினம்
# தோழர் குருதாஸ் தாஸ் குப்தா நினைவு தினம்

இந்தியாவில் முதல் தொழிற்சங்கமான ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் 103 வது ஆண்டு அமைப்பு நாள் நிகழ்ச்சி அக்.31 அன்று தமிழகம் முழுவதும் கொடியேற்றி கொண்டாடப்பட்டது. மேலும் தோழர் குருதாஸ் தாஸ் குப்தா நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டது.

**சென்னை:** சென்னை ஏஐடியூசி அலுவலகத்தில் ஏஐடியூசி 103வது அமைப்பு தினம் மற்றும் தோழர் குருதாஸ்தாஸ் குப்தா நினைவு தினம் மாநிலப் பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீ குமார் (பாதுகாப்புத் துறை ஊழியர்கள் சம்மேளனம்), அருணாசலம் (அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்), டாக்டர் ஏ.ஆர்.சாந்தி (உழைக்கும் பெண்கள் அமைப்பு கன்வீனர்) மற்றும் சவரிமுத்து (பொது காப்பீடு நிறுவனம்) ஆகியோர் ஏஐடியூசி வரலாறு பற்றியும், தோழர் குருதாஸ் தாஸ் குப்தாவின் ஆளுமை பற்றியும் பேசினர். ஆ.பாஸ்கர் நன்றி கூறினார்.

ஏஐடியூசி தொழிற் சங்கத்தைச் சார்ந்த ஆட்டோ ஓட்டுநர் தட்சிணாமூர்த்தி தனது ஆட்டோவில் பயணித்த ஒருவர் தவறவிட்ட




நகைப்பையை தேடிக் கண்டுபிடித்து அவரிடம் ஒப்படைத்தமைக்காக அவருக்கு டி.எம்.மூர்த்தி பயனாடை அணிவித்து கவுரவித்தார்.

'நன்றுகருது' சார்பில் இதற்கான ஏற்பாட்டினைச் செய்த ஆர்.கேவும் அவருக்கு சீருடை மற்றும் பரிசுப் பொருள் தந்து கவுரவித்தார்.

**தருமபுரி:** தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்டக்குழு சார்பில் ஏஐடியூசி தொழிற்சங்க அமைப்பு தின கொடிஏற்று விழா பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன் தலைமை வகித்தார். கட்டுமான சங்க மாவட்ட தலைவர் குழந்தைவேலு, நிர்வாகிகள் பார்த்தீபன், விஜயா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணை தலைவர் ஆர்.சுதர்சனன் கொடி ஏற்றினார். சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாநிலக்குழு உறுப்பினர்கள் கா.சி.தமிழ்க்குமரன், எஸ்.சின்னசாமி, ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட துணை செயலாளர் ஆர்.நடராஜன், மாவட்ட பொருளாளர் முருகன், கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் ஏ.சி.மணி, போக்குவரத்து கழக மாநில துணை தலைவர் ரவி, மாவட்ட செயலாளர் நாகராசன், என்எப்டிஇ முன்னாள் மாநில அமைப்பு செயலாளர் சி.முனியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# வெறுத்து ஒதுக்கும் நிலை தொடர்கின்றன!





பேரன்புமிக்க தோழர்களே!

**வகுப்புவாத பேரபாயம் குறித்து நாம் தொடர்ந்து பேசி வருகின்றோம். அது பேரழிவு ஏற்படுத்தும் நிகழ்வுகளை பார்த்து வருகிறோம். நாம் மட்டுமல்ல, ஒட்டு மொத்த நாடும் பேசிக் கொண்டிருக்கிறது. நீதி பரிபாலன முறையில்... நாட்டின் மிக உயர்ந்த, அமைப்பான உச்சநீதிமன்றம் தனது குரலை உயர்த்தி, கோபத்தை வெளிப்படுத்தியுள்ளது.**

ஏனெனில் வகுப்புவாதம் என்பது, தனிப்பட்ட நபர்கள் தொடர்பு கொண்டதோ அல்லது ஏதோவொரு அரசியல் கட்சிக்கு தொடர்புள்ள பிரச்சனையல்ல. அது சமூகத்தின் ஒட்டுமொத்த நலனை பாதிப்பது. நாட்டு நலனுக்கும், மக்கள் நல்வாழ்வுக்கும் கேடு விளைவிப்பதாகும்.

நாடு பற்றியோ, மக்கள் நலன் குறித்தோ கவலை கொள்ளாதவர்கள் தங்களுடைய சொந்த நலனுக்கும், அவர் சார்ந்து நிற்கும் கட்சியின் நலனுக்கும் மட்டுமே முக்கியத்துவம் தந்து செயல்படுகிறார்கள். இவர்களது எண்ணம் மிக, மிக குறுகிய பார்வை கொண்டது.

இவர்களது செயல்பாடுகள் நாட்டு நலனுக்கு, ஒற்றுமைக்கு, ஒருமைப்பாட்டிற்கு எதிரானதாகவே அமைந்திருக்கிறது. அது மட்டுமின்றி மனித உயிர்களை மலிவாக எண்ணி அழித்தொழிக்கும் அபாயகரமாக செயல்படுகிறது.

வகுப்புவாதம், மதவெறி, சாதிய வெறி போன்ற கேடு விளைவிக்கும் வெறித்தனம் என்பது மனித உணர்வில் எளிதில் பற்றிக் கொள்ளும் கொடிய தீ.

சமூக அமைதியை சீர்குலைக்கும் மதவெறித் தீ வைப்பது எளிது, அதற்கு அறிவாளிகள் தேவையில்லை; மூடத்தனம் போதுமானது. முட்டாள்களால் மூட்டப்பட்ட தீயை அணைப்பது மிக, மிகக் கடினமானது. அந்த சமூக அழிவுத் தீயை அணைக்க அறிவாளிகள் சேர்ந்து செயல்பட்டாலும் எளிதில் அணைக்க முடிவதில்லை.

வகுப்புவாத பேரபாயம் பல அவதாரம் எடுத்து வருகின்றது. பல முகங்களை காட்டிச் செயல்படுகின்றது. ஒவ்வொன்றும் தான் செய்யும் செயலை நியாயப்படுத்துகின்றது.

எந்தவொரு சமய வழிமுறைகளை பின்பற்றி வாழ்பவர்களுக்கும், அவரவர் மதம், சமய நெறிகள் புனிதமானது, பெரியது என்று கருதுவது இயல்பானது. ஆனால் , சமூக வாழ்வில் நீடித்து வரும் பிற மதங்களைக் காட்டிலும் தான் விரும்புகிற, ஏற்றுக் கொண்டுள்ள மதத்திற்கு வேறு எந்தவொரு சமயநெறியும், மதமும் ஈடு இணையாகாது என்று போற்றி புகழ்ந்து கொள்ளக் கூட உரிமையுண்டு.

ஆனால் பிற மதத்தை இழிவுபடுத்தவோ, பிற சமய நெறிகளை பின்பற்றுபவர்களை இழிவுபடுத்தவோ ஒரு துளியும் உரிமையில்லை. ஆனால், இன்று நமது நாட்டில் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கை நெறியை மதவெறியாக்கும் செயல்கள் நடந்து வருகின்றன. இன்று நேற்றல்ல, ஆர்.எஸ்.எஸ். என்ற ராஷ்டிரிய சுயம் சேவக் அமைப்பு தோன்றிய காலம் தொட்டு, செய்து வருகின்றனர்.

மதத்தை வழிபடுவோர், அதன் மீது, அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை பிறர் ஏற்க வேண்டும் எனக் கூறுவதும், கட்டாயப்படுத்துவதும் எவ்வாறு ஏற்க இயலும்.

ஏற்க இயலாது, கூடாது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். ஆனால், நாட்டை ஒரு மதம் சார்ந்த நாடாக மாற்றியமைக்கும் முயற்சியில், மதவெறிச் செயலில் திரும்ப, திரும்ப ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களின் கருத்தை வலுப்படுத்திட வேண்டும் என்பதற்காக, சமூக அமைதியை சீர்குலைக்கும் வன்முறைக்கும், கலவரத்துக்கும் விதை விதைக்கின்றனர்.

சமூக சீர்குலைவுச் சதிச் செயல்களையும், வன்முறை நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தி, வாதம் புரியும் புதிய போக்கும் வெளிப்பட்டு வருகின்றது.

இத்தகைய வன்முறையாளர்கள் சமூகத்திலிருந்து முற்றாக புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள். மதம் என்கிற போர்வைக்குள் புகுந்து கொண்டு, தங்களையும், தாங்கள் மேற்கொண்டு வரும் அருவருக்கத்தக்க வன்முறைகளையும் மறைத்துக் கொள்கிறார்கள்.

இத்தகைய வன்முறையாளர்கள் குறிப்பிட்ட ஒரு மதம் என்றல்ல, ஒரு கடவுள் என்றல்ல அனைத்து மதங்களையும், அனைத்து கடவுள்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

பயங்கரவாத வன்முறை என்பது ஒருசாரருக்கு, ஒரு மதத்திற்கு, ஒரு கடவுளுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அதனை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் அவ்வாறுதான் பயன்படுத்தி வருகின்றார்கள்.

கிறித்துவ தேவாலயம் சென்று வருபவர்கள், பள்ளிவாசல் சென்று தொழுகையில் பங்கேற்பவர்கள், சிவனையோ, பிரம்மாவையோ வணங்குபவர்கள் என்று எந்த வேறுபாடும் இல்லாது பயங்கரவாதம் ஊடுருவியுள்ளது.

அது எத்தகைய வடிவில் வரும் பயங்கர வாதம் ஆனாலும் அதனை முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும்.

அது இந்து பயங்கர வாதமா? இஸ்லாம் பயங்ரவாதமா? கிறிஸ்து பயங்கரவாதமா? என்று வேறுபடுத்தி பார்க்கத் தேவையில்லை. அனைத்து வகையான பயங்கரவாதச் செயல்களையும் நிராகரிக்க வேண்டும்.

மனித சிந்தனையில் சகல ஆசைகளையும் துறந்து, துறவு நிலைக்கு செல்லும் புத்த மதத்தை பின்பற்றுபவர்கள் கூட, புத்த பெருமானின் பெயரால், இலங்கையில் நடத்திய அரச பயங்கரவாதச் செயலை, ஒரு இன மக்களை அழித்தொழிக்கும் செயலை மனித வரலாறு மறந்துவிடாது.

இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட பேரினவாத தாக்குதலை எளிதில மறந்து விட முடியுமா?

பயங்கரவாதச் செயலால் நல்லது என்று ஒன்றும் இல்லை. அது எத்தகைய பயங்கரவாதம் ஆயினும் அது நெருப்புதான், சுடத்தான் செய்யும்.

நெருப்பு என்று தெரிந்தும் அழிவைத் தரக்கூடியது என்று அறிந்தும் பல அமைப்புகள் அதனை ஆயுதமாகப் பயன்படுத்தி வன்முறைகளில் ஈடுப்பட்டு வருகின்றனவே ஏன்?

உலகம் முழுவதும் ஆகட்டும், இந்தியாவில் ஆகட்டும் வாழும் மக்களின் பிரச்சனை என்ன?

அவர்கள் தங்கள் வாழ்வில் எதற்காக போராடுகின்றார்கள் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் போராடாமல் வாழ முடியவில்லை. குடும்பம் நடத்த முடியவில்லை.

விலைவாசியா? பிள்ளைகளின் படிப்பா? வேலையா? பிள்ளைகளின் திருமணமா? மருத்துவமா? என எதனை எடுத்துக் கொண்டாலும் போராட்டத்தை தவிர வழியில்லை.

போராடி, போராடி வாழ்க்கையை மெல்ல, மெல்ல நகர்த்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

தாங்கள் மிக அநியாயமான முறையில் சுரண்டப்படுகின்றோம். நமது உழைப்பு மொத்தமாக சுரண்டப்படுகின்றது. மனித உடலில் ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் மூட்டைப் பூச்சிகளைப் போல், நம்மை ஆட்டிப் படைக்கும் முதலாளித்துவம் நமது சமூக உற்பத்தியில் கிடைக்கும் செல்வத்தை ஒட்டச் சுரண்டி, உப்பிப் பெருத்து வருகிறது .

இந்த சமூகச் சதியை எதிர்கொள்ள வேண்டிய மக்களை, களம் காணவேண்டிய மக்களின் கவனத்தை திசை திருப்பும் வண்ணம் மதவெறி திட்டமிட்டே திணிக்கப்படுகின்றது.

சுரண்டல் கூட்டம், தனது, செல்வச் சுரண்டலை தொடர்ந்து நடத்தி வருகிறது.

முதலாளித்துவம், நிதி மூலதனம், கார்ப்ரேட் சக்திகள், வகுப்புவாத சக்திகள் ஒரே அணியாக செயல்பட்டு வரும் உண்மையை உழைக்கும் மக்கள் உணர்ந்து விடாமல் தடுக்க, அவர்களின் கவனத்தை எளிதாக திசை திருப்ப பயன்படுவது மதவெறி, சாதி வெறி என்கிற "அல்வா" ஆகும்!

அதனைத்தான் தற்போது நாடு முழுவதும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

மதவெறியர்கள் மேற்கொள்ளும் வன்முறை மூலம் நாட்டு மக்களின் கவனத்தை திசை திருப்புவது மட்டுமல்ல பிறரைக் கொல்வதன் மூலம் அல்லது ஒரு கூட்டத்தை கொல்வதன் மூலம் பழி தீர்த்துக் கொண்டோம் என்று திருப்தியடைவதும், அவர்கள் சார்ந்த அமைப்பின் சாதனை என பெருமைப்பட்டுக் கொள்வதும் சமூக அவலமாகும்.

மதவெறி சார்ந்த இழிசெயல்களை, வன்முறைகளை மதத்தின் தலைவர்களும், அதன் பரிவாரங்களும், அதன் தலைவர்களும் , மதவெறி, சாதிவெறி

தொடர்ச்சி 4ம் பக்கம்



மு.வீரபாண்டியன்



# மானுட அறம் - நவம்பர் புரட்சி!

மனிதகுல வரலாற்றில் மகத்தான புரட்சிகள் நடந்தேறி உள்ளன.

கிரேக்க புரட்சி அடிமைத்தனத்திற்கு எதிரான சிந்தனைப் போக்கை துவக்கி வைத்தது.

பிரஞ்சுப் புரட்சி ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் அரசியல் விழுமியங்களை விதைத்தது. ரூசோ, வால்டர் பிரகடனங்களை புவி பற்றிக் கொண்டது. ஆனால், லெனின் தலைமையில் நடந்தேறிய மாபெரும் அக்டோபர் சோசலிச புரட்சி மட்டும்தான் மன்னராட்சிக்கு முடிவு கட்டியது. புவியில் பாட்டாளிகளின் ஆட்சி அதிகாரத்தை கோரியது. உலக விடுதலையை உந்தியது. உலகம் இதுவரை கண்டிராத பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை நிறுவியது.

இயற்கை வளங்களையும், உழைப்பையும் சுரண்டும் மூலதனத்தை எதிர்த்து நிற்பது பாட்டாளிகளின் ஆட்சி அதிகாரம். உழைக்கும் மக்களோடு ஒருமைப்பாடு, விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு எனும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை பிரகடனப்படுத்தினார் லெனின்.

நவம்பர் புரட்சியின் முதல் சாதனை என்பது லெனினது "சமாதானம்" குறித்த பிரகடனம் தான். நாடுகளின் எல்லைகளை ஆக்கிரமிக்கிற, உலகை மறு பங்கீடு செய்கிற – யுத்தங்களிலிருந்து ரஷ்யா விலகிக் கொள்கிறது என்றார் அவர். அதோடு போர் கோழையின் செயல் என்றார் அவர். போர்களற்ற நீடித்த சமாதானத்திற்கான பாதையில் சோசலிச ரசியா என பகிரங்கப்படுத்தினார்.

புரட்சியின் முதல் வர்க்க ஆட்சியை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என, பிரிட்டன், பிரஞ்சு, அமெரிக்கா என 14 நாடுகள் வெண்படையை அமைத்து ரஷ்யாவின் உள்விவாரங்களில் அப்பட்டமாக ராணுவத் தலையீடுகள் செய்தன. புரட்சியைக் காக்க, சோசியலிதத்தை நிர்மாணிக்க "போர் கம்யூனிசத்தை" லெனின் பிரகடனப்படுத்தினார். போர் கம்யூனிசம் என்பது போரை விரும்புவது அல்ல, போர்க்கால சூழலில் நாட்டை நிர்மாணிப்பது. மின்சாரம், கூட்டுப் பண்ணைகள், ஆய்வுகள், கல்வி, சுகாதாரம், புதிய பொருளாதாரம், உணவு, உறைவிடம், அரசியலில் இருந்து மதத்தை தள்ளி வைப்பது என புதிய சிந்தனைகள் பிறந்தன.

உலகின் முதல் முதலில் சமூக நலத்திட்டங்கள் பிறப்பெடுத்தன.

போர்க்கால இடர்பாடுகள் – பாலியல் தொழில்கள் என ஜார் ரஷ்யா விழுந்து கிடந்தது. குழந்தைகள் உணவிற்கும், உறக்கத்திற்கும் அல்லல்பட்டனர்.

இச்சூழலில் லெனின் குழந்தைகளுக்கு உணவு, உறக்கம், கல்வி அரசின் பொறுப்பு என சட்டம் இயற்றினார். நல்ல உணவும், உறைவிடமும் தான் நல்ல உறக்கம் தரும். உறக்கம் கல்விக்கான மனக் கதவுகளை திறக்கும் என்றார் அந்த மாமேதை. அடுத்த சிறந்த தரமான உணவுகளில் முதலிடம் தாய்மை கொண்ட (கர்ப்பிணிகள்) பெண்களுக்கு என்றார்.

அதேபோல் போர்களின் பொருட்டு புலம்பெயர்ந்த பிற நாட்டு மக்களுக்கு எல்லைக் கதவுகளை திறந்து விடச் சொன்னார். தாய், தந்தை அற்ற குழந்தைகள் அரசின் பொறுப்பு என அறிவிப்பானது. தேசிய இனங்களின் சிறைக் கூடமாக இருந்தது ஜார் ரஷ்யா. லெனினது ஆட்சி தேசிய இனங்களின் விடுதலைக்கு வழி வகுத்தது.

லிதுவேனியா, லாத்வியா, எஸ்தோனியா பிரிந்து சென்று தனிநாடு அமைத்துக் கொள்ள லெனின் சட்டப் பிரகடனங்களை செய்தார். உலகம் இதுவரை காணாத வியப்பு அது.

அவரவர் தாய்மொழியில் கல்வி என்ற சட்டம். இடையில் ருஷ்ய கல்வியாளர்கள் ருஷ்ய மொழி இணைப்பு மொழி என பரிந்துரைத்தனர். இது பிறமொழி மீது ஆதிக்கத்திற்கு வழிவகுக்கும். எனவே அனைத்து மொழிகளும் நிர்வாக மொழி என்றார் லெனின்.

அக்டோபர் புரட்சியின் மற்றொரு மகத்தான சாதனையும் லெனின் சிந்தனையில் எழுந்தது தான். அது உழைக்கும் மக்களை ராணுவ மயமாக்குவது. இதிலிருந்துதான் செஞ்சேனை உருவானது. டிராட்ஸ்கி முன் முயற்சிகள் எடுத்தார்; செஞ்சேனை உருவானது. 2 கோடி மக்களை பலி கொடுத்து செஞ்சேனை ஸ்டாலின் தலைமையில் பாசிசத்தை வீழ்த்தி இரண்டாம் உலகப்போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

பிரிட்டன், பிரஞ்சு, ஸ்பெயின், போர்ச்சுக்கல் பிடியிலிருந்து அடிமைப்பட்ட நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் லெனின் மற்றொன்று பங்களிப்பைச் செய்தார்.

"ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கான கூட்டமைப்பை" கோரினார். நாடுகளின் தற்சார்புக்கு இவை இன்றியமையானதுதான் என்றார். இன்றைய 'பிரிக்ஸ்' அத்தகைய மாதிரியானதுதான்.

இந்தியா பிரிட்டிஷ் காலனி, அதே போல் தென்னாப்பிரிக்கா, பிரேசில், ஸ்பானிஷ், டச்சு காலனி, சீனா, ரசியா, மன்னராட்சி, பேரரசு

இந்த நாடுகளில் கூட்டமைப்புதான் பிரிக்ஸ். அக்டோபர் புரட்சியின் கனவுதான் 'பிரிக்ஸ்'. இது வலுப்பெறுவது உலக சமன் நிலைக்கானது.

ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் நாடுகள் விடுதலை பெறும் பட்சத்தில், அவைகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்க வேண்டும் என்றார் லெனின். சாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பும் லெனினது மரபு வழி தான்.

லெனினது கூட்டமைப்புகளைத்தான் தோழர் பிடல் காஸ்ட்ரோ, தென் அமெரிக்காவிற்கு முன்மொழிந்தார்.

லத்தீன் அமெரிக்கா முழுவதும் இடதுசாரிகள் கைப்பற்றும் அரசியல் சூழலில் ஐரோப்பிய கூட்டமைப்பு போல், தென் அமெரிக்க கூட்டமைப்பு அவசியம் என்றார் சாவேஸ். இவை யாவும் லெனினது அரசியல் வழிதான். இன்று லத்தின் அமெரிக்கா முழுவதும் பற்றி படர்கிறது இடது வெளிச்சம். இவை கிழக்கு உலகில் படரும் காலம் தூரத்தில் இல்லை. ஆம், உலகம் முழுவதும் அக்டோபர் புரட்சியின் சிந்தனைகள் படரும்.

உலகம் செவ்வானத்தின் மேல் எழும்!

நிச்சயம் ஏகாதிபத்தியம் வீழும்!

அக்டோபர் புரட்சி நீடூழி வாழ்க!



# செக்கச் சிவந்திட திக்கெட்டும் புறப்பட்டு நெல்லைக்கு வாருங்கள்!

எஸ்.காசிவிஸ்வநாதன்

தமிழ்நாடு ஏஐடியூசி இருபதாவது மாநாடு தாமிரபரணி கரையோரம் அமைந்துள்ள நெல்லை ரோஸ் மஹாலில் டிசம்பர் 1,2,3 தேதிகளில் நடைபெறுகின்றது. மூன்றாம் நாள் நெல்லை சிவந்திட பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது. ஆயிரம் ஆயிரம் தோழர்கள் தோள்களிலே செங்கொடியைத் தாங்கி செம்படையாய் திரண்டுவர அழைக்கின்றோம்.

" நாம் எதிர்காலத்திற்காக போராடுகின்றோம்! எதிர்காலம் இளைஞர்களுக்குச் சொந்தம் " என்று மாமேதை லெனின் கூறியதைப் போல போராட்டங்கள் கண்டிட மாநில மாநாடு திட்டமிட உள்ளது. வரலாற்றின் தடங்களை திரும்பிப் பார்க்கின்றோம்.

தோணித் தொழிலாளர்களை அணிதிரட்ட தோழர் பாலதண்டாயுதம் வழிகாட்டினார். தூத்துக்குடி தோழர் அலங்காரம் 1946ல் தோனி தொழிலாளர் சங்கத்தை உருவாக்கினார். தோணியில் கிடைக்கும் வருமானத்தில் பாதியை முதலாளிக்கு கொடுத்து விட வேண்டும் .மீதிப் பாதியை அந்த தோணியில் பணிபுரியும் 15 தொழிலாளர்களும் பங்கு போட்டுக்கொள்ள வேண்டும். இதற்கு மேல் சாதி மகமை. இவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றோம்.

நெல்லை மாவட்டத்தில் தந்தைக்கு நிகரான ஒரு சொல் அண்ணாச்சி என்பதாகும். மூன்று அண்ணாச்சிகள் உண்டு. அவர்களில் ஒருவர்தான் தூத்துக்குடி சங்கரநாராயண பிள்ளை. மீதி இருவரையும் பின்னால் பார்க்கலாம். வயதில் இவர் தான் மூன்று பேரிலும் சின்னவர். கடைசி வரை திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்தவர். அப்பழுக்கற்ற பொது வாழ்வுக்குச் சொந்தக்காரர் .

வ.உ.சிதம்பரனாரால் காங்கிரஸ் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்ட இவர் கட்சியில் தீவிரவாதியாக இருந்தார். பயங்கரவாத இயக்கங்களை சேர்ந்தவர்களுடன் இவருக்கும் தொடர்பு இருந்தது. தொழிற்சங்க இயக்கத்தில் அதீத ஈடுபாடு கொண்டவர். தூத்துக்குடி ஹார்வி மில் தொழிலாளர்களிடம் ஏஐடியூசி தொழிற்சங்கத்தை உருவாக்க முதல் முயற்சி எடுத்தவர். நீண்ட காலம் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் தொண்டாற்றியவர். ஒழுங்கும், உறுதியும், நேர்மையும் உடையவராக வாழ்ந்தவர். போராட்டக்களங்களிலே முன்னின்று தடியடி, கண்ணீர் புகை என்பதையெல்லாம் சந்தித்தபோதும் அஞ்சமாட்டார். விடுதலைப் போராட்ட களத்திலும், விடுதலைக்குப் பிறகும் சிறைச்சாலையில் தன் வாழ்நாளை கழித்தவர்.

இன்னொரு அண்ணாச்சி சிந்து பூந்துறை சண்முகம் பிள்ளை. நெல்லை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்தவர் பின்னர், கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். இனிய சுபாவம், மிருதுவாக பேசும் பழக்கம், அனைவரிடமும் மரியாதையாக நடந்து கொள்ளும் மனப்பக்குவம், கடுமையான கருத்து வேற்றுமை கொண்டிருந்தாலும் சுடு சொல் ஒன்று கூட மறந்தும் சொல்லாதவர் அண்ணாச்சி சண்முகம் பிள்ளை. சிங்கை பஞ்சாலை தொழிலாளர்களை வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக தொடக்க காலத்திலேயே அணிதிரட்டியவர். பலமுறை சிறை சென்றபோதும் அஞ்சா நெஞ்சினனாய் வாழ்ந்தவர். தமிழகத்தின் முற்போக்கு இலக்கியவாதிகளான பேராசிரியர் நா. வானமாமலை, தொ.மு.சி ரகுநாதன் , தி.க. சிவசங்கரன், டி.செல்வராஜ் ஆகியோருடன் சேர்ந்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை நெல்லையில் உருவாக்கியவர்.

பீடித் தொழிலாளர் சங்கத்தையும், பஸ் தொழிலாளர் சங்கத்தையும் உருவாக்கிய தலைவர்.

பேராசிரியர் நா.வானமாமலை , வழக்கறிஞர் என்.டி. வானமாமலை, வி.எஸ். காந்தி ஆகிய தோழர்கள் நாங்குநேரியில் பிறந்தவர்கள். பொது வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர்கள்.

தியாகத்திலே பிறந்து, தியாகத்திலே வளர்ந்து, தியாகத்திலேயே செத்து மடிவோம் என்று முழக்கமிட்ட தோழர்களின் வீரம் திருநெல்வேலியின் ஒவ்வொரு மண் துகலிலும் உள்ளது.

நாடு விடுதலை பெற்றது. ஆனாலும் செங்கொடி புதல்வர்களுக்கு மட்டும் சிறிது காலத்திலேயே அடக்குமுறை தொடங்கிவிட்டது. நாடு முழுவதும் சதி வழக்குகள் போடப்பட்டன. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் மட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சியிலும் கூடத்தான்.

நெல்லைச் சதி வழக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. காவல்துறையால் நூற்றுக்கணக்கானவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு சலித்து எடுக்கப்பட்ட 67 பேர் மீது நேரடியாக குற்றம் சுமத்தப்பட்டது. அநீதியை நிலைநாட்ட அரசு நிர்வாகம் கடும் பாடுபட்டது. நீதி தேவதையின் கண்கள் கருப்பு துணியால் கட்டப்பட்டிருந்தது. 1952 ஆகஸ்ட் மாதம் ஒன்றாம் தேதி தீர்ப்பு கூறப்பட்டது.

தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, கடும் காவல், சிறைச் சாலை வாசங்கள்ஞ் தியாகத்தால் செக்கச் சிவந்திட்ட நெல்லைக்கு வாருங்கள் தோழர்களே!

தொடர்புக்கு: 94434 68710

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 31

# உலகக் கம்யூனிஸ்டுகள் சந்திப்பு

பன்னாட்டு கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டம் கியூபாவின் தலைநகர் ஹவானாவில் 2022 அக்டோபர் 27,28,29 தேதிகளில் நடைபெற்றது.

உலகம் பொருளாதார நெருக்கடியில் அமிழ்ந்திருக்கிறது. ஒருபுறம் ஏராளமான செலவுகளை செய்து போர்கள், மறுபக்கம் பட்டினியில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியாத வறுமை. சில கார்ப்பரேட் பெரு நிறுவனங்களின் வரவு செலவு, பல நாடுகளின் வரவு செலவைவிட அதிகமானதாக உள்ளது. நிதி மூலதனத்தின் கைகளில் உலகம் சிக்கித் தவிக்கிறது.

பரிதவிக்கும் மக்களிடம் ‘இந்த நிலைமை மாற வேண்டுமானால் நிலையான அரசுகள் வேண்டும்; விட்டுக் கொடுக்காத உறுதி மிக்க தலைவர்கள் வேண்டும்; தொழிற்சங்கங்கள் செயல்படுவது, சம்பள உயர்வுக்குப் போராடுவது எல்லாம் நாட்டின் வளர்ச்சியைப் பின் தள்ளிவிடும்‘ என்று தமது கைகளில் உள்ள ஊடகங்களின் மூலம் மாய்மாலம் பேசி, கடந்த பத்தாண்டுகளில் உலகத்தை வலதுசாரி திசையில் முதலாளிகள் திருப்பி வைத்திருக்கிறார்கள். உண்மையைத் தமது அனுபவத்தால் புரிந்து கொண்ட மக்கள், மீண்டும் பல்வேறு நாடுகளில் இடதுசாரிகளை மீண்டும் ஆட்சியில் அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பன்னாட்டுக் கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. இக்கூட்டத்தில் 57 நாடுகளில் இருந்து 73 கட்சிகளின் சார்பில் 140 பிரதிநிதிகள் பங்கேற்றனர். கூட்டத்தை கியூபா குடியரசுத் தலைவர் மிகுயேல் டையாஸ் கேனல் துவக்கி வைத்த போது “ஐரோப்பாவில் துயரம் தரத்தக்க வகையில் சோஷலிஸ்ட் முகாம் மறைந்து விட்ட போதிலும், சோவியத் சோசலிச குடியரசு சிதைந்துவிட்ட நேரத்திலும், உலகம் எங்கும் கம்யூனிச எதிர்ப்புப் பரப்புரை முழு வேகத்துடன் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும், நம்முடைய தொடுவானமாக சோஷலிசம் தான் இருக்கிறது” என்று குறிப்பிட்டார்.

“கியூபா மற்றும் போராடும் மக்களுடன் ஒருமைப்பாடு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் நாம் ஒன்றுபட்டால் வலிமை பெறுவோம் முதலாளித்துவம் மற்றும் பாசிச, யுத்தக் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் இயக்கங்களோடு சேர்ந்து நிற்போம் உலக அமைதியை, சுற்றுச்சூழலை, தொழிலாளர் உரிமைகளை, ஒருமைப்பாட்டை, சோஷலிசத்தைப் பாதுகாப்போம்“ என்பதை மைய முழக்கமாகக் கொண்டு இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் டாக்டர் கே நாராயணா கூட்டத்தில் பேசினார். “சமூக ஒருமைப்பாட்டின் அனைத்து வடிவங்களையும் முதலாளித்துவம் அழித்துவிட்டது. பதிலாக, அறிவற்ற நுகர்வு கலாச்சாரத்தையும் தனிமனிதப் பேராசைகளையும் வளர்த்து விட்டிருக்கிறது. பல நாடுகள் போரில் ஏற்பட்ட புண்களுக்கு, மருந்துக் கட்டுப் போட்டுக் கொண்டிருக்கின்றன. போரின் உக்கிரத்தையும் கடும் பட்டினியையும் தாள இயலாமல் பல நாடுகளுக்கு இடையே மக்கள் புலம்பெயர்கின்றனர். தாம் உழைத்துப் பெற்ற உடைமைகளையும், மனித விழுமியங்களையும் இழந்து நாடற்றவர்களாக, ஆதரவு கரம் நீட்டுவதற்கு நாதியற்றவர்களாக பெண்களும் குழந்தைகளும் கூட திசையறியாது ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். மனிதர்கள் வாழும் உலகமா இது !

பேராற்றல் கொண்டதாக தகவல் தொடர்புத் துறை விரிந்து கொண்டே போகிறது. ஆனால் ஆக்கபூர்வ விஷயங்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவதைவிட, அன்னியர், வேறு கலாச்சாரங்களின் மீது வெறுப்பும், வகுப்புவாதமும் பொங்கும் தீய உணர்வுகளைக் கிளறிவிட்டு, எண்ணெய் ஊற்றித் தீ வைத்துக் கொண்டிருக்கிறார்கள்” எனக் குறிப்பிட்டார்.

உக்ரைன் போர் குறித்த தீர்மானத்தை கூட்டம் நிறைவேற்றியது. “இந்தப் போர் அமெரிக்க, நேட்டோ ராணுவ கூட்டு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஏகபோக முதலாளித்துவம் வரைந்த திட்டமாகும். முதலாளித்துவ ரஷ்யாவுடன், தமது போட்டியை கூர்மைப்படுத்தி, சந்தைகள், கச்சாப் பொருட்கள், போக்குவரத்து வலை பின்னல் ஆகியவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடத்தப்படும் யுத்தமே இது. தீய நோக்கத்தை மறைப்பதற்காக, ‘ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம், தற்சார்பை பாதுகாக்கிறோம், யாரோடு கூட்டு வைப்பது எனத் தீர்மானிக்கும் உரிமை ஒரு நாட்டுக்கு உண்டு’ என்றெல்லாம் நல்ல சொற்களை பேசுகிறார்கள்.

மக்களை மயக்குவதற்காக முன்வைக்கப்படும் முதலாளித்துவ சக்திகளின் பசப்புரைகளை எதிர்த்துப் போராடுமாறு அமெரிக்க, நேட்டோ, ஐரோப்பிய, ரஷ்ய மக்களை அறைகூவி அழைக்கிறோம்“ என அத்த தீர்மானம் கூறுகிறது.

நிறைவாக “உலகத்தின் வளர்ச்சிப் போக்குகளை வர்க்க அளவுகோலால் அளந்து ஆய்வு செய்து, தொழிலாளி வர்க்கத்தையும் மக்கள் நலனையும் பாதுகாப்பதற்கு, ஏகபோக முதலாளித்துவத்தை முற்றாக முறியடித்துத் தூக்கி எறிவதற்கு, நமக்கான தனிப்பட்ட பாதைகளை வகுத்துக் கொண்டு, வர்க்கப் போராட்டத்தை வலிமைப்படுத்தி, எந்தக் காலத்தையும் போல இப்போதும் அவசியத் தேவையாக இருக்கும் சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவோம்“ என்று கூட்டம் முடிவு செய்தது.

உறுதியாக முன்னேறுவோம். புரட்சி ஓங்கட்டும் !

02ம் பக்கத் தொடர்ச்சி

வன்முறையாளர்களுக்கு ஆதரவு காட்டி வருகிறார்கள்.

அவர்கள் தங்களது மதத்தையும் கொள்கைகளையும் கட்டிக் காப்பதில் மற்றவர்களைக் காட்டிலும் தாங்கள் தான் முன்னோடிகள் எனக் காட்டிக் கொள்கிறார்கள்.

அப்படிக் காட்டிக் கொண்டால் மட்டும் போதுமா? செயல்பட வேண்டாமா? சாதிக்க வேண்டாமா? சாதனை மூலம் “மாவீரன்” என்று தங்களை மார்தட்டிக் கொள்ள வேண்டாமா? தனது பெயரை, தான் சார்ந்த அமைப்பை எல்லோரும் விவாதிக்க வேண்டாமா? தனது மதவெறி உணர்வு குறித்தும், தனது அமைப்பு குறித்தும் மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சர்யப்பட வேண்டாமா? தங்களது பெயரும், அமைப்பும் ஊடகங்களில் படத்துடன் தலைப்பு செய்தியாக இடம் பெற வேண்டாமா?

இவ்வாறு தன்னையும், தான் அங்கம் வகிக்கும் அல்லது தலைமை தாங்கும் அமைப்பின் பெருமிதம் குறித்தும் உலகத்தை பேச வைக்க அவர்களுக்கு வன்முறை தேவைப்படுகின்றது. பயங்ரவாதம் தேவைப்படுகின்றது.

அத்தகைய காரியங்களைத் தான் செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

நீங்கள் ஹிட்லரை, முசோலினியை மறக்க முடியுமா?

கொடியவன் கோட்சேவை மறக்க முடியுமா?

பின்லேடனை மறக்க முடியுமா?

இத்தகையப் பட்டியல் நீண்ட நெடிய பட்டியல் நீண்டு கொண்டே இருக்கும்.

இத்தகையவர்களை கொடியவர்கள் என்று ஒரு பக்கம் பேசப்பட்டாலும் மறுபக்கம் தியாகிகளாக சிலரால் போற்றப்படுகின்றார்கள்.

இத்தகைய “தியாகிகள்” தான் தங்களது மதத்தையும், இனத்தையும் பாதுகாத்ததாக பெருமிதப்பட்டு பூரிக்கின்றார்கள்.

அண்ணல் மகாத்மா காந்தி பற்றிய திரைப்படம் வந்தது ! அவரை சுட்டுக் கொன்ற கோட்சேவிற்கும் திரைப்படம் வந்தது !

காந்தியை கொன்றது கொடியது என்றால் அதற்கு எதிராக, காந்தியை கொன்றது சரியே என வாதிட மதம் பயன்படுத்தப்படுகின்றது !

மதத் தீவிரவாதம் ஒரு போதும் நாட்டை முன்னெடுத்துச் செல்லாது.

மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தாது !

மதவெறி ஊட்டப்படுவதன் மூலம், அது கொழுந்து விட்டு எரியச் செய்வதன் மூலம் தங்களது குறுகிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள துடி, துடிக்கும் கூட்டத்தை புரிந்து கொண்டு, அடையாளம் கண்டு மக்கள் மதவெறி, சாதி வெறி, சனாதானா சிந்தனையின் பயங்ரவாதம் எத்தகைய முகமூடி அணிந்து வந்தாலும். அதனை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது !

மத பயங்ரவாதம் என்பது வன்முறை ஆயுதங்கள் கொண்டு மட்டுமல்ல சமூகத்தில் கருத்துக்களை கட்டமைக்கும் செய்தி நிறுவனங்கள், அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தும் அறிக்கைகள் தொடங்கி, பெட்ரோல் குண்டு, கைத் துப்பாக்கி, கார் சிலிண்டர் வெடிப்பு வரை பலவகையான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

வன்முறை எந்த ரூபத்தில், வடிவத்தில் வந்தாலும் அவை எந்த மத அடையாளத்தோடு வந்தாலும் அவைகள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட வேண்டும்.

ஒரு மதத்தை சார்ந்தோர் பிற மதத்தினர் மீது வெறுப்புணர்வு பரப்புவது மேலோங்கி வருவது கண்டு உச்சநீதிமன்றமே தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

“வெறுப்புணர்வு பேச்சுகள் தொடர்பாக தாமாக முன்வந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், புகாருக்கு காத்திருக்காமல் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக குற்ற வழக்குப்பதிவு செய்யவும் தில்லி, உத்தர பிரதேசம் மற்றும் உத்தரகண்ட் அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

‘மதச்சார்பற்ற தேசத்தையே அரசமைப்புச் சட்டம் கட்டமைக்க வலியுறுத்துகிறது’ என்று கூறிய உச்சநீதிமன்றம், ‘அறிவியல் பூர்வ மனப்பான்மையை வளர்க்க வேண்டிய நாம், மதத்தின் பெயரால் எந்த இடத்தை அடைந்துள்ளோம்? எந்த அளவு மதத்தின் மதிப்பை குறைத்துள்ளோம் என்பது வேதனைக்குரியது’ என்று அதிருப்தி வெளியிட்ட உச்ச நீதிமன்றம். .

வெறுப்புணர்வு பேச்சுகள் மிகத் தீவிரமான பிரச்சனை என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பாக ஷாஹீன் அப்துல்லா என்ற பத்திரிக்கையாளர் தாக்கல் செய்த மனுவில், ‘நாடு முழுவதும் முஸ்லீம்கள் மற்றும் இதர சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புணர்வு பேச்சுகள், குற்றச் சம்பவங்கள் அதிகரித்து விட்டது; ஆளும் கட்சியினரின் நேரடி மற்றும் மறைமுக ஆதரவுடன் இச்செயல்கள் நடைபெறுகின்றன. இந்த விவகாரத்தில் சுதந்திரமான, நம்பத்தகுந்த, பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளவும், தவறிழைப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்’ என்று கோரப்பட்டது.

அத்துடன், உத்தர பிரதேசம், உத்தரகண்ட், தில்லியில் அண்மைக்காலங்களில் ஹிந்து அமைப்புகள் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான பேச்சுகள் குறித்தும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த மனு மீது நீதிபதிகள் கே.எம்.ஜோசப், ரிஷிகேஷ் ராய் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணை நடைபெற்றது. அப்போது, நீதிபதிகள் கூறியாதாவது:

இது 21ஆம் நூற்றாண்டு. அரசமைப்புச் சட்டத்தின் 51ஏ பிரிவு (அடிப்படை கடமைகள்), அறிவியல்பூர்வமான மனப்பான்மையை நாம் வளர்க்க வேண்டுமென வலியுறுத்துகிறது. ஆனால், மதத்தின் பெயரால் நாம் எந்த இடத்தை அடைந்துள்ளோம்? எந்த அளவு மதத்தின் மதிப்பை குறைத்துள்ளோம்? என்பது வேதனைக்குரியது.

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, மதச்சார்பற்ற தேசத்தையும், குடிமக்களிடையே சகோதரத்துவத்தையும், தனிநபர்களின் கண்ணியத்தை உறுதி செய்வதையும் வலியுறுத்துகிறது. தேசத்தின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, முகப்புரையில் இடம்பெற்றுள்ள வழிகாட்டும் கொள்கைகளில் ஒன்றாகும்.

வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் நல்லிணக்கத்டதுடன் வாழ முடியாத பட்சத்தில், சகோதரத்துவம் எங்கே நிலவும்? வெறுப்புணர்வு பேச்சுகள் மீது நடவடிக்கை எடுக்க பல்வேறு சட்டப்பிரிவுகள் இருப்பதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மத நடுநிலை நிலவ வேண்டிய ஒரு நாட்டில், இத்தகைய பேச்சுகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளன.

அரசமைப்புச் சட்ட கோட்பாடுகளை காக்க வேண்டிய தேவை உள்ளது. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் அரசமைப்புச் சட்டத்தையும், அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கும் கடமை இந்த நீதிமன்றத்துக்கு உள்ளது.

வெறுப்புணர்வை தூண்டும் வகையில் பேசுபவர்கள் மீது மதத்தை பொருட்படுத்தாமல் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் தேசத்தின் மதச்சார்பற்ற கட்டமைப்பை காக்க முடியும்.

உத்தர பிரதேசம், உத்தரகண்ட், தில்லியில் வெறுப்புணர்வு பேச்சுகள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து மூன்று தரப்பினரும் பதிலளிக்க வேண்டும்.

இதுபோன்ற பேச்சுகள் தொடர்பாக, புகாருக்கு காத்திருக்காமல் தாமாக முன்வந்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடுகிறோம். இந்த உத்தரவை சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ளாவிட்டால், நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று நீதிபதிகள் எச்சரிக்கை தெரிவித்தனர்.

முன்னதாக, மனுதாரர் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் கபில் சிபில், ‘தில்லியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முஸ்லிம்களுக்கு எதிராக பாஜக எம்.பி. பரர்வேஷ்வர்மா பேசினார். அவர் மீது பல புகார்கள் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்.

உச்சநீதிமன்றமே தனது வேதனையை வெளிப்படுத்தியிருப்பதன் மூலம் வகுப்புவாத தீவிரவாதம் எத்தகைய அபாயத்தை எட்டியுள்ளது என்பதனை நம்மால் உணர முடிகின்றது.

வெறுத்து ஒதுக்கும் நிலை தொடர்வது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டும் !

அத்தகைய விழிப்புணர்வை மக்களிடத்தில் உருவாக்க, எழுச்சிப் பெறச் செய்திட இடையறாது பணியாற்றுவோம் !

மீண்டும் சந்திப்போம். வணக்கம்

தோழமைமிக்க



இரா. முத்தரசன்



- த.லெனின்

# ஆளுநராயினும் நா காக்க!

இந்திய ஆட்சி முறையில் மாநிலங்களுக்கான ஆளுநர்கள் ஏதோ வானில் இருந்து குதித்ததைப் போல தற்போது பேசி வருகின்றனர். அரசமைப்புச் சட்டத்தின்படி அவர்களுக்கு வானளாவிய அதிகாரங்கள் ஏதும் இல்லை.

ஆனால்,அவர்கள்ஏதோஎஜமானர்களைப் போலவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளை அடிமைகளைப் போல நடத்தப்படுவதும் தொடர்கிறது. அந்த வகையில் தமிழ்நாட்டின் கவர்னரான ஆர்.என்.ரவியும் கேரளாவின் கவர்னரான ஆரிஃப் முஹமது கானும் தொடர்ந்து பல சர்ச்சைகளிலும், ஜனநாயக மீறல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி அரசமைப்பு சட்டத்திற்கே எதிராகப் பேசி வருகிறார். எந்த ஒரு நாடும் அதாவது ஒரு மதத்தைச் சார்ந்துதான் இருக்க முடியும். அதில் இந்தியா விதிவிலக்காக இருக்க முடியாது எனக் கூறியுள்ளார்.தொடர்ந்து னாதானம் குறித்தும் பேசிவருவதுடன்

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் குறித்து மாணவர்கள் மத்தியில் பேசிய அவர், மாநில அரசின் காவல்துறை அந்த வழக்கை தேசிய புலனாய்வு அமைப்பிற்கு மாற்றியதை தாமதம் என்று குறிப்பிட்டுள்ளதும், ஏற்கனவே ஒன்றிய அரசு தடை செய்த ஹரிஜன் என்கிற சொல்லை அவர் தொடர்ந்து பயன்படுத்துவதும் அவரது அதிகார வர்க்க ஆணவப் போக்கையும், அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான அவரது பொது நடத்தையையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

கடந்த 2021 டிசம்பர் 23ஆம் தேதி டில்லி நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற வெடிவிபத்தை என்.ஐ.ஏ. வழக்கு பதிந்தநாள் 13.01.2022 ஆகும். இது ஒரு மாத கால தாமதமாகும்.

கடந்த 04.01.2022ல் மேற்கு வங்கத்தில் கேஜுரியில் நடந்த வெடிவிபத்தை என்.ஐ.ஏ. வழக்கு பதிவு செய்த நாள் 25.01.2022 ஆகும். 30.01.2022ல் ஷில்லாங் நகரில் போலீஸ் பஜாரில் நடத்த வெடிவிபத்தை என்.ஐ.ஏ. வழக்கு பதிவு செய்தநாள் 04.03.2022 ஆகும்.

அத்தோடு குஜராத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு இன்றைய பிரதமர் மோடி அன்று முதலமைச்சராக இருந்த போது அஹமதாபாத்தில் நடத்த தொடர் குண்டு வெடிப்பை என்.ஐ.ஏ.வுக்கு மாற்ற முடியாது என்று பேசியதுடன், இதில் ஒன்றிய அரசிற்கு எந்த வேலையும் இல்லை என்று குறிப்பிட்டதும், சட்டம் ஒழுங்கு மாநிலத்திற்கு உரியது என்று வீரவசனம் பேசியதும், இப்போது ஞாபகத்திற்கு வருகிறது.

மூன்று நாட்களையையே தாமதம் என்றால் என்.ஐ.ஏ வின் இந்த தாமதங்களுக்கெல்லாம் கவர்னர் என்ன பதில் சொல்வார்? சனாதானம் வேதங்களில் உடன்கட்டை ஏறுவது சொல்ப்படவில்லை சகர்கள் காலத்தில் தான் அது இந்தியாவில் பரவியது மகாபாரதக் காலத்தில் ஸ்வதகேது என்ற முனிவர்தான் முதன் முதலில் கட்டுப்பாடான திருமண முறையை அமைத்தவராவார் ஒருநாள் அவருடைய தாயாரை மற்றொறு முனிவர் காம இச்சைக்கு உள்ளாக்கி இழுத்துச் சென்றுகொண்டிருந்த போது ஸ்வதகேது அதை எதிர்த்தார் ஆனால் ஆனால் அவரது தந்தை ‘இது சனாதான தர்மம் ‘ என்று மகனை சமாதானப்படுத்தியதாகவும் அன்று தான் இந்த மோசமான திருமண முறையை தடுத்து நிறுத்துவேன் என்று தான் எடுத்துக்கொண்ட உறுதிப்படிதான் இன்றைய ஒருத்தனுக்கு ஒருத்தி திருமண முறை வந்ததாக கதை வருகிறது சனாதானம் பேசும் ஆர்.என்.ரவி இதை அறிவாரா? அண்டை மாநிலமான கேரளாவின் கவர்னர் ஆரிப் முகமது கானோ, தனது டுவிட்டர் பக்கத்தில் மாநில அரசு பரிந்துரைத்து ஏற்கனவே பல்கலைக்கழக துணைவேந்தர்களாக இருக்கும் ஒன்பது பேரை நீக்கியிருக்கிறார். ஆனால், கடந்த காலத்தில் ஜவர்கஹலால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் நுழைந்து தாக்குதல் நடத்திய ஆர்.எஸ்.எஸ். குண்டர் படை யினரின் பலர் இன்று அங்கு ஆசிரியர்களாக நியமித்துள்ளார்கள். அவரும் இவர்கள் வழியில் நிற்கும் துணைவேந்தர்தான்.

இந்த முறைகேடுகள் குறித்து டில்லி துணை நிலை கவர்னர் வாய்மூடி தான் இருக்கிறார். இவைதான் இவர்களின் இரட்டை நிலை!

அத்தோடு விட்டாரா பேர்வழி !கேரள மாநில நிதியமைச்சர் பாலகோபால் கேரள நிலமையை உ.பி. யிலிருந்து வந்தவர்களால் அறிந்து கொள்ள முடியாது என்று சொன்னதற்காக அதாவது அமைச்சர் அன்று மாணவ இயக்கத்தில் செயல்பட்ட போது வாராணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் போராடிய மாணவர்கள் மீது துணை வேந்தரின் தனிப் பாதுகாப்பு படையினர் துப்பாக்கியால் சுட்டு பல மாணவர்களை கொன்றதை தான் நேரில் சென்று விசாரித்ததை விளக்கவே அப்படிச் சொன்னார் சொன்னவர் மீது பிராண்டுகிறார் ஆளுநர் அரசமைப்பு சட்டம் பிரிவு 160 (1) ன் படி அமைச்சர் தனது விருப்பத்திலிருந்து விலகிவிட்டதாகவும் எனவே அவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று முதலமைச்சர் பினராய் விஜயனிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அப்படி என்றால் தனி ஒருவரை மகிழ்விப்பதுதான் ஒரு அரசின் வேலையா? இது ஜனநாயகமா? சர்வாதிகாரமா? அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 163(1) அமைச்சரவை கவர்னருக்கு ஆலோசனை வழங்குவதும், பிரிவு 163(2) ன்படி கவர்னர் அந்த திசைவழியில் செயல்படுவதற்கும் தான் அரசமைப்புச் சட்டம் பொதுவான வழிகாட்டுதலை தந்திருக்கிறது. எனவே, பிரிவு 164ஐ தனித்துப் பார்க்கக் கூடாது. இந்த பிரிவுகளோடு இணைத்தே பார்க்க வேண்டும் என்பது வழிமுறையாக உள்ளது. சட்ட நிபுணர் சீர்வாய் இதை மிக முக்கியமாக வலியுறுத்தியதுடன் அதற்கு மேல் கவர்னர்கள் செயல்பட முடியாது என்று அறுதியிட்டு கூறுகிறார்.

ஷாம் ஷெர் சிங் (எதிர்) பஞ்சாப் அரசு என்ற 1974ஆம் ஆண்டைய வழக்கில் உச்சநீதிமன்றம்இதேபோன்றபிரச்சினையை சுட்டிக் காட்ட அரசியல் சாசன சிற்பி டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களது 1948 நவம்பர் 4 அன்று அரசியல் நிர்ணய சபை துவக்க உரையில் பேசியதை சுட்டிக் காட்டியுள்ளது. அதில், அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் எவருடைய அதாவது அரசின் செயலாளர்கள் (அமைச்சர்கள்) ஆலோசனை பெறாமல் செயல்பட முடியும். ஆனால், இந்தியாவின் குடியரசுத் தலைவர் பொதுவாக எப்போதும் அமைச்சரவையின் ஆலோசனையின்படிதான் செயல்பட வேண்டும். அதற்குப் புறம்பாக செயல்பட முடியாது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும்வரை இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதை மீற அத்தகைய அதிகாரம் இல்லை என்று பேசியுள்ளது கவனிக்கத்தக்கது. அதுபோலவே அவர்களுக்காக விருப்பத்திற்கு இணங்க நடத்தலின் போது (Aduring Pleasure) என்ற வார்த்தை குறித்து அவர் தனது பேச்சில் குறிப்பிடும்போது, அந்த மகிழ்ச்சி சட்டமன்ற, நாடாளுமன்ற அவைகளின் அமைச்சரவையின் பெரும்பான்மை இருக்கும்போது மட்டுமே இவ்வார்த்தையை பயன்படுத்த முடியும். ஒருவேளை பெரும்பான்மையை இழந்து விட்டால் கவர்னர், குடியரசுத் தலைவர் விருப்பத்திற்கு இணங்க நடந்தால் கூட அந்த அரசை நீக்குவதன் மூலம்தான் மகிழ்ச்சியடைய முடியும். எனவே, கவர்னர் என்பது ஒரு அரசின் பேருக்கான தலைமைதான் என்பது விளங்கும்.

கவர்னர்களின் வரலாற்றுத் தொடக்கம் என்பது காலனி ஆதிக்ககால சூழ்நிலையில் உருவானதாகும். இந்திய அரசாங்கச் சட்டம் 1858தான் கவர்னர் என்ற பதவியை, அதுவும் கவர்னர் ஜெனரல்களுக்கு உதவும் விதத்தில் உருவாக்கப்பட்ட து இதுவே இந்திய அரசு சட்டம் 1935 ல் இயற்றப்பட்டு ஏப்ரல் 1,1937ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தசட்டப்படியும்கூட கவர்னர்கள்மாகாண அரசுகளின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதையும் நாம் காணலாம்.

அரசியல் நிர்ணய சபை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எச்.வி.காமத் கவர்னர்களுக்கு தனித்த அதிகாரம் உள்ளதா? என்று வினவினார். அதற்கு உடனடியாக வினையாற்றிய பிரிதொரு முக்கியமான உறுப்பினரான பி.எஸ்.தேஷ்முக் அந்த உத்தரவாதம் கவர்னர்களுடைய ஞானத்தைப் பொறுத்தது என்றும், அந்த அதிகாரத்தின் ஞானத்திலிருந்துதான் கவர்னர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்று அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதத்தின் போது 1949ல் பேசியிருக்கிறார்.

மேற்சொன்ன உச்சநீதிமன்ற வழக்கான ஷேம் செர் சிங் வழக்கில் அன்றைய உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணையர் இப்படி மீறி செயல்படும் கவர்னர்களை அரசமைப்பு சட்டத்திற்கு மேலான செயல்பாடு என்றதுடன் அவரது பாணியில் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான ஒரு மாயையாக தான்அவர்கள் உருவாக்குவதாக கூறியுள்ளது நோக்கத்தக்கது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தவறு செய்யுமேயானால் சட்டமன்றங்கள் அல்லது நாடாளுமன்றம் மூலம் அவை விவாதத்திற்கு வரும். அதன் மூலம் மக்கள் மன்றத்தில் அந்த விவாதத்தை தொடர்ந்து எடுத்துச் செல்லும். இறுதியில் எது சரி, எது தவறு என்று முடிவெடுப்பது மக்கள் தான்.

ஜனநாயகத்தில் எல்லாமும் மக்களால் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறது. தனிநபர்கள் கோலோச்சுவதை நமது நாடாளுமன்ற ஜனநாயக முறை ஏற்றுக் கொள்வதில்லை. மக்களால் தேர்ந்தெக்கப்பட்டவர்களுக்குத்தான் அதிகாரங்களேத் தவிர நியமனங்களால் வந்தவர்களுக்கு அதிகாரம் என்பது அவர்களது சனாதன மொழியில் சொன்னால் வெறும் மாயைதான்.

மோடியின் பா.ஜ.க. ஆட்சியில் பா.ஜ.க. அல்லாத அரசுகளை மிரட்டுவதற்கும் பழிவாங்குவதற்கும் கவர்னர்களை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது. அவர்கள் ஆளும் மாநிலங்களில் எவ்வளவோ சட்டம் ஒழுங்கு பிரச்சினை இருந்தாலும் நிதி நிர்வாக சீர்கேடுகள் உச்சத்தைத் தொட்டாலும் கண்கட்டி வாய் பொத்தி மவுன விரதம் மேற்கொள்வதும் அதுவே எதிர்க்கட்சிகள் ஆட்சி புரியம் மாநிலங்கள் என்றால் தன்னை ஒற்றை ஆள் ராணுவமாக கருதி காற்றிலே வாள் வீசுவதும், பழைய பஞ்சாங்கங்களையெல்லாம் எடுத்து வரலாறு பாடம் எடுத்து ஆர்.எஸ்.எஸ்.ஐ மகிழ வைக்கும் ஒரு அரசியல் பப்பூன் வேலையைத்தான் இந்த ஆளுநர்கள் ஆற்றி வருகிறார்கள். ஆளுநர் பதவி தேவைதானா?என்ற விவாதத்தை நடத்துவதும் ஜனநாயகத்திற்குப் புறம்பான இதனை அகற்றுவதற்கான போராட்டத்தை தொடர்வதும், மிகவும் அவசியம்.ஆளுநராக இருப்பினும்

யாகாவராயினும் நா காக்க!

தொடர்புக்கு: 9444481703



## ஊரக உள்ளாட்சி பொது சுகாதார பணியாளர் சங்க 4வது மாவட்ட மாநாடு

காஞ்சிபுரம் மாவட்ட ஏஐடியுசி ஊரக உள்ளாட்சி பொது சுகாதார பணியாளர்கள் சங்கத்தின் 4வது மாவட்ட மாநாடு கூடுவாஞ்சேரி சமூக நலக்கூடத்தில் மாவட்ட தலைவர் ஆர்.தேவராசன் தலைமையில் நடைபெற்றது.

சம்மேளன மாநில துணை செயலாளர் பீ.பீட்டர் துரைராஜ் மாநாட்டை துவக்கிவைத்து பேசினார். மாவட்ட ஏஐடியுசி பொதுசெயலாளர் எம்.ஜஹாங்கீர் அமைப்பு நிலை முடிவுகள் குறித்து பேசி நிறைவு செய்தார். எம்.சங்கையா வேலை அறிக்கை சமர்பித்தார். தெரு வியாபாரிகள் இணைய மாவட்ட பொறுப்பாளர் பி.ரவிச்சந்திரன், கட்டட சங்க மாவட்ட தலைவர் வி. ஆதிமூலம் வாழ்த்தி பேசினார்கள்.

தலைவராக ஆர். தேவராசன், கௌரவ தலைவராக ஒய்.யோவான், துணை தலைவராக எம்.சங்கையா, என்.முனுசாமி. என்.டி.அமுலு, செயலாளராக ஏ.வரதன், துணை செயலாளராக எம்.ரவி, பல்லாவரம் ரகு, ம. பார்த்தீபன் பொருளாளராக ஜி.சத்யா, தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

குறைந்தபட்ச ஊதியம் ரூ 21000/ ,நிர்ணயிக்கவும், அனைத்து உள்ளாட்சி களிலும் அரசாணை 65 அமலாக்கி 10 ஆண்டுகள்பணிசெய்தஅனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

ஏஐடியூசி நெசவாளர் சங்கத்தின் தேனி மாவட்ட செயலாளர் தி.சென்றாயப் பெருமாள் அவர்களின் இல்ல திருமண விழா அக்.27 அன்று சக்கம்பட்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தில் மணமக்கள் செ. சங்கர் தனி வருவாய் ஆய்வாளர் (குடிமை பொருள்), மு.ஜெயலட்சுமி ஆகியோர் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.1000 இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைசெயலாளர் வே.பரமேஸ்வரனிடம் வழங்கினர். திருமணத்தில் ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, நகர செயலாளர் க.முனீஸ்வரன், ஒன்றியக்குழு உறுப்பினர் க.பழனிச்சாமி, வி.காளியப்பன், ஜனசக்தி இதழ் ஒன்றிய பொறுப்பாளர் ஜனசக்தி பிரபாகரன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# ஆர்எஸ்எஸ் – பாஜகவை வெளியேற்ற மதசார்பற்ற கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

## சிபிஐ அகில இந்திய மாநாட்டில் யெச்சூரி முழக்கம்



சிபிஐ24வது அகில இந்திய மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரியின் வாழ்த்துரை பின்வருமாறு:

“சிபிஐ 24வது கட்சிப் பேராயத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் எங்களது அன்பான தோழமை வாழ்த்துகள். மாநாட்டுத் தொடக்க அமர்வில் கலந்து கொள்ள என்னை அழைத்ததற்கு மிக்க நன்றி. ஏனைய இடதுசாரி கட்சித் தலைவர்களையும் நான் வாழ்த்துகிறேன். இன்று நமது நாடும் மக்களும் சந்திக்கின்ற கடுமையான சவால்களை எதிர்கொள்வதற்காக இடதுசாரி ஒற்றுமையை வலிமைப்படுத்த விரும்பும் நமது பரஸ்பர விழைவை மீண்டும் வற்புறுத்துகிறேன்.

தோழர்களே நண்பர்களே! ஆந்திர மாநில அரசியல் மையமான விஜயவாடா நகரில் நீங்கள் குழுமியிருக்கிறீர்கள். விடுதலை வரலாற்றில் பல பத்தாண்டுகளாக கம்யூனிஸ்ட்களின் புரட்சிகர நடவடிக்கைகளின் மையமாக இருந்த இந்த நகரம், இன்றும் அவ்வாறே திகழ்கிறது. முக்கிய மக்கள் போராட்டங்களில் ஒன்றான, கொடிய நிலப்பிரபுத்துவ அடக்குமுறைக்கு எதிராக, விவசாயப் பெருங்குடி மக்கள் நடத்திய ஆயுதப் போராட்டம் நடந்த அரசியல் மையத்தில் நீங்கள் கூடியுள்ளீர்கள்.

இந்த ஆயுதப் போராட்டம் சுமார் 30 லட்சம் விவசாயிகளின் விடுதலையை 18 மாதங்களில் உறுதிப்படுத்தியது; மூவாயிரம் கிராமங்களின் 16ஆயிரம் சதுர மைல்கள் பரப்புள்ள 10லட்சம் ஏக்கர் நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தது. கம்யூனிஸ்ட் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஆயுதப் போராட்டம் மற்றும் பிற பல பகுதி விவசாயிகளின் எழுச்சிகள் வங்கத்தின் தேபகா இயக்கம், கேரள புன்னப்புரா, வயலாறு, மராட்டியத்தில் வார்லி எழுச்சி, அசாமில் சுர்மா பள்ளத்தாக்கு உள்ளிட்ட போராட்டங்கள், நிலச் சீர்திருத்தம் மற்றும் ஜமீந்தாரி முறை ஒழிப்பு நிகழ்ச்சி நிரலை அரசியல் மைய இடத்திற்குக் கொண்டு வந்தன.

கம்யூனிஸ்ட் இயக்கம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான மக்கள் போராட்டங்கள் இப்பகுதியில் ஆழமாக வேர் கொண்டுள்ளது. இந்த இடத்தில் கட்சிப் பேராயத்தை நடத்துவது, மேலும் கம்யூனிஸ்ட் செல்வாக்கையும் இடதுசாரி சக்திகள் இடையே ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை மேலும் வலிமையாக்கவும் உதவிடும் என்பதில் நான் பெருநம்பிக்கை கொள்கிறேன்.

தோழர்களே நண்பர்களே! சிபிஐ 24வது கட்சிப் பேராயம் நடைபெறும் தருணத்தில் சுதந்திர இந்தியாவும் நமது மக்களும் எல்லா வகையிலான நெருக்கடிகளையும் கடுமையான சவால்களையும் சந்திக்கின்றன.

அரசு அதிகாரத்தைச் செலுத்தும் இந்தப் பாஜக அரசு, பாசிச ஆர்எஸ்எஸ் அமைப்பின் இந்துத்துவ வகுப்புவாத நிகழ்ச்சி நிரலைத் தீவிரமாகப் பின்பற்றுகிறது. கெடுமதி பிடித்த வகுப்புவாத பிளவுபடுத்தும் செயல், வெறுப்பு விஷம் தோய்ந்த பிரச்சாரங்கள் மற்றும் வன்முறை, மதச் சிறுபான்மையினரைக் குறிப்பாக முஸ்லீம்களைத் தாக்குதல் இலக்காக்கி, இந்திய அரசியல் சட்டத்தைக் கடுமையாகத் தாக்கிச் சீர்குலைக்கிறது; இந்தியக் குடியரசு அமைப்பின் மதச்சார்பற்ற ஜனநாயகப் பண்புநலனை, ஆர்எஸ்எஸ் செயல்திட்டத்தின்படி சகிப்புத்தன்மையற்ற பாசிச இந்துத்வ ராஷ்ட்டிராவாக மாற்றப் பிரயத்தனப்படுகிறது.

அதே நேரத்தில் இந்தப் பாஜக அரசு, வகுப்புவாத கார்ப்பரேட் உறவுத் தொடர்பை வலிமையாக்க, கேடு பயக்கும் புதிய தாராளமயச் சீர்திருத்தங்களைப் பின்பற்றுகிறது; தேசியச் செல்வாதாரங்களைக் கொள்ளையடித்தும், அரசதிகாரம் சார்ந்த முதலாளித்துவத்தை ஆதரிக்கிறது; அரசியல் ஊழலைச் சட்டபூர்வமாக்கி, முழுமையான அதிகாரத்துவ ஆட்சியைத் திணிக்கிறது: மக்களின் ஜனநாயக உரிமைகள் மற்றும் குடிமைச் சுதந்திரங்களைத் தாக்குகிறது.

இந்தியக் குடியரசின் குணாம்சத்தை மாற்ற திட்டமிட்ட முறைகளில் முயற்சிகள் நடக்கின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்ட ஆதாரத் தூண்களான மதசார்பற்ற ஜனநாயகம், கூட்டாட்சி, சமூக நீதி மற்றும் பொருளாதார இறையாண்மை இந்நான்கும் தொடர்ந்து தாக்கப்படுகின்றன. புதிய தாராளமயப் பொருளாதாரச் சீர்திருத்தங் கள் தறிகெட்டு வேகமெடுக்கிறது. வழக்கமான தனியார்மயப்படுத்தல் மற்றும் கார்ப்பரேட்டுகளுக்கு வரிச் சலுகைகள் வழங்குவதைத் தாண்டி, இந்தியாவின் பொருளாதார இறையாண்மை அழிக்கப்படுவது பல்முனைகளில் நிகழ்ந்து வருகின்றன.

நமது அரசியலமைப்பில் பொறிக்கப்பட்ட மதச்சார்பற்ற விழுமியங்கள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகின்றன. இது, மோடி அரசு இந்தியாவை இந்துத்துவத் தேசமாக மாற்றுவதை நோக்கிச் செல்லும் வளரும் எதார்த்தத்தைச் சுட்டிக்காட்டும் சமிக்ஞைகள் ஆகும்.

வகுப்புவாத அடிப்படையில் மக்களைப் பிரிக்கும் நோக்கத்திலான சட்டங்களைப் பாஜக மாநில அரசுகள் இயற்றி வருகின்றன. இச்சட்டங்கள் வழக்கமாகச் சிறுபான்மை இன அப்பாவி மக்களை இலக்காகக் கொள்கின்றன; மேலும், அவர்களை நேரடியாகத் தாக்கவும் அல்லது சட்டப்படி அவர்களை வழக்கு விசாரணைக்கு உட்படுத்தி தொல்லைப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. சட்டவிரோதச் செயல்களைத் தடுக்கும் சட்டமான ஊபா (ஹிகிறிகி) / தேசத் துரோகம் / தேசியப் பாதுகாப்புச் சட்டம், என்எஸ்ஏ ஆகியவை நூற்றுக்கணக்கான மக்களைச் சிறையிலடைக்கத் தாறுமாறாக மனம்போன போக்கில் பயன்படுத்தப்படுகின்றன.

இச்சட்டங்களின் கொடூரமான பிரிவுகளைக் குறிப்பாகச் சிறுபான்மையின மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல், அவை அரசுடன் உடன்பட மறுத்து எதிர் கருத்துகளை எழுப்பும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் பிறருக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றன. எதிர் கருத்தை இந்த அரசு தேச விரோதமானது என முத்திரை குத்துகிறது. கடந்த ஆண்டுகள் கல்வி, அரசியல், நிதி விவகாரம், சமூக, பண்பாடு என கூட்டாட்சியின் அனைத்துத் துறைகளிலும் எல்லா பக்கங்களிலிருந்தும் தொடர்ச்சியான தாக்குதல்களைச் சந்தித்து வருகின்றன.

மாநில ஆளுநர்களின் செயல்பாடுகள் மற்றும் ஆளுநர்கள், அரசிலமைப்புச் சட்டத்தின் அனைத்து நியதி, நெறிமுறைகளையும் மீறுகின்றனர். அவர்கள் எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சி அரசியல் நிகழ்ச்சிநிரல் திட்டத்தின் தொங்கு சதை நீட்சியாகச் செயல்படுகின்றனர். அரசியலமைப்புச் சட்டம் உறுதியளித்த சமத்துவம் மற்றும் சமூக நீதி லட்சியத்தை நனவாக்குவதை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக, சமூக ரீதியில் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பெரும் அநீதிகளுக்கும், பாரபட்சமாக நடத்தப்படுவதற்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

மேலே சொல்லப்பட்டவைகளுடன், நாடாளுமன்றம், நீதித்துறை, தேர்தல் ஆணையம் முதலான சுதந்திரமான அரசியலமைப்பு அதிகார அமைப்புகள் அனைத்தும் நீர்த்துப்போகச் செய்து மதிப்பிழக்கச் செய்யப்படுகின்றன.

மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ மற்றும் குறிப்பாக அமலாக்க இயக்குநரகம் மேலும் மேலும் எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறி வைக்கும் ஆளும் கட்சியின் அரசியல் கரங்களாக அக்கட்சியின் ஏவல் துறைகளாகி வருகின்றன. தகவல் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் கார்ப்ப ரேட்டுகள், ஜோடிக்கப்பட்ட செய்தி மற்றும் தகவல்களை வெள்ளமெனப் பாய்வதை உறுதிப்படுத்துகின்றன.

அறிவியல் அடிப்படையற்றதும், வரலாற்று ஆதாரங்கள் இல்லாததுமான இந்துத்துவா வகுப்புவாதக் கோட்பாடு, பகுத்தறிவு மற்றும் காரணகாரிய இயைபுத் தொடர்பு இரண்டின் மீதும் தாக்குதல் நடத்துகிறது. உண்மைகளை மறைக்கும் இருண்மைவாதம் அல்லது குழப்பம், மூட நம்பிக்கை மற்றும் குருட்டு நம்பிக்கை இவற்றைப் பரப்புவது, மக்களை ஏமாற்ற உதவுகின்றன; இவை இந்து புராணக் கதைகளை உண்மை வரலாறாக மக்கள் மனங்களில் சுலபமாகத் திணிக்க உதவுகின்றன. இது அறிவியல் மனப்பான்மை மற்றும் பகுத்தறிவின் மீது நடத்தப்படும் தாக்குதல். காலத்தால் நிரூபிக்கப்பட்ட சுதந்திர இந்திய வெளியுறவுக் கொள்கையை மோடி அரசு கை கழுவி விட்டது. இந்தியா இப்போது அனைத்து உலக விஷயங்களிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிபணியும் கூட்டாளியாகத் தரமிழந்து விட்டது.

இஸ்ரேலுடன் இந்தியா தந்திரோபாய உறவுகளை மேம்படுத்தியும்; பாலஸ்தீன நலன் மற்றும் போராட்டங்களுக்கு நமது வரலாற்றுப் பாரம்பரிய ஆதரவு மற்றும் ஒருமைப்பாட்டை நீர்க்கச் செய்தும் விட்டது. அமெரிக்கா, இஸ்ரேல், இந்தியா கூட்டணி அச்சு மேலும் உறுதியாக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியா, அமெரிக்காவுடன் தந்திரோபாய உறவு மற்றும் இராணுவக் கூட்டை நெருக்கமாக்கியுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா இணைந்து (ஞிஹிகிஞி) ‘குவாட்’ எனும் நாற்கரணக் கூட்டணியை ஏற்படுத்தியுள்ளன; தீவிரமான அந்தத் தந்திரோபாய இராணுவக் கூட்டின் நோக்கம், இந்தோ பசிஃபிக் பகுதியில் சீனாவை ஒதுக்கித் தனிமைப்படுத்துவதே ஆகும்.

அரசு என்னதான் பிரச்சாரப் பரபரப்பைக் கட்டவிழ்த்து விட்டாலும், நாட்டின் பொருளாதாரம் தலை குப்புறக் கீழ்நோக்கி வீழ்கிறது. கோவிட் பெருந்தொற்றைத் தவறாகக் கையாண்டதன் மூலம் மக்கள் மீது சுமத்தப்பட்ட துன்பங்களுக்கு மேலே மக்களின் வாழ்வாதாரத்தின் மீதான கடுமையான தாக்குதல்கள் அதிகரித்தபடி உள்ளன. வேலையின்மை உச்ச மட்டங்களில் உள்ளது; கட்டுக்கடங்காமல் ஓடும் பணவீக்கம், லட்சோப லட்சம் மக்களை ஏழ்மையிலும் பசியிலும் ஆழ்த்துகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதல்கள், அதிகரிக்கும் அதிகாரத்துவப் போக்கு மற்றும் வாழ்வாதாரத்தின் மீதான தாக்குதல்களுக்கு எதிராக மக்களின் எதிர்ப்புத் தீவிரமாகிக் கொண்டு வருகிறது. குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிரான எழுச்சி இயக்கம், குறிப்பாக பெண்களும் இளைஞர்களுமாக, பெரும் மக்கள் கூட்டம் திரண்டதைப் பார்த்தது.

ஓராண்டிற்கும் மேல் நீடித்த வரலாற்றுச் சிறப்புடைய விவசாயிகளின் வீரம் செறிந்த போராட்டம், அடம் பிடித்த மோடி அரசைப் பிற்போக்குத்தனமான வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெறச் செய்தது.

தனியார்மயத்திற்கு எதிராகவும், தொழிலாளர் சட்டத்திருத்தங்களைக் நீக்கவும் வற்புறுத்தி ஆண்டு தோறும் வெற்றிகரமான அனைத்திந்திய வேலைநிறுத்த நேரடி நடவடிக்கைகளில் இறங்கிய மத்தியத் தொழிற்சங்கங்கள், சமீபத்தில் தொழிலாளர் குறுங்குறிகளை (லேபர் கோடு) சட்டபூர்வமாக ரத்து செய்யக் கோரி 2022 மார்ச் 28, 29 இரண்டு நாட்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தங்களைச் செய்தனர். அதிகரித்த ஒருமைப்பாட்டுடன் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து விடுத்த கூட்டுப் போராட்ட அறைகூவல் இயக்கங்களில், சமீப ஆண்டுகளில், பெருந்திரளானவர்கள் ஒன்று திரண்டதைப் பார்க்க முடிந்தது.

மக்களின் போராட்டங்களை மேலும் தீவிரப்படுத்த இடதுசாரி சக்திகள் ஒற்றுமையின் பலம் அதிகரிப்பது மிகவும் முக்கியமானது. இந்த அடிப்படையிலேயே இடதுசாரிகள் மற்றும் ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை, மாற்றுக் கொள்கைத் திசைவழியுடன், இறுக்கமாகக் கட்டப்பட வேண்டும்.

அதே நேரத்தில், இந்துத்துவா வகுப்புவாதத் தாக்குதல்களை முறியடிக்கவும், அவர்களைத் தனிமைப்படுத்தவும் பரந்துபட்ட அளவில் மதசார்பற்ற சக்திகளை ஒன்று திரட்டுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

கேரளாவில் இடது ஜனநாயக முன்னணி அரசு, அதன் மக்கள் நலம் சார்ந்த மாற்றுக் கொள்கைகள் மூலம் மக்களின் இதயங்களைக் கவர்ந்து, அம்மாநிலம் இதற்குமுன் சந்தித்திராத வகையில் தொடர்ச்சியாக இரண்டாம் முறை இடது ஜனநாயக முன்னணியை அரசமைக்க மக்கள் தேர்ந்தெடுத்தனர். அதன் சாதனைகள், மனித வளர்ச்சிக் குறியீடுகளில் நாட்டிலேயே கேரள மாநிலம் உயர்ந்த முதல்தர இடத்தைப் பெற்றுச் சாதிக்க வைத்துள்ளன. இடது ஜனநாயக முன்னணி அரசைச் சீர்குலைத்துக் கவிழ்க்க ஆர்எஸ்எஸ் அமைப்பும் ஒன்றிய அரசும் எல்லா வகையிலும் ஓயாது முயற்சி செய்கின்றன. இடதுசாரி சக்திகள் ஒன்றிணைந்து இந்த முயற்சிகளைத் தடுத்து முறியடிக்க வேண்டும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்த அனைத்துக் கடமைகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது. அதன் மூலம் மட்டுமே இடதுசாரி கட்சிகள் மற்றும் சக்திகள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் இந்திய மக்களை ஒன்று திரட்ட முடியும்; மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த முடியும்; இந்தியாவின் மதசார்பற்ற ஜனநாயக குணாம்சத்தைப் பாதுகாத்து, நமது மக்களுக்கான மேலான இந்தியாவை உருவாக்குவதை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும் என்பதை சிபிஐ(எம்) கட்சி நம்புகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 24வது கட்சிப் பேராயம் அதன் விவாதங்களில் அனைத்து வெற்றிகளையும் பெற நான் வாழ்த்துகிறேன்!

ஆர்எஸ்எஸ் / பாஜக அரசை வெளியேற்றுவோம்!

இடதுசாரி ஒற்றுமையை உறுதிப்படுத்தி வலிமை பெறச் செய்வோம்!

கொள்கை மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான போராட்டங்களில் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையைக் கட்டுவோம்!

இந்துத்துவா வகுப்புவாதத்திற்கு எதிராக மதசார்பற்ற சக்திகளின் விரிவான மக்களைத் திரட்டுவோம்!

மார்க்சியம் லெனினிசம் நீடு வாழ்க!

நன்றி : நியூஏஜ்

தமிழில் : நீலகண்டன்



# நவீன தாராளமய பொருளாதார கொள்கைகளுக்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டம்

## சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டத்தில் டாக்டர் கே.நாராயணா முழக்கம்!

**சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 22 வது கூட்டம் அக்டோபர் 26 முதல் 28 வரை கியூப நாட்டின் தலைநகரம் ஹவானாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணா பங்கேற்று சிறப்புரையாற்றினார்.**



அவரது சிறப்புரை பின்வருமாறு:

தோழர்களே,

சிறப்பானதொரு வருங்காலத்துக்காக, உலகம் முழுவதும் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு, இந்நேரத்தில் எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். எல்லைகளையும், கண்டங்களையும் கடந்து, ஒற்றுமையுடன் நாம் தொடுக்கும் போராட்டங்களைப் பற்றிய முக்கியமான நிகழ்வாக, உலகம் முழுவதிலும் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. சர்வதேசியம் மற்றும் உலகெங்கிலும் உள்ள மக்களுடனான ஒற்றுமை உணர்வில் நமது மார்க்சிய வேர்கள் உறுதியாக நிலைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு தங்களது ஆதரவை நல்கிய கியூப மக்கள் மற்றும் கியூப கம்யூனிஸ்ட் கட்சிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதார தடைகள் மூலமாக கியூபா மீதான தனது பிடியை மேலும் இறுக்குவதற்கு ஏகாதிபத்தியம் முயன்று வரும் இந்தச் சூழலில், கியூபா இந்தக் கூட்டத்தை நடத்துவது குறிப்பிடத்தக்கதாகும். கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கீழ் முன்னேறும் கியூப மக்களின் புரட்சிகர உணர்வைப் பொருளாதார தடைகள் மூலம் நசுக்க முடியாமல் ஏகாதிபத்தியம் தோல்வியுற்று வருகிறது.

கியூபமக்கள்நாள்தோறும்இன்னல்களை எதிர்கொண்டு வந்தாலும் கூட, சர்வதேசிய நெறிமுறைகளை கியூபா உயர்த்திப் பிடித்து வருகிறது; நெருக்கடியான காலங்களில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டுகிறது. கோவிட் 19 பெருந்தொற்றின் போதும், உலக நாடுகள் அனைத்தும் அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதையே முன்னுரிமையாகக் கொண்டிருந்தன. ஆனால், கியூபா கோவிட் பெருந்தொற்றால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு மருத்துவக் குழுக்களை அனுப்பியது. கியூப மக்களின் புரட்சிகர சர்வதேசியத்திற்கு எனது வீரவணக்கம்!

கியூப மக்களை ஆதரிப்பது எமது கட்சியின் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். கியூப மக்களுக்கான எமது ஆதரவு இருமடங்காக அதிகரிக்கப்பட வேண்டும் என்று தற்போது உள்ள சூழல் கோருவதாக நாங்கள் கருதுகிறோம். சமத்துவம், சுதந்திரம் மற்றும் நீதி ஆகியவற்றுக்கான கியூப மக்களின் போராட்டங்கள் கியூப கம்யூனிஸ்ட் கட்சி தலைமையின் கீழ் வென்றெடுக்கப்பட்டுள்ளன. சோஷலிசத்தைக் கட்டமைப்பதில் கியூப கம்யூனிஸ்ட் கட்சி முன்னேறி வருகிறது.

கண்ணியம் மற்றும் போராட்ட உணர்வின் கலங்கரை விளக்கமாகத் திகழும் கியூப மக்கள் மற்றும் கியூப புரட்சிக்கான எமது ஆதரவை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். கியூபாவிற்கு எதிரான தடைகளை நீக்க வேண்டும் என்று கூறுகிறோம்.

அன்பார்ந்த தோழர்களே,

சர்வதேச அளவில் தற்போது, முதலாளித்துவ நெருக்கடி தீவிரமாகி வருவதையும், முதலாளித்துவம், அதன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக பாசிச வழிமுறைகளைச் சார்ந்து வருவதையும் நாம் காண்கிறோம். இந்தப் போக்கு மிகவும் அபாயகரமானது. நமது எதிர்கால உத்திகளை வகுத்திட இந்தப் போக்கு குறித்து விரிவாக ஆய்வு செய்திட வேண்டும். முதலாளித்துவம் அனைத்து வடிவிலான சமூக ஒற்றுமை உணர்வுகளை தகர்த்துள்ளது; தனிநபர் போக்கு அதிகரித்து வரும் உலக அமைப்பில், தடையற்ற நுகர்வு கலாச்சாரத்தை மேலும் வளர்த்தெடுத்துள்ளது.

புதிய தாராளமய பொருளாதாரக் கொள்கையின்படி, சமூக நல திட்டங்களைத் திரும்பப் பெறுவது என்பது, பெரும் எண்ணிக்கையிலான மக்களைப் பாதுகாப்பற்ற, நிச்சயமற்ற நிலைக்கு கொண்டு செல்லும். சமத்துவமின்மை, வேலை இழப்பு, குடியிருப்புகள் அகற்றம், சுற்றுச்சூழல் சீர்கேடு, வேலையின்மை, பணவீக்கம் இன்ன பிற பிரச்சனைகள் உண்டாக்கும் கவலைகள் மற்றும் துன்பங்களை வலதுசாரி சக்திகள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயன்று வருகின்றன. மக்களின் வாழ்வை மேம்படுத்துவதில் புதிய தாராளமய பொருளாதாரக் கொள்கைகள் தோல்வி அடைந்துள்ளன. இதனை மறைப்பதற்காக, இனவாத, மதவாத, சாதி அடிப்படையிலான வேற்றுமைகள் மீது குற்றஞ்சாட்டும் சிந்தனை மடைமாற்றம் செய்யப்படுகிறது; மக்களிடையே மோதல் ஏற்படுத்தப்படுகிறது. மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் வலதுசாரி சக்திகளின் வளர்ச்சியை இந்தப் பின்புலத்தில் நாம் கண்டுணர வேண்டும்.

அதிகரித்து வரும் வறுமை மற்றும் பொருளாதார இன்னல்கள் காரணமாக, இது போன்ற பிரிவினை அரசியல் நீடிக்காது என்பதை நவீனதாராளமய பொருளாதார அறிஞர்கள் அறிந்துள்ளனர். எனவே தான், நவீனதாராளமய முதலாளித்துவம், அதன் நலனைப் பாதுகாத்துக் கொள்ள, பாசிச அரசியல் கட்சிகள் மற்றும் வழிமுறைகள் மீது நம்பிக்கை கொண்டுள்ளது. இந்தப் போக்கு பொருளாதார ரீதியாக விளிம்பு நிலையில் உள்ளவர்களை மட்டுமின்றி அடிப்படை உரிமைகளற்று இருக்கும் மக்களுக்கும் ஒரு மோசமான சூழலையே உருவாக்குகிறது. முதலாளித்துவ பேராசையின் காரணமாக, மனித உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் நசுக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இது குறித்து நாம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். மனித உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் மீதான வன்மத்தை வெளிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையும் நாம் எதிர்த்துப் போராட வேண்டும்.

கியூபாவில் நாம் கூடியுள்ள இந்தத் தருணத்தில், பல நாடுகள் போரினால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றன. ஏகாதிபத்திய சதித்திட்டத்தின் காரணமாக, பெண்களும், குழந்தைகளும் கட்டாய புலம்பெயர்தலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இராணுவ மோதல் அணு ஆயுதப் போராக மாறக்கூடிய அச்சுறுத்தல் நம் முன் உள்ளது. இந்த நிலையானது, போர் நடைபெற்று வரும் அந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த உலக அமைதிக்கும் அச்சுறுத்தல் உண்டாக்கி இருக்கிறது. அணு ஆயுதப் போர் மனித நாகரிகத்தைப் பின்னோக்கிச் தள்ளுவதுடன், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மீது நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு துன்பங்களைக் கட்டவிழ்த்து விடும் அபாயம் உள்ளது. அணு ஆயுதமற்ற, அமைதி நிறைந்த, சமத்துவ சமுதாய அமைப்பை உருவாக்கிட உழைக்க வேண்டியது நமது கடமை ஆகும். வருங்கால தலைமுறையினருக்கு ஒரு பொன்னுலகை நாம் விட்டுச் செல்ல வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் வீச்சு சக்தி வாய்ந்ததாக உள்ளது. ஆனால், வெறுப்புணர்வு, வகுப்புவாதம் மற்றும் வன்முறைகளைத் தூண்டக்கூடிய கருத்துகளைப் பரப்புவதற்காக தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இணையதளத்தில் மிகப்பெரும் பங்காற்றும் நிறுவனங்கள் வலதுசாரி ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. இணையதள நடுநிலைக்காகப் போராட வேண்டியது நமது கடமையாகும். இணையம் வழங்கும் கற்றல் வாய்ப்புகள் ஒரு சிலரின் ஏகபோகமாக இருத்தல் கூடாது. தேவையின் அடிப்படையில் அனைவருக்கும் இணையத்தின் பயன்கள் கிடைத்திட வேண்டும். அடிப்படையான மனித மற்றும் சமூக உரிமையாகப் பார்க்கப்படும் இது போன்ற வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைத்திட நாம் பாடுபட வேண்டும்.

அன்பார்ந்த தோழர்களே,

முதலாளிகளே செல்வ வளங்களை உருவாக்குபவர்கள் என்று பரப்புரை செய்யும் நவீன தாராளமயம், தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளை கிஞ்சிற்றும் மதிப்பதில்லை. நவீனதாராளமயம் கோலோச்சுகிற நாடுகளில் தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. மாற்று செயல்திட்டத்தின் மூலம் உழைப்பின் மகத்துவத்தை நாம் மீண்டும் நிறுவிட வேண்டும். எனவே, எதேச்சதிகார மற்றும் பாசிச அரசாங்கங்களுக்கு எதிரான நமது போராட்டங்களில் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதே நமது போராட்டங்களின் மையக்கூறு ஆகும். நமது இக்கடமை குறித்தும், அதன் முக்கியத்துவம் குறித்தும் நாம் கவனமாக இருந்திட வேண்டும்.

தற்போதுள்ள சர்வதேச சூழல் மோசமாகவே உள்ளது. உலகமயம் உருவாக்கியுள்ள பிரச்சனைகளின் விளைவுகளை நேர்த்தியாகப் பயன்படுத்துவது, சமூக இயக்கங்களை அதற்கேற்ப இணைப்பதில் இலத்தீன் அமெரிக்க நாடுகள் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளாக மிளிர்கின்றன. அமெரிக்க ஆதரவு பெற்ற வலதுசாரி, பிற்போக்கான அரசாங்கங்களை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்துவிட்டு, இடதுசாரிகள் அல்லது இடதுசாரி ஆதரவு கட்சிகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகள் வாக்களித்து வெற்றி பெறச் செய்கின்றன. இலத்தீன் அமெரிக்க மக்கள் எதிர்கொண்ட துன்பங்கள் மற்றும் அவர்களது உத்வேகம் அளிக்கக்கூடிய போராட்டங்கள் நமது பரிசீலனைக்கும், பாராட்டுதலுக்கும் உரியவை ஆகும். அவை நமக்கு படிப்பினைகளையும் வழங்குகின்றன.

தொழிலாளர் உரிமைகள், சமூக உரிமைகள், மனித உரிமைகள், சூழலியல் மற்றும் கண்ணியம் ஆகியவற்றுக்கான நமது போராட்டங்கள், நவீனதாராளமயம் கட்டமைத்துள்ள ஏற்றத்தாழ்வுமிக்க உலக அமைப்பின் மீது, ஒன்றுபட்ட தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். உலகம் முழுவதற்கும் நம்பிக்கை அளித்து வரும் விஞ்ஞான சோஷலிச தத்துவத்தை ஆயுதமாகக்கொண்டிருக்கும்இடதுசாரிகள் அத்தகையதொரு தாக்குதலுக்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

உலக அமைதியைச் சீர்குலைக்கும் ஏகாதிபத்திய தலையீடுகளை நாம் உறுதிபட மறுதலிக்க வேண்டும். நமது நாடுகள் சகிப்புத்தன்மை மற்றும் நல்லிணக்கம் கொண்ட நாடுகளாகச் செம்மையுற நாம் பாடுபட வேண்டும். நாம் ஒன்றுபட்டுப் போராடினால், வருங்காலத்திற்கான செயல்திட்டத்தை மேலும் செழுமைப்படுத்த முடியும்; மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

தோழர்களே, நம் முன் உள்ள அச்சுறுத்தல் மிகப்பெரிது என்பதால் நாம் கட்டாயம் ஒன்றுபட வேண்டும். உலகம் முழுவதிலும் அமைதி, நீதி மற்றும் சோஷலிசம் ஓங்கிட நாம் ஒன்றுபட வேண்டும்! வளம் பொருந்திய வருங்காலத்திற்காக நாம் ஒன்றுபட வேண்டும்! ஒற்றுமையே பலம்! நன்றி!

**தமிழில்: அருண் அசோகன்**

# தமிழக அரசே த



ம.இராதாகிருஷ்ணன்

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.7) துறையின் அரசாணை (நிலை) எண்.152, நாள்: 20.10.2022 வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரிவு 5 உட்பிரிவு (ஸ்) "தற்போது அனுமதிக்கப்படும் பணியிடங்களைத் தவிர ஏற்கனவே நிரந்தர பணியில் உள்ள தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், செயல் திறனற்ற மற்றும் செயல் திறன் பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், இரவு காவலர்கள், தரவு உள்ளீட்டாளர், தட்டச்சர், வரி வசூலர் மற்றும் பதிவறை எழுத்தர் ஆகியோருக்கு அவர்கள் ஓய்வு பெறும் காலம் வரை மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் வழங்கவும், அப்பணியாளர்கள் ஓய்வுக்குப் பிறகு அப்பணியிடங்களை நிரப்பாமல் எதிர்வரும் காலங்களில் இப்பணிகளை (services) வெளி முகமை மூலம் (Out Sourcing as Services) மேற்கொள்ளலாம்" என்று தெரிவிக்கிறது.

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் எனும் தாரக மந்திரங்களை அரசு ஏற்றுக்கொண்ட 1990 கால கட்டத்தில் இருந்து நிரந்தரத் தொழிலாளர் எனும் முறைமைக்கு எதிராக ஆளும் அரசுகள் தங்கள் யுத்தத்தை தொடங்கி தொடர்ந்து வருகின்றன. அதற்காக அரசியல் அமைப்பு சட்டம், அதன் அடிப்படையில் உருவான தொழிலாளர் நலச் சட்டங்கள் எதனையும் மீறும் மனிதத்தன்மையற்ற, தங்களின் நடவடிக்கைகள் அனைத்தையும் நியாப்படுத்தி வருகின்றன. அதன்படி தொழிலாளர்கள் மீதான உச்ச உயர் தாக்குதலாகவே இந்த அரசாணை அமைந்துள்ளது.

கடந்த ஆண்டு மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளன்று நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அனுப்பிய ந.க.எண் 21787/ 2021/ EA2 நாள்:02.10.2021 சுற்றறிக்கையில் "வெளிச்சந்தை தொழிலாளிகளை தங்கள் விருப்பம்போல் சுரண்டிக் கொள்ளையடித்துக் கொள்ள ஒப்பந்ததாரர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அது நடைமுறை சாத்தியமே இல்லாத அளவிற்கு வேலைப்பளுவை அதிகரித்து, தற்போது பெற்றுவரும் ஊதியத்தை பாதியாகக் குறைக்க வழிகாட்டுகிறது. இது குறித்து தமிழ்நாடு ஏஐடியுசி உடனடியாக தமிழக முதல்வர் அவர்களின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்றும் பலனேதும் இல்லை.

வெளி முகமை மூலம் (Out Sourcing as Services) எனும் இதே வார்த்தையைத் தான் ஒன்றிய அரசின் திடக்கழிவு, திரவக்கழிவு, அபாயகரமான கழிவு மேலாண்மை திட்டங்களும், ஜல் சக்தி, தூய்மை பாரதம் எல்லாம் ஊக்குவிக்கிறது. ஆனால் இந்த வெளி முகமை என்னும் முறையை கடைபிடிப்பதற்கு என்று இந்தியாவில் எந்த சட்டமும் இல்லை. உச்ச, உயர் நீதி மன்றங்கள் ஒப்பந்த தொழிலாளர் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழித்தல்) சட்டம், 1970 ஐ அடிப்படையாகக் கொண்டுதான் வெளி முகமை தொழிலாளர்கள் வழக்குகளை விவாதித்து வருகின்றன. அதேநேரத்தில் தொழிலாளிகளுக்கு எந்த விதமான சட்ட பூர்வ உரிமையும் வழங்காமல் ஏமாற்றுவதற்காகவே இந்த சொல் பயன்படுத்தப் படுகிறது. இது திட்டமிட்ட மோசடி அல்லவா?!

ஒப்பந்த தொழிலாளர் சட்டம், ஒப்பந்த தொழிலாளர் முறையை ஒழிப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டது. அதற்கு இடைப்பட்ட காலத்தில் தான் ஒழுங்குபடுத்துதல். அதில் முதன்மையானது பதிவு செய்வது. இதன்படி தமிழ்நாட்டில் கடந்த 2000 ஆண்டு முதல் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் வழங்கியுள்ள ஒப்பந்தங்கள் அனைத்தும் சட்ட விரோதமானவை. தனியார் நிறுவனங்கள் சட்ட விரோதமாக இயங்கினால் அதை தடுக்க வேண்டிய அரசே திட்டமிட்டு சட்ட விரோதமான ஒப்பந்த முறை மூலம் தொழிலாளர்களை ஒட்டச் சுரண்ட வழி ஏற்படுத்தித் தருகிறது.

ஒப்பந்ததாரர்களிடம் தரப்படும் தொழிலாளர்களுக்கான ஊதியம் உள்ளிட்ட பணப்பலன்களில் கணிசமான தொகையை அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். கணக்கிட்டு பார்த்தால் ஆண்டுக்கு ரூ.1,000/கோடியையும் தாண்டிய தொகையாக இது இருக்கிறது. இந்த குற்றச் செயலை தடுக்க வேண்டிய அதிகாரமும், பொறுப்பும் உள்ள அதிகாரிகள் கீழ் இருந்து ஆக உயர்மட்டம் வரை எனக்கு தெரியாது. ஒப்பந்ததாரரிடம் கேளுங்கள் என்ற பொறுப்பற்ற பதிலை குற்ற உணர்வோ, கூச்சமோ இல்லமல் சொல்வதை பரவலாக காண முடிகிறது. இவை எல்லாம் ஏற்கனவே உள்ள அனுபவங்கள்.

இன்றைய உலகமய சூழலில் குப்பைகளும், கழிவுகளும் அகற்றுவது மிகவும் சவாலான, சூழலியல் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையாகும். கழிவு தீர்த் தொட்டி மரணங்களும், விபத்துகளும் பொறுப்பின்மைக்கு இன்றைய நேரடி சாட்சி. குடி நீர் உயிர் வாழ இன்றியமையாதது. சமூக நலன், மக்கள் நலன், பூமியின் பாதுகாப்பு போன்றவற்றில் அக்கறை கொண்டு அரசு செய்ய வேண்டிய



சேவையை வணிகமயமாக்குவது மக்களை மேலும் பல இன்னல்களுக்கு ஆட்படுத்தும்.

தமிழக அரசு வெளி முகமை மூலம் மாநகராட்சிகளின் சேவையை ஒப்படைக்க அரசாணை வெளியிட்ட நான்கு நாட்களுக்கு முன்னர் ஒடிசா மாநில அரசு ஒப்பந்த பணியாளர் முறையை கைவிட்டு அத்தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய முடிவு செய்துள்ளது. கர்நாடக மாநில அரசு ஏற்கனவே இதற்கெனவே ஒரு சட்டம் இயற்றும் தயாரிப்பில் உள்ளது. ஆந்திர, தெலுங்கானா அரசுகள் ரூ.21,000/ க்கு குறையாத தொகையை ஊதியமாக தந்து வருகின்றன.

2022, ஜனவரி 7 ஆம் தேதியன்று நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள் சட்டமன்றத்தில் "தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேவாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம், 2022" எனும் மசோதா ஒன்றை முன்வைத்துள்ளார். அதில் " அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனம், அரசுக்கழகங்கள் அல்லது சட்டபூர்வ வாரியம் அல்லது அதிகார அமைப்புகளின் பணி இடங்களுக்கான ஆட்சேர்க்கை தொடர்பான கூடுதல் பணிகளை தமிழ்நாடு அரசுப்பணியாளர்

## 1 ம் பக்கத் தொடர்ச்சி

முன்னதாக குருதாஸ்தாஸ்குப்தாவின் 3ம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி அவரின் உருவ படத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

**தஞ்சை**: தஞ்சை மாவட்ட ஏஐடியூசி அலுவலகம் முன்பாக நடைபெற்ற கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் வெ.சேவையா தலைமை வகித்தார். மாநில செயலாளர் சி.சந்திரகுமார் அமைப்பு நாள் கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து கீழவாசல் கட்டுமான சங்க கொடியினை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் க.அன்பழகன் ஏற்றி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் துரை மதிவாணன், மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

முடிவில் மாவட்ட அலுவலகம் முன்பு மறைந்த குருதாஸ் தாஸ் குப்தாவின் மூன்றாவது ஆண்டு நினைவையொட்டி அவரது படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

**காஞ்சிபுரம்**: காஞ்சிபுரத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.மூர்த்தி கொடியேற்றி வைத்தார். காஞ்சிபுரம் மாவட்ட டாஸ்மாக் சங்கத் தலைவர் இ.பிரகாசம் வாழ்த்துரை வழங்கினார். காஞ்சிபுரம் மாவட்ட துணைச் செயலாளர் என். தங்கராஜ், மாவட்ட குழு உறுப்பினர்கள் எம். கங்காதரன், எம்.காவேரி மற்றும் எம்.ரேணுகா, பி.ரஹமத், அமீரு நிஷா ஆகியோர் கலந்து கொண்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

**பாபநாசம்**: பாபநாசம் அரசு மருத்துவமனை அருகில் ஏஐடியூசி கொடியேற்றப்பட்டது. கட்டுமானத் தொழிலாளர் சங்க துணைத் தலைவர் சுகுமாறன் தலைமை வகித்தார். ஏஐடியூசி செயலர் தில்லைவனம் கொடியேற்றி பேசினார். இதில் பால சுப்பிரமணியன், ராமஜெயம், பாஸ்கர், சௌந்தர் ராஜன், ராஜேந்திரன், வேணுகோபால், கலிய மூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

**மதுரை**: தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க மதுரை மாவட்ட குழுவின் சார்பாக ஏஐடியூசி, அமைப்பு தினம், தோழர் குருதாஸ் தாஸ் குப்தா நினைவு தின நிகழ்ச்சி மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், மேலூர், மாங்குளம், வேடர்புளியங்குளம், மூடுவார்பட்டி, வெள்ளையம்பட்டி, கோவிலூர், அ.புதுப்பட்டி, போன்ற இடங்களில் சங்க தோழர்கள் திரளாக கலந்து கொண்ட நிலையில் கொடி ஏற்ற நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றது.

மாவட்டம் முழுவதும் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் து.பாலமுருகன் என்ற அலெக்ஸ், மாவட்ட பொதுச் செயலாளர் மா.இருளாண்டி, மாவட்ட செயலாளர்கள் பா.நாராயணன், எஸ்.சக்திவேல், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**மணப்பாறை**: மணப்பாறை அரசு போக்குவரத்துக் கழக அலுவலகம் முன்பும், திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் சங்கம் சார்பில் நகராட்சி அலுவலகம் முன்பும், அமைப்புச்சாரா தொழிலாளர் சங்க செயலாளர் நல்லுச்சாமி இல்லம் அருகிலும், ஏஐடியூசி 103 வது அமைப்பு தினம் கொடி ஏற்று விழாவும், குருதாஸ் தாஸ்குப்தா வின் மூன்றாம் ஆண்டு நினைவுதின புகழ் அஞ்சலியும் நடைபெற்றது.






**தென்காசி**: தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் ஏஐடியூசி சங்க அமைப்பு தினத்தில் நகராட்சி தூய்மை பணியாளர்கள் சங்கத்தலைவர் காளியப்பன் கொடி ஏற்றினார். மாவட்ட ஏஐடியூசி கௌரவ தலைவர் ஏ.சாமி சிறப்புரையாற்றினார். கே. பழனிச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புளியங்குடியில் விசைத்தறி தொழிலாளர்கள் சங்கம் சார்பாக ஏஐடியூசி கொடியை மாவட்ட ஏஐடியூசி செயலாளர் வேலு ஏற்றி வைத்தார். போக்குவரத்து கழகத்தில் ஏஐடியூசி கொடியை மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் சுப்பையா ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

சிவகிரியில் மாவட்ட ஆட்டோ சங்கத்தலைவர் முனியாண்டி ஏஐடியூசி கொடியை ஏற்றி வைத்தார். கூட்டுறவு சங்கத் தலைவர் ராஜேந்திரன், சிபிஐ நகர செயலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கீழகலங்கலில் ஏஐடியூசி கொடியை பொருளாளர் ரத்தினசாமி ஏற்றி வைத்தார். மதன் துணைச் செயலாளர் பாண்டியன், பழனிச்சாமி, பிரபு, அப்பாசாமி, ரமேஷ் நன்றி கூறினார்!

மேலக் கலங்கலில் ஏஐடியூசி கொடியை மாவட்ட பொருளாளர் ரத்தினச்சாமி கொடி ஏற்றினார்.

**திருவண்ணாமலை**: திருவண்ணாமலை மாவட்டம் போளூர் பஸ் நிலையம் முன்பு ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் அமைப்பு தினத்தை முன்னிட்டு சி.பன்னீர்செல்வம் தலைமையில் ஏஐடியூசி கொடியை கி.ஜீவானந்தம் ஏற்றினார். பா. சண்முகம் நினைவு கல்வெட்டை எம்.எஸ். மாதேஸ்வரன் திறந்து வைத்தார். பி. சங்கர், ஆ.செந்தில்குமார், எ.ராமச்சந்திரன், க.

# டம் மாறலாமா?!



தேர்வாணையத்திடம் ஒப்படைக்க அரசானது முடிவு செய்துள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அதிகார அமைப்புகள் என்பதில் உள்ளாட்சி அமைப்புகளும் அடக்கம். மேலும் 2022 செப்டம்பர் 2, 3 தேதிகளில் நெல்லை,மதுரை ஆய்வு கூட்டங்களில் பங்கேற்ற பின்னர் இதனை உறுதி செய்து நகராட்சிகள் நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் ஊடகங்களிடம் பேசும் போது ''மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சியில் உள்ள காலிப் பணியிடங்கள், டி.என்.பி.எஸ்.சி மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மாநகராட்சி ஊழியர் பணி நியமனங்களில் ஒப்பந்த முறை விரைவில் ரத்து செய்யப்படும் என்றும் கூறினார். இந்த செய்தியை பார்த்த தொழிலாளர்கள் மிகவும் அக மகிழ்ந்திருந்தனர்.

அதே நேரத்தில் ''சாதாரணப் பணியிடங்களை புற ஆதார அடிப்படையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது''. என்றும் அந்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இதனை சொல்லாமல் கவனமாக பல ஊடகங்கள் தவிர்த்துள்ளன. தூய்மைப்பணி, குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு, சாலை வசதிகள் எல்லாம் தான் சாதாரண பணியிடங்கள் என்று அரசாணை தெரிவிக்கிறது.

அந்த பணிகளை 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்தம், தினக்கூலி, வெளிமுகமை, போன்ற பெயர்களில் அற்ப கூலிக்கு நவீன கொத்தடிமைகளாக பணி புரியும் பல்லாயிரம் தொழிலாளர்களை ஒரே உத்தரவில் நடுத்தெருவிற்கு அனுப்புகிறது அரசாணை.

மக்களுக்கு சேவை செய்வது உள்ளாட்சி அமைப்புகளின் கடமை. அந்த சேவை மக்களுக்கு இன்றியமையாதது. அந்த அடிப்படையான சேவையை சாதாரணம் என்கிறதா தமிழக அரசு?! அப்படியானால் ஒப்பந்தகாரகள் கொள்ளையடிக்க வழி வகுப்பதும், வரிவசூல் மட்டுமே இந்த அர்சுக்கு முக்கியமானது என்றல்லவா ஆகிறது. என்னே தமிழ்நாடு அரசின் விந்தையான சிந்தனை!

தேர்தல் பரப்புரையின் போது முதல்வர் அவர்கள் தூய்மைப்பணியாளர் ஒருவர் கேள்விக்கு பதில் அளிக்கும் போது ''ஒப்பந்த தொழிலாளர் முறை குறித்து நான் நன்கு அறிவேன், 60 நாள் பொறுங்கள் நல்ல காலம் பிறக்கும்'' என்று குறிப்பிட்டார். பல 60 நாட்கள் கடந்து விட்டது. எனினும் காலம் கடந்தாவது நல்ல காலம் பிறக்கும் என்று காத்திருந்த தொழிலாளர்களின் நம்பிகையை அரசாணை 152 பொய்த்துப் போகச் செய்துள்ளது.

திமுகவின் தேர்தல் அறிக்கையிலும் ''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள், உள்ளிட்ட அரசுத் துறை மற்றும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களில் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்து வரும் அனைத்து ஒப்பந்த மற்றும் தற்காலிக பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும். ஊராட்சிகள், அரசுப் பள்ளிகள், அரசு மருத்துவமனைகள், அரசு மாணவர் விடுதிகள், நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சிகள் ஆகியவற்றில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் பணி, ஊதியம், ஒய்வூதியம் போன்ற கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும்'' என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கானல் நீராக இருந்த பணி நிரந்தரம் காணாமல் போய், பல்லாயிரம் தொழிலாளர்கள் வாழ்வை கேள்விக்குறியாக்கும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இது வாக்களித்த மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நம்பிக்கை துரோகம் அல்லவா!

அதே சமயத்தில் 20 மாநகராட்சிகளிலும் ஐஏஎஸ் உள்ளிட்ட அதிகாரிகளும், அலுவலர்களும் நிரந்தர அரசுப்பணியாளர்களாக நியமிக்க மேற்படி அரசாணை வழி வகுக்கிறது. அதன்படி 4145 பணியிடங்கள் அனுமதி கோரப்படுகிறது. இப்பணியிடங்களுக்கான ஊதிய விகிதமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி அதிக பட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000/ கோடி அளவுக்கு ஊதியம் வழங்க வேண்டி உள்ளது. இத்தொகை சுமார் 30,000 நிரந்தரத் தொழிலாளர்களின் ஊதியத்திற்கு நிகரானதாகும். ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே நிர்வாகத்திடம் பெற்று தொழிலாளர்களுக்கு தராமல் ஏமாற்றும் தொகையைக் கொண்டு 20,000 முதல் 30,000 நிரந்தரத் தொழிலாளர்கள் நியமிக்க இயலும். ஒரு லட்சம் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து, ஊதியம் வழங்க சுமார் ரூ. 4,000/ முதல் ரூ.5,000/ கோடி அளவே தேவைப்படும்.

வெளி முகமைதான் என்பதை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டால், அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் விவசாயிகளிடமிருந்தும், கல்விக்கடன் பெற்றவர்களிடமிருந்தும் வங்கிகளுக்கு வசூலித்துத் தருவதில் மிகவும் புகழ் பெற்ற நிறுவனம் தானே. அதனிடமே வரி வசூலிக்கும் ஒப்பந்தம் தரலாம் அல்லவா! ஐஏஎஸ் அதிகாரிகளை விட திறமையான அதிகாரிகளை வெளிச்சந்தையில் சப்ளை செய்ய கார்ப்பரேட் நிறுவனங்கள் தயாரகவே இருக்கின்றன. ஒன்றிய அரசு செயலாளர்கள் பலர் இன்று அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். நமது பிரதமரிடம் கேட்டால் அவரது சிறந்த நண்பர்களை பரிந்துரை செய்வாரே!

எந்த ஒரு சேவை குறித்தும் பொது மக்கள் மாநகராட்சி, நகராட்சி அலுவலகங்களில் முறையிட்டு தீர்வு காண முடியாது. எனக்குத் தெரியாது, ஒப்பந்தாரரிடம் கேள் என்று பதில் சொல்ல மட்டும் அலுவலர்கள் இருப்பார்கள். ஆளும் கட்சி பிரதிநிதிகளின் சொந்தக்காரர்களாகவோ, உயர்பதவியில் இருப்பவர்களின் பினாமியாகவோ, பன்னாட்டு நிறுவனங்களாகவோ, இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களாகவோ ஒப்பந்ததாரர்கள் இருப்பார்கள். எந்த அதிகாரியும் இவர்களை கட்டுப்படுத்த முடியாது.

அரசுக்கு, அரசு நிர்வாகத்திற்கு எதிராக போராடினால் கூட நமது காவல் துறை அனுமதிக்கும். இது போன்ற ஒப்பந்ததாரர்களுக்கு எதிரான போராட்டம் என்றால் ஒன்று சேரவே விடாமல் தடுக்கும் கலையில் அது நன்கு தேர்ச்சி பெற்றுள்ளது என்பதை சமீப கால அனுபவங்கள் காட்டுகின்றன. மக்களும் தொழிலாளர்களும் எக்கேடு கெட்டால் என்ன என்று முடிவுக்கு வந்த பின்பு அதிகாரிகளும், அலுவலர்களும் , அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தரும் சுமார் ரூ.1000/ கோடியும் வீண் செலவு தானே!

உள்ளாட்சி அமைப்புகளின் சேவையை தனியார் கொள்ளையடிக்கும் தொழிலாக மாற்றுவது பேராபத்து ஆகும். இதனை உணர்ந்து தமிழ்நாடு அரசு அரசாணை 152, மற்றும் சுற்றறிக்கை 21787 ஐ கைவிட வேண்டும். தவறினால் ஏமாற்றப்பட்ட தொழிலாளர்களும் மக்களும் தக்க பதிலடி தந்து முறியடிப்பார்கள்.

தொடர்புக்கு: 8524867888



பெரமன், பெ.கனகராணி, லெனின் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். குருதாஸ் தாஸ்குப்தாவுக்கு புகழ் அஞ்சலி செலுத்தினர்.

**கோவில்பட்டி:** கோவில்பட்டியில் மந்தித்தோப்பு ரோட்டில் உள்ள அதர்ஸன மஹாலில் ஏஐடியூசி அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுக்கு ஆட்டோ தொழிலாளர் சங்க அய்யப்பன் தலைமை வகித்தார்.

சிபிஐ மாவட்டச் செயலாளர் பி.கரும்பன் ஏஐடியூசி கொடியை ஏற்றினார்.

ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் லோகநாதன், மாவட்டப் பொருளாளர் பாலசிங்கம், சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் ஜி.பாபுபாலமுருகன், வ.பாலமுருகன், ஏஐடியூசி கட்டுமான மாவட்டச் செயலாளர் சேது, சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர் சேதுராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.




## கட்சிக் கொடிக் கம்பத்தை பிடுங்கி எறிந்தவர்களை கைது செய்யக் கோரி குத்தாலத்தில் மறியல் போராட்டம்

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்தில் சேத்துரா பாலபுரம் என்ற இடத்தில்இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிக்கம்பத்தை பிடுங்கி எறிந்து உள்ளனர். இதனைத் தொடர்ந்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் பேரில் குற்றவாளியை கைது செய்யாமல் காவல்துறை அலட்சியம் காட்டியது.

இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் விவசாய சங்க மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.ராமன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் எம்.பிரபாகரன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.சி.கணபதி, ஒன்றிய பொறுப்பு செயலாளர் ஏஞ்சல்ஸ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் என்று காவல் நிலையத்திற்கு முன்பு சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சரக டிஎஸ்பி வந்து பேச்சு வார்த்தையில் இரவுக்குள் குற்றவாளியை கைது செய்கிறேன் என்று உறுதி அளித்த பிறகு சாலை மறியல் கைவிடப்பட்டது.

## 2023ம் ஆண்டிற்கான காலண்டர் மற்றும் சிறப்பிதழ் தயாராகிறது...

காலண்டர் மற்றும் சிறப்பிதழுக்கான விளம்பரங்கள் நவ.25 ஆம் தேதிக்குள் ஜனசக்திக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

காலண்டர் விளம்பரம், விற்பனை தேவை குறித்து 50% முன்பணம் செலுத்தி தேவையான பிரதிகளை நவ.25 ஆம் தேதிக்குள் உறுதி செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு விளம்பரம் மற்றும் விற்பனை பாக்கி வைத்துள்ள மாவட்டங்கள் பாக்கியை உடனடியாக செலுத்திய பின்பே இந்த ஆண்டிற்கான பிரதிகளுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| காலண்டர் விளம்பரம் | – ரூ.20,000 |
| காலண்டர் பிரதி விலை | – ரூ.15.00 |
| சிறப்பிதழ் | – ரூ.15.00 |

சிறப்பிதழ் விளம்பரத்திற்கான படிவம் அனுப்பி வைக்கப்படும்.

– ஆசிரியர் குழு



தி.இராமசாமி

# இந்தி பேசாத மாநில இளைஞர்கள் இனி ஒன்றியப் போட்டித் தேர்வுகள் எழுத இயலாதா?

இந்திய அரசுப்பணி, மாநில அரசுப்பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்ய தேர்வு வாரியங்கள் செயல்படுகின்றன. ஒன்றியத்தில் ஏற்படும் ஆட்சியின் கொள்கைகளுக்கு தகுந்தாற் போல் ஒன்றிய தேர்வு வாரியத்தில் பல மாற்றங்கள் செய்யப்படுகிறது.

தற்போது பா.ஜக. அரசால் செய்யப்படும் மாற்றங்கள் இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராக இந்திய இளைஞர்களுக்கு விரோதமாக இருக்கிறது. சமீபத்தில் ஒன்றிய தேர்வு வாரியத்தில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட மொழிக்கொள்கை திடீரென மாற்றப்படுகிறது.

மாநில மொழிகளுக்கு இதுவரை இணைப்பு மொழியாக இருந்த ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் குறைக்கப்படுகிறது. இந்தி முக்கியத்துவம் பெற வேண்டும் என்று திணிக்கிறது. இதனால் ஒன்றிய தேர்வு வாரியத்தின் மீது இளைஞர்களுக்கு இருந்த நம்பிக்கை சீர்குலைந்து வருகிறது. இத்தகைய நடவடிக்கையால் இந்தி பேசாத மாநில இளைஞர்களின் உரிமைகள் பறிக்கப்படுகிறது.

தேர்வின் மூலம் பணிக்கு செல்ல வேண்டும் என்ற இளைஞர்களின் எண்ணம் ஏளனம் செய்யப்படுகிறது. நிர்வாக பணியில்லாத மற்ற பொதுத்துறை நிறுவனங்களான, இரயில்வே, நெய்வேலி நிலக்கரி, வங்கி போன்ற துறைகளில் இந்தி பேசாத மாநிலங்களில் சொந்த மாநிலத்தவரை விட மற்றவர்களுக்கு அதிகமான வாய்ப்பளிக்கின்ற முறையில் அந்தத் துறையின் தேர்வுகள் அமைந்துள்ளன.

தமிழகத்தில் ரயில்வே, தபால் தந்திதுறைகளில் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் அதிக அளவில் பணியாற்றுகிறார்கள். இவர்கள் தமிழக மக்களை புரிந்து கொண்டு பணியாற்றுவதில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அவர்கள் பணியை மக்களுக்கான முறையில் சரிவர செயல்பட முடியவில்லை. இதனால் மக்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இதை ஒன்றிய அரசு புரிந்து கொண்டு மாநிலங்களில் காலியாக உள்ள ஒன்றிய அரசு, பொதுத் துறை காலிப்பணியிடங்களை அந்தந்த மாநில மக்களுக்கு முன்னுரிமை அளித்து, காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

நெய்வேலி நிலக்கரி போன்ற நிறுவனங்களில் தேர்வு செய்யப்பட்ட 600 பொறியாளர்களில் ஒருவர் கூட



தமிழர் தேர்வு செய்யப்படவில்லை என்ற செய்தி தமிழக இளைஞர்களுக்கு வேதனையை ஏற்படுத்துகிறது. இந்தி பேசாத மாநில மக்களிடத்தில் இளைஞர்கள் மத்தியில் இந்திய ஒற்றுமைக்கு எதிராக சிந்திக்கும் போக்கு வளர்ந்து வருகிறது.

ஒன்றிய அரசின் கல்விக்கொள்கை வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக வேலை வாய்ப்புகளில் இருந்து இளைஞர்களை அந்நியப்படுத்துகிறது. நீட் தேர்வு, ஆசிரியர் தகுதி தேர்வு, இன்னும் தேர்வு தேர்வு என்று கல்வி கற்று தேர்ச்சியடைவதற்கு தேர்வு எழுதுவதைவிட இது போன்ற தேர்வுகள் வெறுப்படையச் செய்கின்றன. ஒன்றிய அரசால் அறிவிக்கப்படும் தேர்வுகளை சந்திக்க ஏழை எளிய மக்கள் அதிகமான பொருட்செலவு செய்ய வேண்டியுள்ளது.

கல்விச்சாலைகள் பெருகுவதற்கு பதிலாக பயிற்சி மையங்கள் பெருகி வருகிறது. கல்வி கற்பதற்கு கட்டணக் கொள்ளை என்று குரல் ஒலித்துக்கொண்டிருக்கும் வேளையில் பயிற்சி மைய கட்டண கொள்ளை என்பது புதிதாக தோன்றியுள்ளது. வேலைக்கு செல்ல லஞ்சம் கொடுக்க வேண்டும், வேலைக்கு செல்வதற்கான பயிற்சி என்ற அடிப்படையில் பெரும் தொகை செலவாகிறது. கட்டணம் கட்டி தரமான கல்வி பெறமுடியாத பெரும் பகுதியான ஏழைகளுக்கு அதிகமான பணம் கட்டி, பயிற்சியில் சேர்வதற்கான வாய்ப்பு எங்கே இருக்கிறது?

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் தேர்வு வாரியத்தில் மிகப்பெரிய ஊழல் நடந்தது. இரவு காவலராகவும், ஆடு மேய்த்துக்கொண்டிருந்தவருமான இராமநாதபுரம் திருகராஜ் என்பவர் குரூப் 4 தேர்வில் மாநிலத்தில் குறுக்கு வழியில் முதலிடம் வந்ததின் மூலம் ஊழல் அம்பலமானது. இதே போல் தான் மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சியில் வியாபம் என்ற தேர்வு துறை ஊழல் நடைபெற்றது.

அதன் காரணமாக தேர்வு துறையின் மீது இளைஞர்களுக்கு இருந்த நம்பிக்கை போய் விட்டது. வேலையில்லா கொடுமை, அரசு அறிவிக்கும் தேர்வுகளுக்கு வேலையின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் லட்சக்கணக்கில் விண்ணப்பம் செய்கிறார்கள். குரூப் 2 தேர்வுக்கு 9 1/2 லட்சம் பேர் விண்ணப்பித்து தேர்வு எழுதினார்கள். மே மாதம் 21ம் தேதி தேர்வு எழுதி முடிவுக்காக 6 மாத காலம் காத்திருக்கிறார்கள்.

அதே போல் 20 லட்சம் பேர் குரூப் 4 தேர்வு எழுதியவர்களுக்கு, உரிய காலத்தில் முடிவை அறிவித்து, தேர்வு எழுதியவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு பதிலாக, தேர்வு வாரியம் காலதாமதம் செய்கிறது. காலதாமதம் ஊழலுக்கு வழிவகுக்கும் என்பதால் தேர்வு முடிவுகளை வெளியிட கால நிர்ணயம் செய்ய வேண்டும்.

கடந்த ஆட்சியில் நடந்த தவறுகள் களையப்பட வேண்டும். கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும். அரசின் சார்பில் பயிற்சி மையங்களை அதிகரிக்க வேண்டும், அரசு பயிற்சி மையங்களில் கற்றவர்கள் உறுதியாக தேர்ச்சி பெறுவர்கள் என்ற நம்பிக்கை உருவாக்கவேண்டும்.

தேர்வு துறையினரை முறைப்படுத்த நீதிமன்றம் உதவியாக இருக்க வேண்டும். நீதிமன்றமும் காலதாமதத்திற்கு உடந்தையாக இருக்கிறது என்ற நிலை வந்து விடக்கூடாது.

வேலை வாய்ப்புக்கான தேர்வுகள் நம்பிக்கை ஊட்டுகின்ற முறையில் தவறுகள் களையப்பட்டு முடிவு வெளியிடுவதில் காலதாமதம் தவிர்க்கப்பட்டு திறமையானவர்கள் வேலைக்கு செல்கின்ற முறையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

தொடர்புக்கு: 8248387433

# ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட ஏஐடியூசி 23வது மாநாடு




செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட ஏஐடியூசி 23 வது மாவட்ட மாநாடு 2022 அக்டோபர் 29ல் முத்தமிழ் அரங்கத்தில் (தோழர் கு.ராமதாஸ் நினைவரங்கம்) நடைபெற்றது.

பேரணி கடற்கரை கோவில் அருகிலிருந்து வரவேற்பு குழு தலைவர் ஆர்.தேவராஜ் தலைமையில் மாநில பொருளாளர் பி.பீட்டர் துவக்கிவைத்தார். ஏஐடியூசி கொடியுடன் உள்ளாட்சி, அணு ஆற்றல் துறை, மின்வாரிய, மீனவர் சங்கங்களை சார்ந்தவர்கள், ஆலை தொழிலாளர்களும் பெரும் அளவில் பங்கேற்றனர்.

பொது மாநாடு மாவட்ட தலைவர் எம்.சங்கையா தலைமையில் அணுசக்தி ஊழியர் சங்கத்தின் நிறுவன தலைவர்களில் ஒருவரான சி.சக்கரபாணி மாநாட்டு கொடியேற்றிய பின்பு தியாகிகளுக்கு அஞ் சலி செலுத்தப்பட்டது. வரவேற்பு குழு செயலாளர் ஏ.கருணாமூர்த்தி வரவேற்றார். பி. ரவிச்சந்திரன் மறைந்த தோழர்களுக்கு அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தபின் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநில பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி மாநாட்டை துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார். உலக தொழிற்சங்க சம்மேளன துணை பொதுச்செயலாளர் சி.ஸ்ரீகுமார், தொலை தொடர்பு ஊழியர் சம்மேளன மாநில செயலாளர் கே.நடராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி காஞ்சி மாவட்ட செயலாளர் பா.கார்த்திக், செங்கை மாவட்ட செயலாளர் ஏ.ராஜ் குமார், அணுசக்தி ஊழியர் சங்க முன்னாள் தலைவர் ஆர்.குருசாமி, தலைவர் ஆர்.சின்ன கோவிந்தன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

பின்னர் நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டில் பொதுச்செயலாளர் எம். ஜஹாங்கீர் வேலை அறிக்கை முன்வைத்து பேசினார். வி.ஆதிமூலம் வரவு செலவு அறிக்கை முன்வைத்தார். இரண்டும் விவாதத்திற்கு பின்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின்பு காஞ்சிபுரம், செங்கல்பட்டு என இரு மாவட்டமாக பிரிக்கப்பட்டு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

புதிய நிர்வாகிகளை மாநில துணைப் பொதுச் செயலாளர் கே.இரவி வாழ்த்தி மாநாட்டை நிறைவு செய்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட தலைவராக பி. பீட்டர், பொதுச் செயலாளராக ஏ.மூர்த்தி, பொருளாளராக கிருஷ்ணன், துணைத் தலைவர்களாக பா.கார்த்திக், பி.பாலகிருஷ்ணன், செயலாளராக வி.தங்கராஜ், எஸ்.வி.சங்கர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செங்கல்பட்டு மாவட்ட ஏஐடியூசி நிர்வாகிகள்: தலைவராக எம்.சங்கையா, பொதுச்செயலாளராக எம்.ஜஹாங்கீர், பொருளாளராக எஸ்.ராஜா, துணை தலைவர்களாக ஆர்.தேவராஜ், ஏ. ராஜ்குமார், வி.வீராசாமி, ஜி.சத்யா, எம்.வி.சங்கர்,

தலைமை நிலையச் செயலாளராக வி.ஆதிமூலம், அமைப்பு நிலை செயலாளராக பி.ரவிச்சந்திரன், சம்மேளன தொடர்பு செயலாளராக என்.அருள்தாஸ், பிரசுர செயலாளராக பி.பரத், பரப்புரை செயலாளராக ஜி.ஜெகதீசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மோடியின் நம்பிக்கை துரோகம்;
ஆளுநரின் அரசியல் அடாவடியைக் கண்டித்து

# ஆளுநர் மாளிகை நோக்கி நவ.26ல் விவசாயிகளின் மாபெரும் பேரணி

ஐக்கிய விவசாயிகள் முன்னணி அறிவிப்பு

ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் மாநில செயல்பாட்டாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங் கிணைப்பாளர்கள் கூட்டு கூட்டம் திருச்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அக்டோபர் 29 அன்று நடந்தது.

மாநில ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமையேற்று டெல்லி எஸ்கேஎம் முடிவுகளை விளக்கிப் பேசினார்.

இப் போராட்டத்தை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்திட வேண்டிய ஆலோசனைகளை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சாமி.நடராஜன் மற்றும் இதர சங்கங்களின் மாநில நிர்வாகிகள் விளக்கிப் பேசினார். இதன்மீது மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் பங்கு பெற்று, திரட்டலில் தங்கள் கடமைகளை ஏற்று பேசினர். நிறைவாக தமிழ்நாடு விவசா யிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தொகுத்து பேசினார். பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

நாடு தழுவிய விவசாயிகளின் டெல்லி போராட்டம் தொடங்கிய இரண்டாம் ஆண்டு தொடக்க நாளான நவம்பர் 26 அன்று, ஒன்றிய அரசு உறுதி அளித்ததற்கு மாறாக முந்தைய நடவடிக்கைகளை மீண்டும் விவசாயிகளுக்கும், இதரபகுதி மக்களுக்கும் எதிராக எடுத்து வருகிற துரோக நடவடிக்கைகளை கண்டித்தும், பாஜக அரசை வீழ்த்திடும் 2024 ஆம் ஆண்டை நோக்கியும் நமது போராட்டங்கள் தொடர்வதின் தொடக்கமாக இந்தியா முழுவதும் ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி முற்றுகை போராட்டம் நடத்தப்படுகிறது. இதன் அங்கமாக தமிழக மக்கள் ஒருமைப்பாட்டை குலைத்திடும் நிலையில் ஆளுநர் வரம்பை மீறி அரசியல் மதவெறியை தூண்டிவிடும் தமிழக ஆளுநரை கண்டித்தும், பாஜக அரசின் துரோகத்தை கண்டித்தும், சென்னை ஆளுநர் மாளிகை நோக்கி நவ. 26 அன்று பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், ஆதரவாளர்கள் பங்கு பெறுகிற போராட்டத்தை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது. இதை வெற்றிகரமாக்கிட அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை நடத்தி திட்டமிட முடிவெடுக்கப்பட்டது. எனவே இப் போராட்டத்தில் அனைத்து பகுதி மக்களும் பங்கேற்க வேண்டுகோள் விடப்பட்டது.

இவ்வாறு ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தியாக சீலர் தோழர் ப.மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு விழா!

**கோவை:** கோவை ஜீவா இல்லத்தில் நடைபெற்ற தியாக சீலர் தோழர் ப. மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.எம். செல்வராஜ் தலைமை தாங்கினார்.



மாவட்ட செயலாளர் சி.சிவசாமி துவக்கி வைத்தார். மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, புகழ் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ், மாவட்ட பொருளாளர் சி. தங்கவேல், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மௌனசாமி, மு.வ. கல்யாணசுந்தரம், மத்திய மண்டல செயலாளர் கே. ரவீந்திரன், மேற்கு மண்டல செயலாளர் என். சந்திரன், மோகன், வால்பாறை தாலுகா செயலாளர் எஸ். மோகன், காரமடை கிழக்கு ஆர். துரைசாமி, வி.ஆர்.பாண்டியன், யு.கே. சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் பிரபா ரவீந்திரன், சாந்தி சந்திரன், மத்திய மண்டல துணைச் செயலாளர் ஏ.பி.மணிபாரதி, பொருளாளர் என். நந்தகுமார், வழக்கறிஞர் சக்திவேல், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் கே.சுமதி, மதுக்கரை ஒன்றிய துணைச் செயலாளர் ஆர். கந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி புறநகர்:** திருச்சி பெரிய மிளகு பாறையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் ப. மாணிக்கம் படம் வைத்து மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்விற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் செ.ராஜ்குமார் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ் ஆகியோர் பங்கேற்று மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார். இதில் விவசாய சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன், புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி, மாநகர் இடைக்கமிட்டி செயலாளர்கள் இரா.சுரேஷ் முத்துசாமி, எம். ஆர்.முருகன், சையது அபுதாஹிர், ஏ.பால்கிருஷ்டி, எஸ்.பார்வதி, எம்.ஆர். எஸ் ராஜலிங்கம், மூத்த தோழர் பொன்னுதுரை, மாநகர் மாவட்ட குழு உறுப்பினர்கள் சொக்கி சண்முகம், எஸ் .செல்வகுமார்,எஸ்.சூர்யா, ஏர்போர்ட் பகுதி துணைச் செயலாளர் ராஜா, புறநகர் மாவட்ட நிர்வாகிகள் பழனிச்சாமி, சிவா உள்ளிட்ட பங்கேற்றனர். இறுதியில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் க.இப்ராகிம் நன்றி உரையாற்றினார்.

**மணப்பாறை:** மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வளாகம் முன்பு ப. மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி புகழஞ்சலி நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு நகர செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் தங்கராஜ் முன்னிலை வகித்தார். கட்சியின் முன்னாள் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் த.இந்திரஜித் புகழஞ்சலி உரை நிகழ்த்தினார்.

புறநகர் மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத் அலி, ரவிச்சந்திரன் ரஹ்மத்துனிஷா, ஏ ஐ டி யு சி அரசு போக்குவரத்து கழக மண்டல செயலாளர் சுப்பிரமணியன், அமைப்புசாரா தொழிற்சங்க பொதுச் செயலாளர் நல்லுசாமி, மருங்காபுரி ஒன்றிய செயலாளர் வெள்ளகண்ணு உட்பட நகர, ஒன்றிய பொறுப்பாளர்கள் பங்கேற்று ப.மாணிக்கம் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி புகழஞ்சலி செலுத்தினர்.



**சோமரசம்பேட்டை:** திருச்சி சோமரசம்பேட்டையில் உள்ள ஏஐடியூசி தலைமை அலுவலகத்தில் ப. மாணிக்கம் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தி கொடி ஏற்றப்பட்டது.

சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்தழகு தலைமை வகித்தார். மணிகண்டம் ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன், மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.முத்துலெட்சுமி, ஒன்றிய நிர்வாகி குழு உறுப்பினர் எம்.மருதம்பாள் ஆகியோர் பங்கேற்று மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தி கொடி ஏற்றினார். டி.நிர்மலா நன்றி கூறினார்.

**கும்பகோணம்:** கும்பகோணம் கட்சி அலுவலகத்தில் ப.மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் ஆர்.தில்லைவனம் பங்கேற்று சிறப்புரையாற்றினார். கட்சியின் மாவட்ட பொருளாளர் ஏ.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் டி.ஆர்.குமரப்பா, தங்க.சக்கரவர்த்தி, கும்பகோணம் ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.பாலன், பாபநாசம் ஒன்றிய செயலாளர் பொன்.சேகர், கும்பகோணம் மாநகராட்சி பொறுப்பாளர்கள் எம்.சீனிவாசன், ஆர்.கே. ரவீந்திரன் ஜெ.ஆர்.குமார், மார்க்கெட் .எஸ்.ரவி, ஏஐடியுசி மாவட்டத் துணைச் செயலாளர் கோ.மணிமூர்த்தி, விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகள் ஏ.எம்.ராமலிங்கம், க.வெங்கடேஷ், விதொச மாவட்ட தலைவர் ஆர்.எஸ். பாலு உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினர்.

**திருக்காட்டுப்பள்ளி:** தஞ்சை வடக்கு மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி கிளையில் பா.மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெற்றது. கிளைச் செயலாளர் எம் பிரபாகரன் தலைமை வகித்தார். ஒன்றிய குழு உறுப்பினர் டி.ராமச்சந்திரன், எம்.துரைராஜ் உள்ளிட்ட முக்கிய பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.



**கன்னியாகுமரி:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் குமரி மாவட்ட குழு சார்பில் ப.மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு நினைவு நிகழ்வு கொண்டாடப்பட்டது. கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார். மாநகர கிளைச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து மாநகர பொருளாளர் கே.நாகராஜன், உறுப்பினர்கள் சிங், சுரேஷ், ஆரல்கிளை செயலாளர் வி.அருள்குமார், முன்னாள் கிளைச்செயலாளர் ஆரல் சுப்பிரமணியம், கல்விமைய செயலாளர் அசோகன், அகில இந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் சிவகிரி நகரகுழு சார்பில் ப. மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு நாளில் அவர் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது!

நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், துணை செயலாளர் குருவு, விவசாய சங்க செயலாளர் பா. வேலுச்சாமி, ஏஐஒய்எப் நகர செயலாளர் பால்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கீழ ஆம்பூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ப.மாணிக்கம் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தலைமை அரிகரன், முன்னிலை சட்டவாக்கப், வேலாயுதம் மாநில குழு உறுப்பினர் கலந்து கொண்டனர்.

செங்கோட்டை தாலுகா அலுவலகம் முன்பு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தாலுகா செயலாளர் ஆழ்வார், மாவட்ட குழு உறுப்பினர் மாரியப்பன், போஸ், தாலுகா குழு உறுப்பினர் சுப்பிரமணியன், நகர செயலாளர் சுந்தர், விவசாய சங்கம் பழனிச்சாமி, தாலுகா குழு உறுப்பினர் சுடலை, முத்துகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புளியங்குடியில் ப.மாணிக்கத்தின் நூறாண்டு நிறைவு நாளில் வாசு ஒன்றிய செயலாளர் வேலு தலைமை தாங்கினார். ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் சுப்பையா சிறப்புரை ஆற்றினார்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர் தொகுதியில் ப.மாணிக்கம் திருஉருவப்படத்தை திறந்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஜா.பூபாலன் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் பா.கார்த்திக் கலந்து கொண்டார். ரவி, முனுசாமி, மதியழகன், சிங்காரவேலர், ராஜேந்திரன், ஜார்ஜ், பிரணவ், ரக்ஷீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செங்கல்பட்டு:** இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி செங்கல்பட்டு மாவட்ட குழு அலுவலகம் மறைமலை நகரில் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. மாநில குழு உறுப்பினர் டாக்டர் ஆர்.சாந்தி, முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன், மாவட்ட துணை செயலாளர் வீராசாமி, வி.தொ.ச. மாவட்ட செயலாளர் பி.எஸ்.எல்லப்பன், மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ், கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் சி.ராமலிங்கம், இளைஞர் பெருமன்ற செங்கல்பட்டு தொகுதி தலைவர் எஸ்.விஜயன், பல்லாவரம் சந்திரசேகர், கல்பாக்கம் கர்ணன் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.



**ஆண்டிபட்டி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டிபட்டி ஒன்றிக்குழு அலுவலகத்தில் ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் வே.பரமேஸ்வரன், நகர செயலாளர் க.முனீஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் ப.மாணிக்கம் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

**மதுரை புறநகர்:** மதுரை புறநகர், திருப்பரங்குன்றம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், ப.மாணிக்கம் 100வது நிறைவு விழாவையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல் தலைமையில், ஒன்றிய செயலாளர் விஜயா, மாதர் சங்க மாவட்ட பொறுப்பாளர் நாகஜோதி, தொழிற் சங்க பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன் மற்றும் கட்சியின் தோழர்கள் பலர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



## ஏஐடியூசி கிளை துவக்கம்

மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இயங்கும் கே டி கே தங்கமணி அரங்கத்தில், மணப்பாறை ஒன்றியம் கருப்பூர் ஊராட்சியில் பணிபுரியும் தூய்மை பணி மற்றும் தூய்மை பணி காவலர்கள் தொழிற்சங்க அமைப்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திருச்சி மாவட்டம் உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியூசி சங்கம் புத்தாநத்தம் கிளை தலைவர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார். மாவட்ட பொறுப்பாளர் சுப்பிரமணியன் சங்கத்தின் அமைப்பு நிலை குறித்து உரை நிகழ்த்தினார். சங்க தலைவராக ஜனசக்தி உசேன், துணைத் தலைவராக மருதை வீரன், செயலாளராக பழனியம்மாள், துணை செயலாளர்களாக அழகம்மாள், மாரியம்மாள், பொருளாளராக சக்திவேல் ஆகியோர் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

## ஆட்டோ தொழிலாளர் சங்க துவக்க விழா

தென்காசி மாவட்டம் அய்யாபுரத்தில் ஏஐடியூசி ஆட்டோ ஓட்டுனர், உரிமையாளர் சங்கம் தொடங்கப்பட்டது. சங்க பெயர் பலகையை குத்துக்கல் பஞ்சாயத்து தலைவர் சத்யராஜ் திறந்து வைத்தார். கே.திரவியம் தலைவராகவும், எம்.ரவி செயலாளராகவும், சீ.ஆனந்தராஜ் பொருளாளராகவும், நிர்வாக குழு உறுப்பினர்களாக சசிகுமார், ஆறுமுகம், வேல்ராஜ், தங்கப்பாண்டியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சிபிஐ மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் டி. சுப்பையா, ஏஐடியூசி மாவட்ட தலைவர் சி. சுப்பிரமணியன், மாவட்ட ஆட்டோ சங்க செயலாளர் வி.முனியாண்டி, மாவட்ட கட்டட சங்க செயலாளர் எஸ்.ஆழ்வார், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.மாரியப்பன், விவசாய சங்கம் எஸ்.சுந்தர், சிபிஐ தாலுகா குழு உறுப்பினர் கே.பழனிச்சாமி, நயினார் கலந்து கொண்டனர்.

# த.க.இ.பெ. வடமதுரை கிளை தொடக்கம்



வடமதுரை கலைமகள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் வடமதுரை கிளை தொடக்க விழா நடைபெற்றது. வெள்ளைச்சாமி தலைமை தாங்கினார். ராஜாராம் வரவேற்புரை ஆற்றினார்.

தகஇபெ மாநில பொதுச்செயலாளர் த.அறம் சிறப்புரையாற்றினார். பெ.கிருஷ்ணசாமி, தமிழ்நாடு மாநில குடிநீர் தொட்டி இயக்குனர்,பெ.தர்மரா, டாக்டர் சகாய செல்வராஜ், டாக்டர் தாரகை வாழ்த்துரை வழங்கினர். கோ.நாகேந்திரன், பரிமளா, பிரபாகர், பாலசுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிளைத் தலைவராக கோ.நாகேந்திரன், செயலாளராக ராஜாராம், பொருளாளராக பாலசுப்பிரமணி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மணப்பாறை

# ஏஐடியூசி உள்ளாட்சி சங்க ஆண்டுப் பேரவை

திருச்சி புறநகர் மாவட்டம், மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இயங்கும் ஆர்.வி.பி. மன்ற வளாகத்தில் திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி சங்க மணப்பாறை கிளை ஆண்டு பேரவை நடைபெற்றது.

இப்பேரவைக்கு பழனிச்சாமி தலைமை வகித்தார். மறைந்த சங்க நிர்வாகிகளுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டன.

சங்க செயலாளர் பழனிச்சாமி வேலை அறிக்கையையும், பொருளாளர் காமாட்சி வரவு செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். விவாதத்திற்கு பின் ஏகமனதாக ஏற்கப்பட்டது.

கௌரவ தலைவர்களாக முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சௌகத்அலி, நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி, தலைவராக த.இந்திரஜித், துணைத் தலைவர்களாக ஜனசக்தி உசேன், பழனிச்சாமி, குமார், ஜெயலெட்சுமி, காளிமுத்து, நல்லுச்சாமியும், செயலாளராக காமாட்சி, துணைச் செயலாளர்களாக சுப்ரமணியன், பிச்சை, கணேசன், கோட்டையம்மா, அருணகிரி, தமிழரசனும், பொருளாளராக செல்வமும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி போக்குவரத்து கழக மண்டல துணைத் தலைவர் சுந்தராஜ், மாசிமலை, முத்துச்சாமி ஆகியோர் உரை நிகழ்தினர். ஜனசக்தி உசேன் நன்றி கூறினார்.

# களக்காடு பவானி அம்மா மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



பேராசிரியர் ந. முத்து மோகன் தாயார் திருமதி பவானி அம்மா (85) அக்.30 அன்று திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில் காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து, ஆழ்ந்த வேதனையுற்றோம்.

களக்காடு வட்டாரத்தில் கட்சி அமைப்புகளை கட்டியமைத்த முன்னோடியும், விவசாயிகள் சங்கத்தின் மூத்த தலைவருமான சிதம்பராபுரம் தோழர் எம். நடராஜன் வாழ்விணையரான திருமதி பவானி அம்மையார் கட்சி இயக்கங்களிலும் முனைப்போடு பங்கேற்றவர்.

கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் தலைமறைவாக செயல்பட்ட தோழர்கள் கே. பாலதண்டாயுதம், ப. மாணிக்கம், பேராசிரியர் நா.வானமாமலை, பூதலபுரம் வேலுசாமி தேவர் போன்ற தலைவர்களை பாதுகாத்த குடும்பம் சிதம்பரபுரம் எம்.நடராஜன் பவானி அம்மா குடும்பம். இவர்களுக்கு முனைவர் ந. முத்துமோகன், அஜாய், தாயம்மாள், கல்பனா, சித்ரா, விமலா ஆகிய புதல்வர்கள். இவர்களில் அஜாய் காலமாகிவிட்டார். மூத்த மகன் முனைவர் ந.முத்து மோகன் தத்துவங்கள் குறித்த ஆய்வாளர். கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைமைக் குழு உறுப்பினர் என்பது குறிப்பிடப்பட்டது.

திருமதி பவானி அம்மாள் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## கோவை கார் வெடிப்பு – தொடரும் பயங்கரம்

# அனைவரும் ஒருங்கிணைந்து சமூக நல்லிணக்கத்தை பாதுகாக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

கடந்த 23.10.2022 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை நேரத்தில் கோவை, கோட்டை, ஈஸ்வரன் கோயில் அருகில் கார் சிலிண்டர் வெடித்ததில் ஜமேஷா முபின் (22) என்ற துணி வியாபாரி சம்பவ இடத்திலேயே கருகி இறந்து போனார். காரும் எரிந்துவிட்டது. இந்தச் சம்பவம் கோவை மாநகரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஆனால் இந்த சம்பவம் நிகழ்ந்தவுடன் காவல்துறை விரைந்து செயல்பட்டதும் காவல்துறை தலைமை இயக்குநர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, விசாரணையை தீவிரப்படுத்தியதும் பொது மக்களின் அச்சம் தணிக்க உதவியது. இதன் தொடர்ச்சியாக சமூக அமைதியை சீர்குலைக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. இந்தச் சதிவலையில் தொடர்புடைய 5 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் விசாரணை தொடர்கிறது.

இந்த நிலையில் மத அடிப்படைவாத, வன்முறை செயலில் ஈடுபடுவோருக்கு சமூகத்தின் ஆதரவு இல்லை என இஸ்லாமியர்களின் ஜமாத்துகள் அறிவித்திருப்பது மதவெறி வன்முறையாளர்களை தனிமைப்படுத்தவும், மதச்சார்பற்ற சக்திகளின் பரந்துபட்ட ஒற்றுமை வலிமை பெறவும் உதவும் நடவடிக்கையாகும். குற்றச் செயலுக்கான சதிவேலைகள் எல்லை தாண்டி அமைந்திருக்கக் கூடும் என்ற கருத்தில் மாநில அரசு தேசிய புலனாய்வு முகமை விசாரணைக்கு பரிந்துரைத்திருப்பது சரியான நடவடிக்கைதான். இதனால் தமிழ்நாடு காவல்துறையின் துப்பறியும் திறனை குறைந்து மதிப்பிடக் கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக சமூக சீர்குலைவு சக்திகளின் நடவடிக்கைகளை ஒரு மதத்திற்கு எதிராக பயன்படுத்துவதை மக்கள் எச்சரிக்கையோடு நிராகரிக்க வேண்டும் என்று கோவை மாவட்ட அரசியல் கட்சிகள், பொதுநல அமைப்புகளின் வேண்டுகோளை அனைத்துப் பிரிவு மக்களும் ஆதரித்து, ஓரணி திரண்டு சமூக நல்லிணக்கம் பாதுகாக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# இலங்கை கடற்படையினரின் தமிழக மீனவர்களின் மீதான துப்பாக்கிச் சூடு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

சுற்றி வளைப்பது, துரத்தி துரத்திச் சுடுவது, படகுகளை பறிமுதல் செய்வது, வலைகளை அறுப்பது, பிடித்த மீன்களை கடலில் கொட்டுவது, சிறையில் அடைப்பது என சர்வதேச கடல் எல்லை மீன்பிடி விதிகளை அப்பட்டமாக இலங்கை கடற்படை மீறி வருகிறது.

தொடரும் இச்செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வன்மையாக கண்டிக்கிறது.

தற்போது இந்திய கடற்படையினராலும் தமிழக மீனவர்களுக்கு இடர்கள் ஏற்படுகிறது. கோடியக்கரையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஐஎன்எஸ் பங்காரம் என்ற கப்பல், படகுகளை நிறுத்துமாறு எச்சரித்துள்ளது. தொடர் மழை, இலங்கை கடற்படையினரால் ஏற்படும் அச்ச சூழல் என தமிழக மீனவர்கள் கடந்து செல்லும் போது, இந்தியக் கடற்படையினர் நடத்தியத் துப்பாக்கிச் சூட்டில் வீரவேல் என்ற மீனவரின் வயிற்றிலும், தொடையிலும் குண்டு பாய்ந்தது.

மீனவர்களின் படகுகளை வளைத்து, தடுத்து விசாரிக்க இயலும். அவ்வாறு இல்லாமல் துப்பாக்கிச் சூடு என்பது அதிர்ச்சி அளிக்கிறது. தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பாளிக்க வேண்டிய கடற்படையினரே துப்பாக்கிச் சூடு நடத்துவது எந்த வகையிலும் ஏற்க இயலாது. ஒன்றிய அரசு உடனடியாக இதில் கூடுதல் கவனம் செலுத்தி தமிழக மீனவர்களின் வாழ்வாதாரச் சூழலை உறுதிப்படுத்த வேண்டும். இனி இதுபோல் நிகழாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## டி.என்.பாளையம் வட்டார கல்வி அலுவலகம் முன்பு

# பழங்குடி குழந்தைகள் பெற்றோர்களுடன் போராட்டம்!

விளாங்கோம்பையில் பள்ளி தொடங்கிட கேட்டு, கல்வி மறுக்கப்பட்ட பழங்குடி குழந்தைகள் தங்களின் பெற்றோர்களுடன் டி. என்.பாளையம் வட்டார கல்வி அலுவலகம் முன்பு தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் வட்டம், டி.என்.பாளையம் வட்டாரம், கொங்கர்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட விளாங்கோம்பை கிராமத்தில் 45 ஊராளி இனபழங்குடி குடும்பங்கள் வசிக்கின்றன.

குண்டேரிப்பள்ளம் அருகே வினோபாநகர் வரை போக்குவரத்து வசதியுள்ளது. இந்த வினோபா நகரிலிருந்து 8 கிலோமீட்டர் சாலை வசதியற்ற அடர்ந்த வனப் பகுதியில் நடந்தே தான் செல்ல வேண்டும். யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகளின் நடமாட்டம் மிக்க ஒரு பகுதியாக உள்ளதால் இந்தப் பாதையில் ஆள் நடமாட்டமே இருக்காது.

இந்த விளாங்கோம்பை கிராமத்தில் பள்ளி செல்லும் வயதில் 30 குழந்தைகள் உள்ளன. இவர்கள் பள்ளிக்கு செல்ல வேண்டுமாயின் அடர்ந்த வனப்பகுதியில் நான்கு காட்டாறுகளை கடந்து இந்த வனச்சாலையில் 8 கிலோமீட்டர் பயணிக்க வேண்டும்.

2014 ஆம் ஆண்டு இங்கு ஒரு குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளி தொடங்கப்பட்டது. இந்தப் பள்ளியினையும் கடந்த ஆண்டு மத்திய அரசு மூடிவிட்டது. ஆகவே இந்த குழந்தைகளில் 20 பேர் வினோபா நகர் நடுநிலைப் பள்ளியிலும், 10 பேர் கொங்கர் பாளையம் உயர்நிலைப் பள்ளியிலும் சேர்க்கப்பட்டனர். ஒரு தனியார் சரக்கு வாகனத்தில் வந்து சென்றனர்.

இந்த காட்டாறுகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து வந்ததால் பாதை முற்றாக சீரழிக்கப்பட்டு தற்போது எந்த வாகனமும் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இக்குழந்தைகளின் கல்வி முற்றாக தடைபட்டுள்ளது.

இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் படி ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் ஒரு தொடக்கப் பள்ளியை ஏற்படுத்த வேண்டும்.

ஆகவே பள்ளிக்கல்வித்துறை உடனடியாக இந்த விஷயத்தில் தலையிட்டு விளாங்கோம்பை கிராமத்திலேயே நிரந்தரமாக ஒரு தொடக்கப் பள்ளியை தொடங்க வேண்டும் என தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுடன் டி.என்.பாளையம் வட்டார கல்வி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தினை நடத்தினர்.

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் டி.என்.பாளையம் வட்டாரத் தலைவர் கார்த்தி வேல் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சங்கத்தின் மாநிலத் தலைவர் வி.பி.குணசேகரன், மாவட்டத் தலைவர், பி.வி.பாலதண்டாயுதம், மாநில பொருளாளர் கடம்பூர் ராமசாமி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மோகன்குமார், மாவட்ட குழு உறுப்பினர்கள் ஆ.கு.பரமேஸ்வரன், ஆர் ஸ்டாலின் சிவகுமார், டி என் பாளையம் ஒன்றிய செயலாளர் செல்வராஜ், விளாங்க கோம்பை மாது உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். வட்டார கல்வி அலுவலர் அவர்களிடம் மனு வழங்கப்பட்டது.

அதேபோல வினோபா நகரிலிருந்து விளங்கோம்பை வரை உள்ள வனச்சாலையை செப்பனிட்டு தூக்கோரி பங்களாப்புதூரில் உள்ள டி.என்.பாளையம் வனச்சரக அலுவலரிடம் மனு வழங்கப்பட்டது.

# கட்டணக் குறைப்பு: வெளிநாடுகளில் மருத்துவம் பயின்றோர் ஆர்ப்பாட்டம்




வெளிநாட்டில் மருத்துவம் படித்து முடித்த 800 க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள், பயிற்சி மருத்துவராக பணிபுரிவதற்காக காத்திருக்கின்றனர்.

அவர்கள் பயிற்சி மருத்துவத்தை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவருகிறது. இது வரவேற்கத்தக்கது. அதற்கான அரசணையை உடனடியாக வெளியிட வேண்டும்.

வெளிநாடுகளில் படித்த மருத்துவ மாணவர்கள் பயிற்சி மருத்துவராக சேர்வதற்கு ரூ.2 லட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டுவந்தது. இக்கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும்.

பயிற்சி மருத்துவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக் கால உதவி ஊதியத்தையும் வழங்கிட வேண்டும் என சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் (வெளிநாட்டுப் பிரிவு) கோரி போராடி வந்தது.

இக்கோரிக்கைகளை ஏற்ற தேசிய மருத்துவ ஆணையம் அவற்றை நடைமுறைப்படுத்திட வேண்டுமென அனைத்து மாநிலங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியது. தமிழ்நாடு அரசும் இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவிப்பை ஜூலை 29 அன்று வெளியிட்டது. அது வரவேற்புக்குரியது; பாராட்டத்தக்கது.

ஆனால், அதை நடைமுறை படுத்துவதற்கான அரசாணையை இதுவரை தமிழ்நாடு அரசு வெளியிடவில்லை. இதனால் இம்மாணவர்கள் கவலை அடைந்துள்ளனர். எனவே, இதற்கான அரசாணையை உடனடியாக வெளியிட வேண்டும்.

இதன் மூலம் வெளிநாட்டில் படித்த இந்த மருத்துவ மாணவர்கள் பயன் பெறுவதோடு, தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள 11 புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு சிகிச்சைக்காக வரும் லட்சக்கணக்கான நோயாளிகளும் பயன் பெறுவர். பயிற்சி மருத்துவர்களோ, பட்ட மேற்படிப்போ இல்லாத இந்த 11 மருத்துவக் கல்லூரிகளும் பயனடையும்.

எனவே, இக்கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டும் என வலியுறுத்தி,கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நவ.02 அன்று சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர்கோட்டம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் வெளிநாட்டு பிரிவுச் செயலாளர் ம.செந்தில்குமார் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்குகினார்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு மருத்துவ மாணவர் சங்கத்தின் வெளிநாட்டுப் பிரிவு மாநிலத் தலைவர் கே. ராகவன், துணைத் தலைவர் எம்.வளவன், பொருளாளர் எஸ்.சி.மணிகண்டன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து நிறைவுரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில், வெளிநாடுகளில் படித்த 250 க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர்.

# வடசென்னை கட்டட தொழிலாளர் சங்க மாநாடு

தமிழ்நாடு ஏ ஐ டி யு சி கட்டட தொழிலாளர் சங்கத்தின் வடசென்னை மாவட்ட ஏழாவது மாநாடு வியாசர்பாடி வீரா கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் எம்.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். மாநாட்டு கொடியை சங்கத்தின் கவுரவத் தலைவர் சூரப்பட்டு டி.திருநாவுக்கரசு ஏற்றி வைத்தார். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு தமிழ் தாய் வாழ்த்து பாடப்பட்டது.

மாநாட்டை துவக்கி வைத்து மாநிலச் செயலாளர் ஆர்.துரைசாமி சிறப்புரையாற்றினார். பெரம்பூர் பகுதி செயலாளர் டி.வேதாச்சலம் வரவேற்புரை ஆற்றினார். இரங்கல் தீர்மானத்தை வி.கே.ராஜா முன்மொழிந்தார். வேலை அறிக்கை முன்வைத்து மாவட்ட செயலாளர் ஏ.அருள் பேசினார். வரவு செலவு கணக்கை மாவட்ட பொருளாளர் எஸ்.வெங்கடேசன் வாசித்தார். பிரதிநிதிகளின் விவாதத்திற்கு பிறகு அறிக்கையை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புதிய நிர்வாகிகளை மாநிலச் செயலாளர் ஆர்.துரைசாமி அறிமுகம் செய்து வைத்தார். மாநாட்டை நிறைவு செய்து ஏஐடியூசி மாவட்ட கவுரவத் தலைவர் எஸ்.குப்பன் உரையாற்றினார்.

கட்டுமான தொழிலாள்களுக்கு ஓய்வூதியம் ரூ.6000, பெண் கட்டுமான தொழிலாள்களுக்கு 50 வயதில் ஓய்வூதியம், கட்டுமான தொழிலாளர் அனைவருக்கும் வீடு வழங்க வேண்டும்,

குழந்தைகளின் கல்விச் செலவை முழுவதுமாக வாரியம் ஏற்க வேண்டும், 1982 சட்டத்தில் உள்ளபடி இஎஸ்ஐ ,பிஎப், பென்ஷன் உள்ளிட்டவைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை கேட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவாக கண்ணன் நன்றி கூறினார்.

கௌரவத் தலைவராக டி.திருநாவுக்கரசு, மாவட்டத் தலைவராக எம்.எஸ்.மூர்த்தி, துணைத் தலைவர்களாக ஜி.சுப்பிரமணி, ஏ.டி.கிறிஸ்டோபர், டி.சுரேஷ், மாவட்டச் செயலாளராக ஏ.அருள், துணை செயலாள்களாக எம்.கண்ணன், பி. மணிமாறன், வி.கே.ராஜா, பொருளாளராக எஸ்.வெங்கடேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# இலா பட் மறைவுக்கு ஏஐடியூசி இரங்கல்

தொழிலாளர் உரிமைகள் செயற்பாட்டாளரும், காந்தியவாதியும், சேவா (Self Employed Women's Association) அமைப்பின் நிறுவனருமான இலா பட் (வயது 86) மறைவுக்கு ஏஐடியூசி அதன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

அயராத போராளியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த அவரது மறைவு இந்திய தொழிலாளர் உரிமைகள் இயக்கத்திற்கு ஒரு இழப்பு ஆகும். அவரது நினைவைப் போற்றும் வண்ணம் ஏஐடியூசி வீரவணக்கம் செலுத்துகிறது; அவரை இழந்து வாடும் சேவா அமைப்பினர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் துயரத்தில் பங்கு கொள்கிறது.

பெண்கள் மற்றும் தொழிலாளர்கள் உரிமைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இலா பட் அவர்களின் மகத்தான பங்களிப்பு, அவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது. நெல்சன் மண்டேலா மற்றும் தேஷ்மோண்ட் டுடு ஆகியோர் நிறுவிய உலக தலைவர்களின் குழுவில் இவரும் ஒரு உறுப்பினர் ஆவார். பாலஸ்தீன பிரச்சனை உள்ளிட்ட சில சர்வதேச பிரச்சனைகள் தொடர்பாக பல தேர்ந்த ஆலோசனைகளை அக்குழுவில் வழங்கினார். அவர்தம் அயராத உழைப்பு உரிய அங்கீகாரத்தையும், பரிசுகளையும் அவருக்குப் பெற்றுத் தந்தது. அவர்தம் உறுதிப்பாடு மிக்க கடும் உழைப்பு பல லட்சக்கணக்கான பெண்களுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது.

தொழிலாளர் மற்றும் பெண்கள் உரிமைகள் மறுக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் வரும் இந்தத் தருணத்தில்..., போராடிப் பெற்ற உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தொழிற்சங்க இயக்கம் போராடி வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தஇந்தநேரத்தில்...,இலாபட் அவர்களின்மறைவு உண்மையில் ஒரு மாபெரும் இழப்பு ஆகும்.

அவர் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டுடன், அவரது புகழார்ந்த மரபை சேவா அமைப்பினர் முன்னெடுத்துச் செல்லட்டும்!

இவ்வாறு ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜீர் கவுர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# ஆளுநரின் பொறுப்பற்ற பேச்சு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கோவை, கார் சிலிண்டர் வெடிப்பு தொடர்பான வழக்கில் தமிழ்நாடு அரசு தாமதம் செய்ததாக புகார் கூறியுள்ளார். கோவை இயற்கை மருத்துவக் கல்லூரி, மாணவர் விடுதியை திறந்து வைக்கும் நிகழ்வில், மாணவர்கள மத்தியில் பேசிய ஆளுநர் எதன் அடிப்படையில் புகார் கூறினார்?

கோவையில் கடந்த 23, ஆம் தேதி கார் சிலிண்டர் வெடித்ததில் ஜமேஷா முபின் என்பவர் தீயில் கருகி மரணமடைந்தார். அதிகாலையில் இந்தச் சம்பவம் நடந்த நிலையில், சட்டம் ஒழுங்கு கூடுதல் தலைமை காவல்துறை இயக்குநரும், காவல்துறை தலைமை இயக்குநரும் ஒரு சில மணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணை செய்துள்ளனர். கோவை மாநகரக் காவல் ஆணையர் மற்றும் தனிப்படைக் காவல்துறையினர் விரைந்து செயல்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான முதல் கட்ட விசாரணையைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் மாண்புமிகு. முதலமைச்சர், உயர்நிலைக் கூட்டம் நடத்தி, கோவை குற்றம் சம்பவத்தின் விசாரணை எல்லைகளை கருத்தில் கொண்டு வழக்கை தேசிய புலானாய்வு முகமையின் (என்ஐஏ) விசாரணைக்கு வழங்குவது என்று முடிவு எடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அலுவல் சார் நன்முறைகள் உடனடியாக தொடங்கின. இது தான் நிலை என்கிற போது, எங்கே தாமதம் ஏற்பட்டது? சாட்சியங்கள் மறைக்கப்படும், அழிக்கப்படும் வாய்ப்பு எங்கே ஏற்பட்டது? ஆளுநர் புகாருக்கு ஆதாரம் என்ன?

சரி, கார் சிலிண்டர் வெடிப்பில் மரணமடைந்த ஜமேஷ முபினிடம் 2019 ஆம் ஆண்டு என்ஐஏ விசாரணை அதிகாரிகள் விசாரித்துள்ளனர்? என்ஐஏ விசாரணை வளையத்தில் இருந்து, கண்காணிப்பு எல்லைக்குள் இருந்தார். அவர் எப்படி சுதந்திரமாக நடமாட முடிந்தது என்ற வினாவிற்கு ஒன்றிய உள்துறை அமைச்சகம் தான் விளக்கம் கூற வேண்டும். இதுபோன்ற வினாக்களை கருத்தில் கொள்ளாமல், அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட, உயர் பொறுப்பில் இருக்கும் ஆளுநர், பொறுப்பற்ற முறையில் பேசி, மலிவான அரசியலில் ஈடுபட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# திருவள்ளூர் மாவட்ட ஆட்டோ - வேன் ஓட்டுநர்கள் சங்க மாநாடு

ஏஐடியூசி திருவள்ளூர் மாவட்ட ஆட்டோ – வேன் ஓட்டுனர்கள் சங்கத்தின் 5 வது மாவட்ட மாநாடு, காக்கி சட்டை பேரணியாக, ஆவடி அண்ணா சிலை அருகில் தொடங்கி ஒ.சி.எப். ஒர்க்கர்ஸ் யூனியன் அரங்கத்தில் சென்றடைந்தது.

ஆட்டோ தொழிற்சங்க ஏஐடியூசி கொடியை அண்ணனூர் கிளை நிர்வாகி தேவராஜ் ஏற்றி வைத்தார். வி.ராமானுஜம் தலைமை தாங்கினார். திருவள்ளூர் மாவட்ட பொதுச் செயலாளர் ஆட்டோ மா பட் வரவேற்புரையாற்றினார். மாவட்ட மாநாட்டில் உலக தொழிற்சங்க சம்மேளன துணைப் பொதுச் செயலாளர் சி ஸ்ரீகுமார், ஏஐடியூசி மாநில துணைத் தலைவர் ஏ.எஸ்.கண்ணன், ஆட்டோ சம்மேளன மாநில பொதுச் செயலாளர் பி.மாரியப்பன், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் கே.கஜேந்திரன், ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.மயில்வாகனன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளர் சரவணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்டோ –வேன் ஓட்டுனர்கள் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டத் தலைவராக ஏ.இம்தியாஸ் பாஷா, மாவட்ட பொதுச் செயலாளராக ஆட்டோ மா பட், மாவட்டப் பொருளாளராக ஜி.கிருஷ்ணமூர்த்தி, மாவட்டத் துணைத் தலைவர்களாக எஸ்.ராபின், கே.சரவணன், ஜெ.வெங்கடேசன், எம்.பி.குமார், துணை செயலாளர்களாக எஸ்.ராஜ்குமார், எஸ். லோகநாதன், எஸ்.தேவேந்திரன், ஜி.பிரகாஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# இந்த வார தம்பிக்குறள்

## 94. வியக்க வினையாற்றல்

**ஆற்றும்நம் ஆற்றலே ஆனந்தம் ஆகையால்**
**போற்றியாற்றி பூரிப்பைக் கொள்.**


உழைப்பது தான் உலகின் மகிச்சியான செயலாகும். ஆகவே, உழைப்பைப்போற்றி உழைத்து மகிச்சி அடைக.

**வயதொருவர்க் கில்லைஇ நூற்றுக்கு மேலே**
**நயத்தால் வினையை நய.**

ஒருவருக்கு நூறு வயதுக்குமேல் வழ்வில்லை. ஆகவே உழைக்கும் காலத்தில் உழைப்பை விரும்புக.

# நூல் நயம்

## ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு




தமிழ்நாட்டின் மிகச் சிறந்த விடுதலைப் போராட்ட வீரரும், பொதுவுடைமை இயக்கத்தின் மாபெரும் தலைவரும், தொழிற்சங்க தலைவரும், மக்கள் அனைவராலும் இலக்கிய பேராசான் என அன்போடு அழைக்கப்பட்ட ஜீவா என்கிற ப.ஜீவானந்தம் அவர்களின் வாழ்க்கை வரலாற்று சுருக்கமே இஸ்மத்பாட்சா எழுதிய ''ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு'' என்னும் இந்நூல்.

''தண்ணீர்விட்டா வளர்த்தோம், சுதந்திர பயிரை கண்ணீரால் வளர்த்தோம் கருகத்திருஉளமே'' என இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தை பல்வேறு வீரர்களின் கண்ணீராலும், செந்நீராலும் போராடி பெறப்பட்டதே இந்திய நாட்டின் விடுதலை சரித்திரம் . அந்த மகத்தான வரிசையில் மணிமகுடமாய் ஜொலிப்பவர் தான் விடுதலைப் போராட்ட வீரர் ஜீவானந்தம் அவர்கள். கைகளும் கால்களும் இரும்பு சங்கிலியால் பூட்டப்பட்டு கோவையின் நடுவீதிகளில் மதயானையை அழைத்துச் செல்வது போல் அழைத்துச் செல்லப்பட்ட போதும் கலங்காமல் நெஞ்சுறத்தோடு ஒரு சிங்கம் போன்று சிலிர்த்து வீரநடை போட்டவர் தோழர் ஜீவானந்தம் அவர்கள். எத்தனை வழக்குகள், எத்தனை சிறைச்சாலைகள் அத்தனைக்கும் அஞ்சாமல் விடுதலை வேள்வியில் தீவிரமாக இருந்தவர்.

தோழர் ஜீவானந்தம் அவர்கள் சகல துறைகளிலும் தேர்ச்சி அடைந்த ஒரு கம்யூனிஸ்ட். தொழிலாளர்களின் கோரிக்கைகளையும், உரிமைகளையும் வலியுறுத்தி அவர் தன்னுடைய உரையை சட்டமன்றத்தில் பேசுகிறபோது சட்டமன்ற சுவர்களும் கிடுகிடுத்து ஆடுமாம். அங்கு அவர் அவ்விதம் கர்ஜிக்கும் போது செங்கொடியை உயர்த்தி பிடித்து தொழிலாளி வர்க்கம் முழுவதும் ஒன்று திரளுமேயானால் ஒரு புதிய உலகத்தை எல்லாருக்கும் வேலை, உணவு,அடிப்படை சம்பளம், வயோதி கால பென்ஷன், பிரசவகால நிதி, வேலை நேரம் முதலியவற்றை பெறக்கூடிய ஒரு புதிய உலகத்தை நிர்மாணிப்பதில் அவர் முழுக்க முழுக்க உதவி செய்வார் என, தொழிற்சங்க தலைவர் ஏ.எஸ்.கே. அவர்கள் தனது முகவுரையில் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார்.

தேசப்பிதா காந்தியடிகளை சந்திப்பதற்கு எத்தனையோ பேர் அன்றைக்கு தவம் இருந்த காலத்தில்.காந்தியடிகள் சந்திக்க விரும்பிய ஒரு இளைஞன் தான் ஜீவா. தன் காதலி எழுதிய கடிதத்தை ரகசியமாக படிப்பதை போல், ஜீவா எழுதிய கடிதத்தை அன்று அடிக்கடி எடுத்து படித்துக் கொண்டிருந்தாராம் காந்தியடிகள். அந்த கடிதம் காந்தியை பாராட்டியோ, புகழ்ந்தோ எழுதப்பட்டது அல்ல. மாறாக,அவரது சனாதன கொள்கைகளை கடுமையாக சாடி எழுதப்பட்ட கடிதம் அது.

தன்னைக் கடுமையாக விமர்சித்து எழுதிய வரை சந்திக்க தான் காந்தி அவ்வளவு விருப்பத்தோடு வந்தாராம். அவரை சந்தித்த பின் காந்தியடிகள் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து உதிர்த்த வார்த்தைகள் தான் ''ஜீவா நீதான் இந்த நாட்டின் சொத்து'' என்ற வாசகங்கள். நாட்டின் சொத்தை எல்லாம் தங்கள் சொத்து என வரித்துக் கொள்ளும் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் தேசத்தின் சொத்தாகவே இறுதி வரை வாழ்ந்தவர் ஜீவா. ஆம், குடிசை வீட்டில் பிறந்து குடிசை வீட்டிலேயே மறைந்தார்.

அவரது வாழ்க்கை சரிதம்தான் இன் நூல். இந்நூலை அனைவரும் வாங்கி படித்து ஜீவா வழியில் செல்வார்களேயானால் நாடு நலம்பெறும். அனைவரும் இந்நூலை வாங்கி படிக்கவும்.

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | இஸ்மத்பாட்சா |
| பக்கம் | : | 64 விலை: ரூ. 70 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 98 |

## ஆணவம்




ஒரு மனிதனின் மிகப்பெரிய எதிரி ஆணவம்., ஆணவம் தலைக்கு ஏறினால் நமக்கு முன்னால் இருக்கும் அனைத்தும் துச்சமாகவே தெரியும். பின்னர் அதுவே, ஒருவனை வீழ்ச்சிக்கு அழைத்துச் செல்லும். இந்த ஆணவம் என்கிற தீமை குறித்து முனைவர் இறையன்பு அவர்கள் எழுதிய நூலிலே இது. பெருமை, கர்வம், செறுக்கு, ஆணவம் ஆகிய அனைத்தையும் நாம் ஒரே பொருளில் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி பொருள்கள் உண்டு. ஒரு குறிப்பிட்ட செயலை செய்து முடிக்கும் போது ஏற்படும் பெருமிதமே 'பெருமை' 'கர்வம்' என்பது தன் திறமையால் விளைகிற மிடுக்கு ஆகும்.

ஆணவம் என்பது எப்போதும் உடன் இருப்பது, எந்த நிலையிலும் மாறுவதில்லை, மற்றவர்களை தூசி மாதிரி நினைப்பது ஆணவத்தின் இயல்பு. மனம் கந்தையாகிற போது அகந்தை ஏற்படும்.

பெருமையில் சாதனை இருக்கிறது. கர்வத்தில் அடைந்த முன்னேற்றம் இருக்கிறது. செறுக்கில் கூட ஏதேனும் ஒரு வகையில் பீற்றிக் கொள்ளலாம் காரணம் இருக்கிறது. ஆனால் எந்த திறமையோ, அழகோ, அறிவோ இல்லாமல் சிலர் திமிருடன் இருப்பார்கள். அவர்கள் மற்றவர்களை பார்க்கிற பார்வையே ஊடுருவதைப் போல் இருக்கும். மற்றவர்களை மா க்களை போல் நடத்துவார்கள். அடுத்தவர் மனதை புண்படுத்துவதைப் பற்றி வருத்தப்பட மாட்டார்கள். ஆணவக்காரர்கள் எல்லா நேரத்திலும் அகங்காரத்துடன் நடந்து கொள்வார்கள். வீழ்ச்சி அடைந்தபோது கூட திருந்தாமல் இருப்பார்கள், வருந்தாமல் நடப்பார்கள். ஆணவக்காரர்களை வேறு யாரும் அழிக்க வேண்டியதில்லை.அவர்களே, அடுக்கடுக்கான தங்கள் செயல்களால் அழிந்து விடுவார்கள். ஒரு தவறை சரி செய்யாமல் மேலும், மேலும் தவறுகள் செய்வார்கள். தங்கள் தவறுகளை நியாயப்படுத்துவார்கள். ஒரு கட்டத்தில் அந்த தவறுகளின் கனத்தால் அவர்கள் இருத்தலே தலைகீழாகிவிடும். எனவே அகந்தையை ஒழித்து வாழ்கிற வாழ்க்கையே இன்பகரமானது.


ஆணவத்தை ஒழித்து வாழ்வதே சிறப்பு என்கிற கருத்தை இந்த நூல் வலியுறுத்துகிறது. எனவே இந் நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | வெ. இறையன்பு |
| பக்கம் | : | 28 விலை: 50 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை– 98 |

சுழலும் உலகம்

## பிரேசில் அதிபர் தேர்தல்:
# இடதுசாரி தலைவர் லூலா ட சில்வா வெற்றி!



பிரேசில்நாட்டு அதிபர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இடதுசாரி தலைவரும் முன்னாள் அதிபருமான லூலா ட சில்வா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

2002 முதல் 2010 வரை அதிபராகப் பொறுப்பு வகித்த லூலா ட சில்வாவுக்கு இந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 6 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். வாக்கு சதவிகிதம் 50.9 ஆகும். 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் லூலா ட சில்வா பெற்ற வாக்குகளைக் காட்டிலும் இந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவருக்கு கிடைத்துள்ள வாக்குகள் அதிகம் ஆகும். பிரேசில் நாட்டின் தேர்தல் வரலாற்றில் இதுவரையில் இவ்வளவு அதிகமான வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெற்றதில்லை என்று தகவல்கள் தெரிவித்துள்ள நிலையில், இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்றும் கருதப்படுகிறது.

இவரை எதிர்த்து போட்டியிட்ட வலதுசாரி வேட்பாளரும், தற்போதைய அதிபருமான போல்சோனரோ 49.1% வாக்குகளைப் பெற்றுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் தருணத்திற்கு முன்பாகவே, லூலா ட சில்வாவின் ஆதரவாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வெற்றிக் கொண்டாட்ட மனநிலையோடு வீதிகளில் திரண்டனர். அதிகரித்து வரும் ஏழ்மை, பணவீக்கம் மற்றும் குறைந்து வரும் வளர்ச்சி என்று சிக்கித் தவிக்கும் பிரேசில் நாட்டிற்கு இந்தத் தேர்தல் முடிவு ஒரு மகத்தான நம்பிக்கை ஒளிக்கீற்றாக அமைந்திருப்பதாகக் கண்ணீர் ததும்ப கொண்டாடும் பிரேசில் மக்களையும் காண முடிகிறது.

30.10.2022 அன்று மாலை தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய லூலா ட சில்வா, பிரேசில் குடிமக்கள் அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். அவர் மேலும் கூறியதாவது:

எனக்கு வாக்களித்த, எனக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளருக்கும் வாக்களித்த, தங்களின் கடமையை நிறைவேற்றிய உறுதிப்பாடுமிக்க குடிமக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையே, தோல்வியுற்ற வலதுசாரி வேட்பாளரும், தற்போதைய அதிபருமான போல்சோனரோவின் ஆதரவாளர்கள் பிரேசில் நாட்டின் சில பகுதிகளில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் இரு மாநிலங்களில் நெடுஞ்சாலைகளை மறித்துள்ளது போன்ற காணொளிகள் சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

**ஆதாரம்: சி.என்.என்.வலைதளம்**

# ஐ.நா.பொதுச் சபையில் முதலாளித்துவத்தின் கொடூரே முகத்தை அம்பலப்படுத்திய கியூபா!

அண்மையில் நடைபெற்ற ஐ.நா பொதுச் சபையின் 77வது கூட்டத்தில் கியூப அயலுறவு துறை அமைச்சர் உரையாற்றினார். அவர்தம் சிறப்புரையை ஊடகத்துறையின் பெருநிறுவனங்கள் இருட்டடிப்பு செய்யவே முனைப்புடன் பணியாற்றின.

கடந்த மூன்றாண்டுகளில், முதல் முறையாக நடைபெற்ற உலக தலைவர்களின் உயர்மட்ட கூட்டத்தில் பேசிய கியூபாவின் அயலுறவு துறை அமைச்சர் புரூனோ ரோட்ரிக்ஸ், கோவிட்19 பெருந்தொற்று, தற்போதைய சர்வதேச சமூக அமைப்பின் நியாயமற்ற மற்றும் மக்கள் விரோத தன்மையை அம்பலப்படுத்தி உள்ளது என்று பகிரங்கமாகப் பதிவு செய்தார்.

தற்போது உள்ளதைப் போன்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளங்களை மனிதகுலம் இதுநாள் வரையில் பெற்றிருந்ததில்லை. செல்வங்களை உருவாக்கவும், மக்கள் நலனைப் பாதுகாப்பதற்குமான அசாதாரணமான ஆற்றலை மனிதகுலம் இதுநாள் வரையில் கொண்டிருந்ததில்லை என்று கூறிய அவர், மக்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதையும், உலகில் ஏற்றத்தாழ்வு அதிகரித்திருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

828 மில்லியன் (1 மில்லியன் ரூ 10 இலட்சம்) மக்கள் பட்டினியில் வாடுகிறார்கள். 50 மில்லியன் குழந்தைகளின் வளர்ச்சி தடைபட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் வேலையின்மை காரணமாக, 207 மில்லியன் நபர்கள் பாதிக்கப்படுவார்கள். இலட்சக்கணக்கான கோடிகள் இராணுவத்திற்காகச் செலவழிக்கப்படுகிறது. ஆனால், தடுப்பூசி மருந்துகளின் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

கோவிட்19 பெருந்தொற்று காரணமாக 6.5 மில்லியன் மக்கள் இறந்துவிட்டனர். குறைந்த வருவாய்ப் பிரிவில் உள்ள நாடுகளில், கோடிக்கணக்கான மக்களுக்கு கோவிட் பெருந்தொற்று நெருக்கடியை எதிர்கொள்வதற்கான தடுப்பூசி மருந்துகள் கிடைக்கவில்லை.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் உலகம் முழுவதும் நடைமுறைக்கு வரவேண்டும் என்று பாடுபட்டு வரும் வேளையில், உலக அளவில் இராணுவ செலவினங்கள் முதல் முறையாக 2 ட்ரில்லியன் (1 ட்ரில்லியன் ரூ 1 இலட்சம் கோடி) அமெரிக்க டாலரையும் மிஞ்சிவிட்டது. இது போன்ற பெருந்தொகை சுகாதாரம் மற்றும் மேம்பாட்டிற்காகச் செலவிடப்பட்டிருந்தால் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வு காப்பாற்றப்பட்டு இருக்கும்.

பருவகால மாற்றம் நெருக்கடி பற்றிக் குறிப்பிட்ட அவர், ஏழை, பணக்காரன் என்று அனைவருக்குமான ஒற்றை இல்லமாக இப்பூமண்டலம் திகழ்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

சர்வதேசிய நிகழ்வுப் போக்குகள் ஆபத்தான பாதையில் நகர்ந்து வருவதாகக் கூறிய அவர், அமெரிக்காவின் கொடூரமான இராணுவ, பொருளாதார, அரசியல் தலையீடுகளை இகழ்ந்துரைத்தார். கியூபாவிற்கு எதிரான தடைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று 30 ஆண்டுகளுக்கு முன், ஐ.நா பொதுச் சபை முதல் முறையாகத்

தீர்மானம் நிறைவேற்றியதை அவர் நினைவு கூர்ந்தார். சமாதானத்தைக் கோரும் காலச் சூழலில், கியூபாவிற்கு எதிரான பொருளாதாரப் போரை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாக அவர் குற்றஞ் சாட்டினார்.

பயங்கரவாதத்தை ஆதரித்துப் பரப்பும் நாடாக கியூபாவை வகைப்படுத்தியுள்ள அமெரிக்காவின் இரட்டை வேடம் மற்றும் சீரற்ற நிலைப்பாடு ஆகியவற்றை அவர் கண்டித்துள்ளார்.

கோவிட்19 பெருந்தொற்று காலத்தில், 48 நாடுகளுக்கு 58 மருத்துவ குழுக்களை கியூபா அனுப்பி வைத்ததை அவர் ஐ.நா பொதுச் சபையில் பெருமிதத்துடன் பகிர்ந்து கொண்டார்.

வெனிசுலா மற்றும் நிகாரகுவா நாட்டு அரசாங்கங்களுக்கு ஆதரவு, காலனி ஆதிக்க எதிர்ப்பு, பியோர்டோ ரிக்கோவின் விடுதலை மற்றும் ஹெய்தியின் புனர்நிர்மாணம் ஆகியவை குறித்த கியூபாவின் ஆதரவு மற்றும் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

கொலம்பியாவில் அமைதி திரும்ப வேண்டும்; சிரியாவில் அந்நிய தலையீடுகளுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்; மத்திய கிழக்குப் பகுதியில் நீடித்து வரும் மோதலுக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டும்; பாலஸ்தீனக் பிரதேசத்தில் உள்ள இஸ்ரேல் ஆக்கிரமிப்புகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

உக்ரைனில் நிலவி வரும் போர் சூழல் குறித்து பேசிய அவர், போருக்கான எதார்த்தமான தீர்வு என்பது அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

உலகின் மீது ஒற்றைப் பண்பாடு மற்றும் வளர்ச்சிக்கான மாதிரியைத் திணிக்கும் முயற்சிகள், மேலாதிக்கம், எதேச்சதிகார போக்கு ஆகியவற்றுக்கு எதிராக கியூபா தொடர்ந்து உரத்த குரலில் முழக்கமிட்டுப் போராடும் என்று கூறி தனது உரையை கியூப அயலுறவு துறை அமைச்சர் நிறைவு செய்தார்.

# கோவை சம்பவம் மத்திய உளவுத்துறை செயலிழந்து விட்டது என்பதையே காட்டுகிறது

## கே.சுப்பராயன் எம்.பி. பேட்டி



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவரும், திருப்பூர் மக்களவை உறுப்பினருமான கே.சுப்பராயன் கோவை வந்திருந்தார். அப்போது அவர் செய்தியாளர்களைச் சந்தித்து பேசும்போது, கோவை சம்பவம் மத்திய உளவுத்துறை செயல் இழந்து விட்டது என்பதை காட்டுகிறது. என்றும், இந்த நிமிடம் வரை அமைதியாக செயல்பட்டுக் கொண்டிருக்க கூடிய கோவையில் கலவர சூழ்நிலையை ஏற்படுத்த இந்தித்துவ அமைப்புகள் முயற்சிக்கின்றன என்றும் குற்றம் சாட்டினார்.

கோவை குடிநீர் விநியோகத்தை சூயஸ் பன்னாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டம், அதற்காக அரசியல் பழி வாங்கும் நோக்கத்திற்காக போடப்பட்ட வழக்கு அவ்வழக்கிற்காக கோவை வந்துள்ளேன். கோவையை பொறுத்தவரையில் மிகவும் துரதிஷ்டவசமான ஒரு சம்பவம் கடந்த 23 ம் தேதி நடைபெற்றுள்ளது. காரில் இருந்த சிலிண்டர் வெடிக்கப்பட்ட நிலையில் விபத்து நடைபெற்றது. அதை ஒட்டி தமிழ்நாடு காவல்துறை தீவிரமாக நடவடிக்கை எடுத்து வந்தது, அது சம்பந்தமாக சந்தேகத்தின் அடிப்படையில் சிலர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

முழுமையான விசாரணை நடைபெற வேண்டும், குற்றவாளிகள் தப்பித்து விடாமல் தண்டிக்கப்பட வேண்டும். எக்காரணத்தை கொண்டும் நிரபராதிகள் இந்த வழக்கில் இணைக்கப்பட்டு விடக்கூடாது என்றும், யார் குற்றம் புரிந்தார்களோ? யார் குற்றம் புரிய துணையாக இருந்தார்களோ அவர்களை விருப்பு வெறுப்பு இல்லாமல் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்களது நிலை. ஒருவருக்கு இஸ்லாமிய பெயர் வைத்து இருப்பதாலேயே அவர்கள் குற்றவாளிகளாக பார்க்கின்ற பார்வை தவறானது, அப்படிப்பட்ட கருத்தோட்டத்தை பிஜேபி சங்பரிவார் அமைப்புகள் திட்டமிட்டு இட்டுக்கட்டி புனைந்து வருகிறது.

அத்தகைய சதி வலைகளில் காவல்துறை விழுந்து விடக்கூடாது என்றும், எச்சரிக்கையோடு இந்த வழக்கை அணுக வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

இதே போல மல்லேகானிலும் ஒரு சம்பவம் நடைபெற்றது, ஆங்கே இந்துத்துவ தீவிரவாதி ஈடுபட்டார் என்பது கண்டறியப்பட்டது. அதில் ஒருவர் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார். அவர்கள் எந்த அளவிற்கு தண்டிக்கப்பட்டார்கள் என்பதை நாடறியும், அது போலவே ஆக்ராவும் உள்ளது.

எனவே, குற்றம் புரிகிற குற்றவாளிகள் எல்லா சமூகத்திலும், சாதிகளிலும் இருக்கிறார்கள். ஆனால், குற்றவாளிகள் கண்டறியப்படும் போது அந்த சமூகத்தை குற்ற கண்ணோட்டத்தோடு அணுகும் அணுகுமுறை தவறானது, ஆபத்தானது.

எனவே, சட்டத்தின் சாரம் குற்றவாளிகள் தப்பித்தாலும், நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதாகும். அந்த அடிப்படையில் இந்த வழக்கை அணுக வேண்டும்.

இந்தியாவில் தீவிரவாத தன்மை என்பது இந்துத்துவ தீவிரவாதிகளிடமும் இருக்கிறது. இஸ்லாமிய பகுதிகளில் இருந்தும் சில சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதற்கான காரணிகள் என்ன என்பதை கண்டறிந்து அதற்கு விடை காண வேண்டும். கோயம்புத்தூர் ஒரு சென்சிட்டிவ் சென்டர் என்ற முறையில் கோவை மத்திய புலனாய்வுத் துறை கண்காணிப்பில் இருக்கிறது. ஆனாலும் கூட மத்திய புலனாய்வுத் துறை ஏன் இதை கண்டறியவில்லை. மத்திய உளவுத்துறைகள் செயல் இழந்து விட்டன என்பதை தான் இந்த சம்பவம் காட்டுகிறது.

அண்ணாமலை ஒரு பொருட்டாக பதில் அளிக்கக் கூடிய அரசியல்வாதி அல்ல. முப்பத்தி ஒன்றாம் தேதி பிஜேபி கடை அடைப்பு நடத்த விடுத்துள்ள அழைப்பை நானும் பார்த்தேன்.

இந்த நிமிடம் வரை அமைதியாக நடந்து கொண்டிருக்கின்ற கோயம்புத்தூரில், ஒரு கலவர சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு தான், இந்துத்துவ அமைப்புகள் இந்த கடையடைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.

கெஜ்ரிவால் கருத்து மிகவும் வருந்தத்தக்கது. வேதனை அளிக்கிறது. அவர் இந்துத்துவ என்ற கருத்தை முன்வைத்து பிஜேபி இந்துக்களை ஐக்கிய படுத்தி அதில் வெற்றியும் பெற்றிப்பதைப் போல அதே வழி முறையையும் பின்பற்றலாம் என்று நோக்கத்தோடு இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஒரு மதசார்பற்ற அரசியல் சட்டத்தை கொண்டு இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட மத கடவுளை ரூபாய் நோட்டில் போட வேண்டும் என்பது மடத்தனம்.

இது ஏற்கத்தக்கது அல்ல. அதேபோல காங்கிரசும் எல்லா மத வணக்கத்திற்கு உரியவர்களையும் போட வேண்டும் என்றும் சொல்வதும் ஏற்கத்தக்கதல்ல.

இந்தியா அடிப்படையில் மத சார்பற்ற நாடு, சாம்பாரில் உப்பு கரைந்து இருப்பதைப் போல இந்திய அரசியல் சாசனத்தின் ஒவ்வொரு வரியிலும் மதசார்பற்ற இந்தியா என்பது கரைந்து நிற்கிறது. எனவே, மத சார்பற்ற தன்மைக்கு எதிரான காங்கிரஸ் கெஜ்ரிவால் கருத்துக்களை நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் கே.சுப்பராயன் எம்.பி. கூறினார்.

பேட்டியின் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் எம். குணசேகர், முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம், மு.வ. கல்யாணசுந்தரம் வி.ஆர். பாண்டியன், மேற்கு மண்டல செயலாளர் என். சந்திரன், மத்திய மண்டல செயலாளர் கே. ரவீந்திரன், ஏ.அஷ்ரப் அலி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலைக்கு
# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் 115 வது பிறந்தநாள் விழா மற்றும் 60 வது குருபூஜை விழாவை முன்னிட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யானைமலை ஒத்தக்கடை நகர் குழு தோழர்களுடன் மதுரை, ஒத்தக்கடையில் அமைந்துள்ள தேவர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில், ஒத்தக்கடை நகர் குழு செயலாளர் கார்த்திக், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் புறநகர் மாவட்டச் செயலாளர் க்ரிஷ் பாக்கியம், மாவட்ட குழு உறுப்பினர் ரவிவர்மா, மாதர் சங்கத்தின் புறநகர் மாவட்ட பொறுப்பு செயலாளர் நாகஜோதி, நகர் குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், ஈஸ்வரன், கே.ராஜேந்திரன், முருகேசன், சுரேஷ், ஏ.ஐ.ஒய்.எஃப் உறுப்பினர்கள் அஜித்குமார், ரவிக்குமார், பாண்டியராஜன் மற்றும் மணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மார்ஷல் நேசமணி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

குமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைய போராடிய தியாகிகளை நினைவுகூரும் வகையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் குமரி மாவட்ட குழு சார்பில் அண்ணா பேருந்து நிலையத்தின் முன் உள்ள மார்ஷல் நேசமணி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார். நேசமணி சிலைக்கு மாவட்ட குழு உறுப்பினர் வி.அருணாசலம், தகஇபெ மாவட்ட துணைத் தலைவர் ஆரல் பகவதி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, பொருளாளர் கே.நாகராஜன், தகஇபெ மாநில துணைத் தலைவர் தாமரை நடராஜன், இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட அமைப்பாளர் ஆர்.செல்வராணி, ஆரல் சுப்பிரமணியம், ஆரல் செல்வராஜ், அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம், சிங், தகஇபெ சொக்கலிங்கம் ஏஐடியூசி மாவட்டச்செயலாளர் ராஜூ, மரியதாஸ் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



### ஜனசக்திக்கு கட்டுரைகள், செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு...

கட்டுரைகள் மிகச் சுருக்கமாக ஏ 4 சைஸ் பேப்பரில் ஒன்றரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

பெரும்பாலும் தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

மறைந்த தலைவர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் வரலாற்றுக் கட்டுரைகள் ஜனசக்தி பத்திரிகையில் அரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

கட்டுரைகள் மற்றும் செய்திகள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைக்குள் ஜனசக்திக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

செய்திகள் அனுப்புவோர் பெயருக்கு முன்னால் இருக்கும் முன்னெழுத்தை (இனிசியலை) தமிழிலேயே எழுத வேண்டும்.

janasakthieditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு மட்டுமே கட்டுரைகள், செய்திகள் அனுப்ப வேண்டும். வாட்ஸ் அப்பில் அனுப்பக் கூடாது.

– ஆசிரியர் குழு

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 05.11.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## இந்தி திணிப்பை எதிர்த்து

# இளைஞர், மாணவர் பெருமன்றத்தினர் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

மத்திய அரசு ஐ.ஐ.எம், ஐ.ஐ.டி, எய்ம்ஸ் மற்றும் மத்திய கல்வி நிறுவனங்களில் இந்தி மொழி கட்டாயமாக்கப்படும் என்ற அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தியும், ஒரே தேர்வு, ஒரே நாடு, ஒரே உணவு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே தேர்தல் என அறிவித்து இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைக்கும் ஒன்றிய பாசிச பாஜக அரசின் சர்வதிகார போக்கைக் கண்டித்தும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் கடந்த 27.10.2022 பல்வேறு மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

திருவாரூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் துரை. அருள்ராஜன் தலைமை தாங்கினார். இதில் மாவட்டத் தலைவர் சு.பாலசுப்ரமணியன், மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் ஜெ.பி.வீரபாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சேலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.ரமேஷ் தலைமை தாங்கினார். இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, மாவட்டத் தலைவர் கே.பி.வி.ராஜேஷ், மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் பா.நேதாஜி, பிரவீன் ஆகியோர் உரையாற்றினர்.

செங்கல்பட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் எம்.பார்த்தீபன் தலைமை தாங்கினார். மாநில துணைத் தலைவர் மோ.வெங்கடேசன், மாவட்டத் தலைவர் சேகுவேரா தாஸ் கண்டனவுரையாற்றினர்.

தேனியில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.தமிழ் பெருமாள், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் செ.ஆனந்த் ஆகியோர் தலைமையில்



கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற மாவட்ட துணைச் செயலாளர் சு.சரவணபுதியவன், மாணவர் பெருமன்ற மாவட்ட துணைச் செயலாளர் மூ.ஹரிஹரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விருதுநகரில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாமக்கல்லில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மோகன் தலைமை தாங்கினார். இளைஞர் பெருமன்ற மாவட்டத் தலைவர் கே.கணேஷ்குமார், மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் த.இளையராஜா கண்டனவுரையாற்றினார்.

திருப்பூர் மாநகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாவட்ட அமைப்பாளர் அரவிந்த் ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாநிலக்குழு உறுப்பினர் நரேந்திரன் கண்டனவுரையாற்றினார்.

திருப்பூர் புறநகரில் முன்னாள் கவுன்சிலர் பி.பொன்னுசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் இளைஞர் பெருமன்ற மாவட்ட அமைப்பாளர் பிரபு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

ஈரோடு வடக்கு மாவட்டம் பவானியில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.சுரேஷ்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் சர்தார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி மாநகரில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம்.செல்வகுமார், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் க.இப்ராஹிம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் ஜி.ஆர். தினேஷ்குமார், மாணவர் மன்ற மாவட்ட தலைவர் பாட்ஷா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

திருச்சி புறநகர் திருவெறும்பூரில் இளைஞர் பெருமன்ற நிர்வாகி தமிழரசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இளம் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் எஸ்.ரம்யா கண்டனவுரையாற்றினார்.

தஞ்சை தெற்கு மாவட்டத்தில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கார்ல் மார்க்ஸ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சை வடக்கு கும்பகோணத்தில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் திவான் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கு.ராஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தேசியக்குழு உறுப்பினர் ஆர்.பவிதாரணி கண்டனவுரையாற்றினார்.

வடசென்னையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் சுரேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில தலைவர் த.கு.வெங்கடேசன், மாவட்டத் தலைவர் கோட்டி. சுரேஷ் ஆகியோர் கண்டனவுரையாற்றினர்.

தென்சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் முஜ்பீர் ரகுமான் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாவட்டத் தலைவர் அ.மணிகண்டன் கண்டன உரையாற்றினார்.

மத்திய சென்னையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எஸ்.ரமேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை புறநகரில் மாவட்டச் செயலாளர் இளைஞர் பெருமன்றம்னீ கே.கிருஷ்பாக்கியம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாவட்டத் தலைவர் விக்ரம் கண்டன உரையாற்றினார்.

இப்போராட்டங்களில் கலந்து கொண்ட இளைஞர்களும், மாணவர்களும் இந்தி திணிப்பிற்கு எதிராகவும். ஒன்றிய அரசின் பாசிச அடக்குமுறைகளுக்கு எதிராகவும் முழக்கங்கள் எழுப்பினர்.

தென்காசி மாவட்டத்தில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் டி.இசக்கிதுரை தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க.வை வீழ்த்துவதே பிரதான நோக்கம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா புதுடெல்லியில் செய்தி ஊடகங்களுக்கு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாடு ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் அக்டோபர் 14 முதல் 18 வரை நடைபெற்றது. தற்போதைய அரசியல் சூழலைக் கட்சிக் காங்கிரஸ் ஆய்வு செய்தது; எதிர் வரும் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அரசியல் நடவடிக்கைகளை முடிவு செய்தது.

### ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க அணியை முறியடிப்போம்

மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் தேசத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க அணி அச்சுறுத்தலை உண்டாக்கி வருகிறது.

தேசத்தை மிக மோசமான நெருக்கடியில் ஆழ்த்தி வரும் பேரழிவுகரமான கொள்கைகளை நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

தேசத்தின் பொருளாதாரம் சீர்குலைந்து வருகிறது. தேசத்தின் மாண்பையே சிதைக்கும் அளவிற்கு இந்திய நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

உலக பசி குறியீட்டில், தேசம் மிகவும் கீழ் நிலையில் இருப்பது வெட்கக்கேடானது.



பொருள்களின் விலையும், பணவீக்கமும் அதிகரித்துள்ளன. கார்ப்பரேட் நிறுவனங்கள் தேசத்தின் சொத்துகளையும், செல்வ வளங்களையும் கொள்ளையடிக்க அனுமதிக்கப்படுகின்றன. அரசாங்கம் பொதுத்துறை நிறுவனங்களை முடக்கி, அவற்றைத் தனியார்மயமாக்கிடத் துடிக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியான, மதச்சார்பின்மை, கூட்டாட்சி மற்றும் மக்கள்நல அரசு உள்ளிட்ட இந்திய அரசின் கூறுகளையும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையான கோட்பாடுகளையும் தகர்த்தெறிய ஆர்.எஸ். எஸ் – பா.ஜ.க அணி முயன்று வருகிறது.

தலித்துகள், பழங்குடி மக்கள் மற்றும் சிறுபான்மையோர் மீதான அட்டூழியங்கள் அதிகரித்து வருகின்றன. குடிமக்களின் அரசியல் அமைப்புச் சட்ட ரீதியான, ஜனநாயக ரீதியான உரிமைகள் நசுக்கப்படுகின்றன. நாடு தற்போது கார்ப்பரேட் வகுப்புவாத பாசிசத்தை எதிர்கொண்டு வருகிறது.

மக்களைப் பேரழிவில் இருந்து பாதுகாத்திட, ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க அணியை வீழ்த்துவதே பிரதான நோக்கமாக இருக்க வேண்டும் என்று தற்போதைய சூழல் கோருகிறது. எனவே, 2024 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில், பா.ஜ.க மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை வீழ்த்திட இடதுசாரி, மதச்சார்பற்ற, ஜனநாயக, பிராந்திய கட்சிகள் மற்றும் சமூக இயக்கங்கள் ஓரணியாகத் திரள வேண்டும் என்று கட்சிக் காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள அரசியல் தீர்மானம் அறைகூவல் விடுக்கிறது.

நாட்டு மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்திட, அடிப்படையான வாழ்வாதாரப் பிரச்சனைகளான உணவு, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வீட்டுவசதி மற்றும் நிலம் ஆகியவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்துவோம்

மார்க்சிய லெனினியத்தை இந்தியச் சூழலுக்கு நடைமுறைப்படுத்தும் போது, வர்க்க ரீதியிலான சுரண்டல், சாதியம் மற்றும் ஆணாதிக்கம் ஆகியவற்றை ஒழித்திட, கட்சி அதன் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும்.

கட்சியின் நூற்றாண்டு 2025 ஆம் ஆண்டு கொண்டாடப்பட இருக்கிறது. உறுப்பினர் எண்ணிக்கை 10 இலட்சமாக அதிகரிக்க வேண்டும். நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் மற்றும் நாடு முழுவதிலும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் கட்சியின் பலம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்க வேண்டும்.

### கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி ஒற்றுமையைப் பலப்படுத்துவோம்

இடதுசாரி ஒற்றுமையைப் பலப்படுத்திட அனைத்து இடதுசாரி கட்சிகளுக்கும் கட்சிக் காங்கிரஸ் அறைகூவல் விடுத்துள்ளது. கார்ப்பரேட் வகுப்புவாத பாசிச சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றுமை மிகவும் முக்கியமானது ஆகும். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் 'கொள்கை அடிப்படையிலான ஒற்றுமை' என்ற அதன் நிலைப்பாட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு மீண்டும் வலியுறுத்துகிறது.

இவ்வாறு கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.